உரைவேந்தர் ஔவை துரைசாமி

பேராசிரியர் நிர்மலா மோகன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உரைவேந்தர் ஔவை துரைசாமி

பேராசிரியர் நிர்மலா மோகன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்,

தரமணி, சென்னை - 600 113.

உரைவேந்தர் ஔவை துரைசாமி அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளைப் புரவலர்: திருமதி.வைதேகி எர்பார்ட்டு
(அமெரிக்கா)

நூல்விவரக் குறிப்பு

நூல் தலைப்பு	:	**உரைவேந்தர் ஔவை துரைசாமி**
ஆசிரியர்	:	**பேராசிரியர் நிர்மலா மோகன்** தகைசால் பேராசிரியர் (ப.நி) தமிழ்த்துறை காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகம் காந்திகிராமம், திண்டுக்கல்
பதிப்பாசிரியர்	:	முனைவர் கோ.விசயராகவன் இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 600 113.
வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை 600 113. தொலைபேசி எண் 044/22542992
வெளியீட்டு எண்	:	978
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	2018
பயன்படுத்திய தாள்	:	18.6கிகி டி.என்.பி.எல் வெள்ளைத்தாள்
நூலின் அளவு	:	1/8 டெம்மி
எழுத்தின் அளவு	:	11 புள்ளி
பக்க எண்ணிக்கை	:	145
அச்சுப்படிகளின் எண்ணிக்கை	:	1200
விலை	:	ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்)
அச்சகம்	:	நவநீதம் அச்சகம் சென்னை
பொருள்	:	இலக்கியம்

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துக்களுக்கு
நிறுவனம் பொறுப்பன்று

முனைவர் கோ.விசயராகவன் எம்.ஏ., எம்.ஃபில், எம்.எட்., பிஎச்.டி.,
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 013.

அணிந்துரை

'உரைவேந்தர் ஔவை துரைசாமி' என்னும் தலைப்பில் அமைந்த இந்நூல் எட்டு இயல்களால் உருவாக்கப் பெற்றுள்ளது. பேராசிரியர் நிர்மலா மோகன் இந்நூலில் தமிழ்கூறு நல்லுலகில் 'உரை வேந்தர்' எனச் சிறப்பிக்கப் பெறும் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை தம் உரைகளில் பின்பற்றியுள்ள நெறிகளையும், அவரது உரைகளில் பொதிந்துள்ள பல்வேறு நயங்களையும் அழகுற வெளிப்படுத்தியுள்ளார்.

அறிமுக இயலில் உரைவேந்தர் ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்களின் வாழ்வும் பணியும் சுருக்கமாகக் கோடிட்டுக் காட்டப் பெற்றுள்ளன. உரைவேந்தருடன் 'ஔவை' என்னும் பெயர் இணைந்த வரலாறும் அவரது இல்லற மாண்பும் இவ்வியலில் இனிதே விளக்கப் பெற்றுள்ளன. 'அதியன் இன்று இருந்திருந்தால், புதியதொரு ஆண் ஔவை என வியப்பான்' எனக் கவிஞர் **மீரா** உரை வேந்தரைக் குறித்து எழுதி இருக்கும் வைர வரிகளைப் பேராசிரியர் நிர்மலா மோகன் எடுத்துக்காட்டி இருப்பது அருமையிலும் அருமை!

உரைவேந்தர் ஔவை துரைசாமிப் பிள்ளை எழுதிய நூல்கள் 34 எனப் பட்டியல் இடும் பேராசிரியர் நிர்மலா மோகன், அவற்றுள் 12 நூல்கள் உரை விளக்கங்களாக அமைந்திருப்பதை இரண்டாம் இயலில் சுட்டிக்காட்டி யுள்ளார்; உரைவேந்தர் உரை கூறும் முறையினை பாடல் ஆசிரியர், பாடல் அமைந்த சூழல், பாடல், உரை, விளக்கம் என நான்கு பகுதிகளாகப் பகுத்துக் கொண்டு, அவரது புறநானூற்று உரையின் துணைகொண்டு இவ்வியலின் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்: 'நூலாசிரியரின் கருத்தை வெளிப்படுத்துவதே உரையின் ஒழுக்கம்' என்னும் மூதறிஞர் **வ.சுப.மாணிக்கனாரின்** கருத்தினை மேற்கோள் காட்டி,

அதனை உரைவேந்தர் தம் புறநானூற்று உரையில் செவ்வனே பின்பற்றியுள்ள பாங்கினையும் தக்க சான்றுகள் காட்டி நிறுவியுள்ளார்; உரைவேந்தரின் தனிச்சிறப்புக்களுள் ஒன்று கல்வெட்டுச் சான்றுகளைத் தக்க முறையில் பயன் படுத்திக் கொள்வது என்பதனையும் பதிவு செய்துள்ளார். இவ்வாறே ஐங்குறுநூறு, நற்றிணை, பதிற்றுப்பத்து ஆகிய சங்கத் தொகை நூல்களுக்கும் மணிமேகலைக் காப்பியத்திற்கும் திருவருட்பாவுக்கும் உரைவேந்தர் வரைந்துள்ள உரைகளின் மாண்புகளைத் தனித்தனி இயல்களில் தொடர்ந்து நுண்ணிய ஆய்வுக்கு உட்படுத்தி யுள்ளார் பேராசிரியர் நிர்மலா மோகன்.

இந்நூலினைப் பயில்வோர் யாவரது நெஞ்சிலும் 'உரையாசிரியப் பண்பு என்பது ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்களுக்குக் கருவிலே வாய்த்த திரு' என்ற கருத்தே தோன்றும். அந்த அளவிற்கு உரைவேந்தரின் பல்வேறு உரை நூல்களையும் மனம் கலந்து, பொருள் உணர்ந்து, பன்முறை பயின்று இந்நூலினைப் பேராசிரியர் நிர்மலா மோகன் கட்டமைத்துள்ளார்.

உயிர் இனங்களின் இயல்பினைக் குறிப்பிடல், இலக்கணக் குறிப்பு வரைதல், பாட வேறுபாடு சுட்டுதல், அக்காலத்து நிலவிய பழக்க வழக்கங்களையும், நாகரிகம், பண்பாடு, மரபு ஆகியவற்றையும் பதிவு செய்தல், பல்வேறு நயங்களையும் நுட்பங்களையும் எடுத்துக்காட்டல், அருஞ்சொற் பொருள் விளக்கங்கள் தருதல் என்றாற் போல உரைவேந்தர் ஔவை துரைசாமிப் பிள்ளை தம் உரை நூல்களில் பின்பற்றியுள்ள உரைநெறிகளை ஒல்லும் வகையில் எல்லாம் இந்நூலில் பேராசிரியர் நிர்மலா மோகன் நிரந்தினிது விளக்கி இருப்பது பாராட்டத்தக்கது.

தமிழக அரசின் இளங்கோவடிகள் விருதினை நிறுவிய முதல் ஆண்டிலேயே **மாண்புமிகு தமிழ்நாட்டு மேனாள் முதல்வர் அம்மா** அவர்களின் பொற்கரங்களால் பெற்ற பேராசிரியர் நிர்மலா மோகனின் கைவண்ணமும் கடுமையான உழைப்பும் இந்நூலின் பக்கந்தோறும் வெளிப்பட்டிருப்பதைக் கண்டு கழிபேருவகை எய்துகிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமது பெருமைமிகு பாட்டனார் பெயரிலும், தகைசால் தந்தையார் பெயரிலும் அறக்கட்டளைகள் நிறுவுவதற்குத் 'தோன்றிய

துணையாக' இருந்து உற்றுழி உதவிய அன்பு இளவலும் மொழிபெயர்ப்புத் துறை இயக்குநருமான முனைவர் **ந.அருள்** அவர்களுக்கு நன்றிகள் பல.

மாண்புமிகு தமிழ்நாட்டு மேனாள் முதல்வர் அம்மா அவர்கள் தமிழ் மீதும், தமிழர் மீதும், தமிழ்நாட்டின் மீதும், தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டிருந்த அன்பும் கருணையும் அளப்பரியன. தமிழ் வளர்ச்சிக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு ஒல்லும் வகையெல்லாம் தமிழ் வளர்த்து வந்த மேனாள் தமிழ்நாட்டு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் ஆழ்ந்த நன்றிகளைப் பதிவு செய்கின்றேன்.

தமிழ் வளர்ச்சிக்கும் இந்நிறுவன வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.**எடப்பாடி பழனிசாமி** அவர்களுக்கும், அவர்களுக்கு இணையாகத் தமிழை வளர்த்துவரும் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவருமாகிய திரு. **க.பாண்டியராஜன்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சியில் எங்களை வழிநடத்திவரும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு. **இரா.வெங்கடேசன்** இ.ஆ.ப., அவர்களுக்கும் என் இனிய நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இவ் அறக்கட்டளைச் சொற்பொழிவின் எழுத்து வடிவினைக் கணினியாக்கம் செய்த திரு. **பி.கி.இராம்குமார்** அவர்களுக்கும், அகரம் முதல் னகரம் வரை இப்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து உதவிய நிறுவனப் பணியாளர் களுக்கும் எனது நன்றி என்றும் உரியதாகும். இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த அச்சகத்தார்க்கும் என் பாராட்டினை உரித்தாக்குகின்றேன்.

அறப்புரவலர்

திருமதி.வைதேகி எர்பர்ட்டு
அமெரிக்கா

பேரறிஞர் ஔவை துரைசாமி
அறக்கட்டளை சார்பில்

உரைவேந்தர் ஔவை துரைசாமி

முதற் சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீட்டு விழா

திருவள்ளுவராண்டு 2049, மாசி 16 (28.02.2018) முற்பகல் 11.00 மணி
நிகழிடம்: பேரறிஞர் அண்ணா கருத்தரங்குக் கூடம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

வரவேற்புரை
முனைவர் ஆ.மணவழகன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தலைமை
பேராசிரியர் வ.ஜெயதேவன்
சென்னை பல்கலைக்கழகம்

சொற்பொழிவாளர்
பேராசிரியர் திருமதி. நிர்மலா மோகன்
மதுரை

நன்றியுரை
முனைவர் ந.அருள்
இயக்குநர் (மொழிபெயர்ப்பு)

அனைவரும் வருக!

இவருக்கு நிகர் இவரே!

மருத்துவர் ஔவை மெய்கண்டான்
மழலையர் - நரம்பியல் வல்லுநர்

சிரித்த முகமும், சிவந்த தோற்றமும், சிறிதே குறைந்த உயரமும், செழித்த தமிழெழுதும் திறமும் கொண்டு மு.வ.வின் நிழல் வடிவமாக நம் கண்முன்னே தோன்றி **'இரண்டாம் மு.வ'** எனப் பாராட்டப்பெறும் பேராசிரியர் திலகம் திரு.மோகனின் புலமை வளம் நம்மை வியக்க வைக்கின்றது. வாழ்வில் இணையராக அமைந்து வளர் தமிழுக்கு நான்கு கரங்களாலும் நற்பணிகள் ஆற்றி இலக்கிய வடிவங்கள் தமிழில் எவ்வளவு உண்டோ அவ்வளவையும் ஆய்ந்த பயிற்சியில் தித்திப்புச் சுவையோடு, திறனாய்ந்து தெளிந்து தீட்டுகின்ற எழில் பேராசிரியர் மோகன் இணையருக்குப் பெறலரும் பரிசிலாக வாய்த்திருக்கிறது.

அளப்பரிய ஆண்டுகளுக்கு முந்தைய பழம் பாடல் தொடங்கி அன்றாடம் அரும்பும் ஆர்வக் கதை, கவிதை புனையும் இளைய அறிஞர்கள் வரை பேராசிரியர் தன் கைவண்ணத்தால் தோளேற்றி மகிழும் தொண்டின் திறம் எண்ணி எண்ணி நெகிழ்தற்குரியதாகும்.

நூற்றுக்கணக்கான நூல்களை எழுதிக் குவித்த நுழைபுலம் வாய்ந்த நுண்ணறிவுப் புலமையரை என்றோ துணைவேந்தர்களாக இந்தியத் திருநாடு கண்டிருக்க வேண்டிய நிலையில் எவையும் வேண்டாத இருவரது மனமும் என்றும் போற்றுதற்குரியன. உலக விருதுகள் இருவரையும் தேடி வரும் என்பது உறுதி. நல்லவர்களாகிய இவ்விருவரால் நான்மாடக் கூடலின் புகழ் நாளும் உயர்கிறது. அவ்வழி வாழிய நிலனே!

பேராசிரியர் மோகனும் திருமதி நிர்மலா மோகனும் இணைந்து பெற்ற மகுடங்களையும் வரிசைப்படுத்த முயன்றால் 'விரிப்பிற்பெருகும் தொகுப்பின் எஞ்சும்'.

சில வரிகளால் அவர் புகழைக் கூறலாமெனில்,

“மன் புகழ் பெருமை நுங்கள்
மரபினோர் புகழ்கள் எல்லாம்
உன் புகழ் ஆக்கிக்கொண்டாய்
உயர் குணத்து உரவுத் தோளாய்!”

என்றே கூறிப் பேராசிரியர் மோகன் இணையரைப் போற்றலாம்.

திருவாளர் பியாரி கியூரியும், திருமதி.மேரி கியூரி அம்மையாரும் இருமுறை நோபல் பரிசு பெற்ற இணையராவர். இது உலகளாவிய பெருமித விருதாகும். தமிழ் பேசும் மக்களிடையே ஒரு மாமணியாய், உலகிற்கு ஓங்கிய திருமாமணிகளாய்த் திகழும் ஈடில்லாத இவ்விணையர் கியூரி அம்மையார் குடும்பத்தை நினைவூட்டுகின்றனர்.

எடுத்துப் பேசும் குரலும் எழுதித் தேயும் விரலுமாக இருகை வீசி இலக்கிய உலகில் பெருமிதமாக அரசோச்சி வரும் பேராசிரியர்களைப் பாராட்டுகிறேன்.

01-07-1983-இல் ‘நான்காம் தமிழ்ச் சங்கம்’ எனச் சிறப்பிக்கப்பெறும் மதுரை செந்தமிழ்க் கல்லூரியில் விரிவுரையாளராகச் சேர்ந்து இணைப்பேராசிரியராக உயர்ந்த திருமதி.நிர்மலா மோகன், 27 ஆண்டுக் காலம் அங்கே பணியாற்றி 31-05-2010-இல் ஓய்வு பெற்றார். இவர்தம் வழிகாட்டுதலில் 26 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர், பேராசிரியர் நிர்மலா மோகன் ஆய்வும் பதிப்பும் தொகுப்புமாக இதுவரை 30 நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது நூல்கள் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும், தன்னாட்சிக் கல்லூரிகளிலும் பாட நூல்களாகப் பரிந்துரைக்கப் பெற்றுள்ளன.

பேராசிரியர் நிர்மலா மோகன் தேமதுரத் தமிழோசையைப் பரப்புவதற்காக அமெரிக்கா (6 முறை), மலேசியா (4 முறை), சிங்கப்பூர் (3 முறை), ஆஸ்திரேலியா, கனடா, இலங்கை ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும் தமிழ்நாடு அறக்கட்டளையும் இணைந்து 2002-இல் இவருக்குத் **‘தமிழ்ச் சுடர்’** என்ற விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளன. மேலும் இவர் ‘சிறந்த பேச்சாளர் விருது’, ‘தமிழ்ப்பணிச் செம்மல் விருது’, ‘ஔவை

விருது', 'இலக்கிய மாமணி விருது', 'கிருபானந்த வாரியார் விருது' முதலான பல்வேறு விருதுகளையும் பரிசுகளையும் தம் எழுத்து மற்றும் பேச்சுப் பணி களுக்காகப் பெற்றுள்ளார். பல்வேறு வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட உரைகளையும் இவர் நிகழ்த்தியுள்ளார்.

தமிழக அரசின் **இளங்கோவடிகள் விருதினை,** நிறுவிய முதல் ஆண்டிலேயே **மாண்புமிகு தமிழ்நாட்டு மேனாள் முதல்வர் அம்மா** அவர்களின் பொற்கரங்களால் பெற்றவர் திருமதி நிர்மலா மோகன் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் இரண்டு ஆண்டுகள் **தகைசால் பேராசிரியராக** இருந்தார் என்பதும் இவருக்குத் தகுதியும் பெருமையும் நல்குவதாகும்.

மதுரை **ஔவை மெய்கண்டான்**

தோரண வாயில்

பெருமை மிகு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில், தமிழக அரசின் ஜி.யு.போப் விருதினைப் பெற்ற **வைதேகி எர்பர்ட்டு** நிறுவியுள்ள அறக்கட்டளையின் சார்பில், உரைவேந்தர் ஔவை துரைசாமிப் பிள்ளை குறித்துப் பொழிவு ஆற்றும் வாய்ப்பினைப் பெற்றது என்பது என் வாழ்வில் எனக்குக் கிட்டிய நற்பேறு; தவப்பயன்.

இந்நூலாக்க முயற்சியில் பல்லாற்றானும் எனக்குத் துணைநின்ற தகைசால் பேராசிரியர் **வ.ஜெயதேவன்,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் **கோ.விசயராகவன்,** மிகச் சிறப்பான முறையில் நூலுக்கு அறிமுகவுரை நல்கியுள்ள மழலையர் - நரம்பியல் மருத்துவ வல்லுநர் **ஔவை மெய்கண்டான்**, உரைவேந்தரின் பெயரனும் மொழிபெயர்ப்புத் துறை இயக்குநருமான முனைவர் **ந.அருள்**, பத்மஸ்ரீ முனைவர் ஔவை நடராசனாரின் நேர்முக உதவியாளர் திரு **பிரதாப்,** நூலின் கணினியாக்கத்தில் முனைப்புடன் பணியாற்றிய அன்பு இளவல் திரு. **பி.கி.இராம்குமார்,** முத்தாய்ப்பாக ‘அன்னையும் அத்தனும்’ போல் எல்லா நிலைகளிலும் எனது காரியம் யாவினும் கைகொடுத்து உதவியும் ஊக்கியும் வரும் வாழ்க்கைத் துணைவர் **இரா.மோகன்** ஆகியோருக்கு என் நெஞ்சார்ந்த நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கின்றேன்.

ஒன்று மட்டும் உறுதி; உரைவேந்தர் ஔவை துரைசாமிப் பிள்ளையின் உரைகளைப் பயிலும் இளைய தலைமுறையினருக்குக் கூர்ந்து நோக்கும் திறம் வசப்படும்; தேடல் மனப்பான்மை வளரும்; தமிழ் இலக்கியங்களில் மட்டுமன்றி, பிற அறிவுத் துறைகளிலும் ஈர்ப்பும் ஈடுபாடும் மிகும்; ஆளுமைப் பண்பு செம்மையுறும்.

உலகெங்கும் வாழும் உரைவேந்தர் ஒளவை துரைசாமிப் பிள்ளை அவர்களின் குடும்பத்தைச் சார்ந்த உற்றார் உறவினரும், அவரிடம் பயின்ற மாணவச் செல்வங்களும், பேராசிரியப் பெருமக்களும், கெழுதகை நண்பர்களும், இலக்கிய ஆர்வலர்களும் இந்நூலினை வரவேற்றுப் போற்றுவார்கள் என நம்புகின்றேன்.

மதுரை - 625 019



24.02.2018

பொருளடக்கம்

1.	அறிமுகம்	13
2.	புறநானூறு உரைத்திறன்	20
3.	ஐங்குறுநூறு உரைத்திறன்	42
4.	நற்றிணை உரைத்திறன்	67
5.	பதிற்றுப்பத்து உரைத்திறன்	94
6.	மணிமேகலை உரைத்திறன்	105
7.	திருவருட்பா உரைத்திறன்	122
8.	‘உரைசாமிப் பிள்ளை’	144

1. அறிமுகம்

"வாழும் தமிழுக்கு வாழ்நாள் முழுவதும் தொண்டாற்றித் தமிழ் நெஞ்சங்களில் எல்லாம் நிலையாக வாழ்ந்து கொண்டிருப்பவர் உரைவேந்தர் பேராசிரியர் ஔவை துரைசாமி அவர்கள் ஆவார்."

*-பி.வி.கிரி**

பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் தமிழ்மொழி மறுமலர்ச்சி பெறத் தொடங்கியது. ஐரோப்பியர் வருகை காரணமாகத் தமிழ் நாட்டுக்கு அச்சு இயந்திரங்கள் வரத் தொடங்கின. பனை ஓலையில் ஏட்டுச் சுவடிகளாக இருந்த நூல்களைத் தமிழ் அறிஞர்கள் அச்சிடத் தொடங்கினார்கள். புதிய உரைநடை நூல்களை எழுதி அச்சிடும் முயற்சியிலும் ஈடுபட்டார்கள். பழைய செய்யுள் இலக்கியம், புதிய செய்யுள் இலக்கியம், புதிய உரைநடை நூல்கள், திங்கள் இதழ், வார இதழ், சிறுகதைகள், புதினங்கள் முதலான உரைநடை நூல்கள் அச்சு இயந்திரத்தின் உதவியால் வெளிவரத் தொடங்கின. இம்முயற்சியினால் உரைநடை வளர்ச்சி பெறத் தொடங்கியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, இராமலிங்க வள்ளலார், யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர், வீராசாமி செட்டியார், வேதநாயகம்பிள்ளை, சபாபதி முதலியார் முதலிய தமிழ்ப் பெருமக்கள் கதைகள், கட்டுரைகள், நாடகங்கள் முதலானவற்றை உரைநடையில் எழுதத் தலைப்பட்டனர். இம்முயற்சி இருபதாம் நூற்றாண்டில் பெருகியது. இருபதாம் நூற்றாண்டை உரைநடை இலக்கியத்தின் பொற்காலம் என்று கூறலாம்.

---

* செந்தமிழ் வளர்த்த செம்மல்கள், ப.75.

இதுவரை ஓலைச் சுவடிகளிலே உறங்கிக் கொண்டிருந்த தமிழ் இலக்கியங்களைத் தேடியெடுத்து, எளிய உரைகளும், அரிய முன்னுரைகளும் எழுதி வெளியிடத் தொடங்கினர்; சிலர் பழஞ்செய்யுட்களில் தேங்கிக் கிடந்த கவிதை வெள்ளத்தைக் காட்சி காட்சிகளாகச் சுருக்கித் தொகுத்துத் தனி நூல்களாக எழுதினர். ஆங்கிலக் கல்வியின் பயனாகத் தமிழில் சிறுகதை இலக்கியங்களும், புதினங்களும், ஓரங்க நாடகங்களும் மொழிபெயர்ப்பு நூல்களும் எழுந்தன. வானொலியும், திரைப்படங்களும் தமிழ் வளர்க்க முன் வந்தன. பல்கலைக்கழகங்கள் பாடத்திட்டங்கள் வகுத்துக் கொடுத்தன; தமிழ் வளர்க்கப் பல சங்கங்களும், எழுத்தாளர்களை ஊக்குவிக்கப் பல கழகங்களும் தோன்றின. இவ்வாறு இருபதாம் நூற்றாண்டில் உரைநடை இலக்கியம் பற்பல புதுத்துறைகளில் வளர்ச்சியுற்றது; மறுமலர்ச்சியுற்று மாண்பு பெறத் தொடங்கியது. தமிழின் மறுமலர்ச்சியே குறியாக, தன்னலம் பாராது உழைத்த தமிழ் அறிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் 'உரைவேந்தர்' என்று எல்லோராலும் பாராட்டப்படும் அறிஞர் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை ஆவார்.

பிறப்பும், கல்வியும், பணியும்

ஔவை சு.துரைசாமிப்பிள்ளை அவர்கள் தென்னார்க்காடு மாவட்டத்தில், திண்டிவனத்திற்கு அருகில் உள்ள 'ஔவையார் குப்பம்' என்னும் ஊரில் பிறந்தவர். அவ்வூரில் கருணீகர் (ஊர்க்கணக்கர்) மரபில் தோன்றிய சுந்தரம் பிள்ளைக்கும், சந்திரமதி அம்மையாருக்கும் 5.9.1902-ஆம் ஆண்டு தோன்றிய ஐந்தாம் குழந்தையே நம் உரைவேந்தர். உள்ளூரில் தொடக்கக் கல்வி கற்ற உரைவேந்தர், திண்டிவனத்தில் இருந்த அமெரிக்க ஆர்க்காடு நற்பணி உயர்நிலைப் பள்ளியில் (அப்போது ஏ.ஏ,எம். உயர்நிலைப் பள்ளி என அழைக்கப்பட்டது) பள்ளியிறுதி வகுப்புவரை பயின்று சிறப்பாகத் தேறினார். பின்னர், வேலூர் 'ஊரிசு' கல்லூரியில் இடைநிலை (Intermediate) வகுப்பிற் சேர்ந்து பயின்றார்; ஆனால் தந்தையின் மறைவு காரணமாகக் கல்வியைத் தொடர இயலாத சூழ்நிலை ஏற்பட்டது. அதனால், 'உடல்நலத் தூய்மைக் கண்காணிப்பாளர் (Sanitary Inspecter) பணியில் அமர்ந்தார். எனினும் 'தமிழை முறையாகப் பயில வேண்டும், தமிழ்ப் பேராசிரியராகத் திகழ வேண்டும்' என்ற அவாவினால், அவ்வேலையிலிருந்து விலகினார்.

அக்காலத்துத் தனித்தமிழ் பயில்வதற்கு ஏற்ற இடமாக விளங்கிய கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை நோக்கித் தமது 22-ஆம் வயதில் தம் பயணத்தைத் தொடங்கினார் உரைவேந்தர். ஒருவரைப் பார்த்த அளவிலேயே அவரின் திறமையை அளந்தறியும் ஆற்றல் பெற்ற 'தமிழவேள்' த.வே.உமாமகேசுவரனார் உரைவேந்தரைத் தமிழ்ச்சங்கப் பள்ளியில் ஆசிரியராகப் பணியில் அமர்த்தினார்; அதனுடன் சங்க நூலகப் பணியும் அவருக்குத் தரப்பெற்றது.

1925ஆம் ஆண்டு முதல் 1928-ஆம் ஆண்டு வரை, கரந்தையில், ஆசிரியப்பணி, ஏடு பெயர்த்தெழுதும் பணி, தமிழவேளுக்கு உதவும் பணி புரிந்து வந்தார்; இவற்றுக் கிடையே, அங்கு ஆசிரியர்களாக இருந்த 'கரந்தைக் கவியரசு' சு.வேங்கடாசலம் பிள்ளை, நாவலர் ந.மு.வேங்கட சாமி நாட்டார் ஆகியோரிடமும் தமிழ்ப்பாடம் பயின்று, 1930-இல் சென்னைப் பல்கலைக்கழக 'வித்துவான்' தேர்வும் எழுதி வெற்றி பெற்றார். பின்னாளில், 'பேராசிரியப் பெருந்தகை', 'சித்தாந்த கலாநிதி', 'உரைவேந்தர்' என்றெல்லாம் புகழ் பெறுவதற்கு இக்கல்வியே அடித்தளமாக அமைந்தது.

உரைவேந்தர், 1941-இல் செங்கம் உயர்நிலைப் பள்ளியிலும், 1942-இல் திருப்பதிக் கீழ்த்திசை ஆராய்ச்சிக் கழகத்திலும் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். 1943சூன் மாதம் முதல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆராய்ச்சித்துறையில் விரிவுரையாளராகச் சேர்ந்தார்; சைவ சமய இலக்கிய வரலாறு என்ற அரிய வரலாற்று நூலை உருவாக்கினார்; ஐங்குறுநூற்றுக்கு உரைகண்டார்; இவற்றோடு சைவ சமய நூலான ஞானாமிர்த நூலை ஆராய்ந்து விளக்கம் எழுதினார்; அடுத்து, உரைவேந்தர் செய்த பெரும்பணி புறநானூறு, நற்றிணை, பதிற்றுப்பத்து ஆகியவற்றிற்கு உரை எழுதியமையாகும். அங்கே எட்டு ஆண்டுகள் பணியாற்றிய பின் 1951 சூலைத் திங்களில் மதுரைத் தியாகராசர் கலைக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தப் பெற்றனர்.

எண்ணற்ற மாணவர்கள் உரைவேந்தர்பால் தமிழ் கற்று அறிஞர்கள் ஆயினர். அருட்செல்வம் திரு.நா.மகா லிங்கம் அவர்களின் உதவியோடு திருவருட்பாப் பாடல்கள் அனைத்திற்கும் தெளிவும் திட்பமும் நுட்பமும் நிறைந்த

உரையினை உருவாக்கினார் உரைவேந்தர்; அப்பணி உரைகாணும் பணிகளின் சிகரமாக அமைந்தது. மதுரைப் பல்கலைக்கழகம், இந்தியப் பல்கலைக்கழகங்களின் ஆய்வுக்கு உரை வேந்தரைப் பேராசிரியராக அமர்த்தியது; அப்போது தமிழ்நாட்டு ஊர்ப்பெயர் வரலாற்றாராய்ச்சி என்னும் நூல் உரைவேந்தரால் உருவாக்கப்பட்டது. மகேந்திர வர்மப் பல்லவன் வடமொழியில் இயற்றிய மத்த விலாசத்தை உரைவேந்தர் தமிழில் மொழிபெயர்த்தார்.

ஔவை என்னும் பெயர் இணைந்த வரலாறு

உரைவேந்தருடன் ஔவை என்னும் பெயர் இணைந்த கதையை மிகுந்த சுவை பயக்க எடுத்துக்கூறுகிறார் அவருடைய புதல்வர் ஔவை நடராசனார். அது வருமாறு:

"சென்னையிலிருந்து திண்டிவனம் செல்கிற சாலையை அடுத்து அமைந்துள்ள ஊர் மயிலம். அதையடுத்துச் செல்லும் சாலையைக் கூட்டேரிப்பட்டு சாலை என்பார்கள்... கூட்டேரிப்பட்டு சாலையிலிருந்து நேர்கிழக்கே சென்றால் அவ்வையார்குப்பம். அதுதான் அவ்வை துரைசாமிப் பிள்ளை அவர்கள் பிறந்த ஊர்.. திண்டிவனம் அங்கிருந்து எட்டு கி.மீ.தூரத்திலிருக்கிறது. அந்த நாளில் பேருந்து வசதி கூடக்கிடையாது. நடந்து தான் போக வேண்டும். என் தந்தையார் அப்படிச் சென்று ஏ.ஏ.எம்.மிஷன் உயர்நிலைப்பள்ளியில் படித்தவர். அவ்வையார் குப்பத்திலிருந்து படிக்கப்போன சில மாணவர்களில் இன்னொருவருக்கும் துரைசாமி என்று பெயர். ஆகவே அந்தக்கால வழக்கப்படி பள்ளி ஆசிரியர் அப்போதைக்கு ஊர்ப்பெயரை இணைத்து 'அவ்வை துரைசாமி' என்று அழைத்திருக்கிறார். அன்று முதல் 'அவ்வைதுரைசாமி' என்பதே நிலைத்துவிட்டது." (அவ்வை நடராசன், 'எந்தையும் தாயும்', அருளுக்கு ஔவை சொன்னது, பக்.242-243).

இல்லற மாண்பு

உரைவேந்தருக்கு வாழ்க்கைத் துணைவியாக வாய்த்தவர் உலோகாம்பாள் ஆவார். கோட்டுப்பாக்கம் (காவேரிப்பாக்கம்) என்ற ஊரில் வாழ்ந்த அண்ணாபிள்ளை - இலட்சுமி அம்மையாரின் முதல் மகள் ஆவார்,

'மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை' (51)

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப, பிள்ளைகளைப் பேணி வளர்த்து, குடும்பத்தைக் கட்டிக் காத்தவர் அப்பெரு மாட்டி. இவ்விருவர்தம் இல்லறப் பயனாகப் பெற்ற மக்கள் பதினொருவர் ஆவர். அவர்களுள் இரண்டு குழந்தைகள் பிறந்த சில நாட்களில் இறந்தனர். மீதி 9 பேரில் 5 பேர் ஆண்கள்; 4 பேர் பெண்கள்.

1. திருவள்ளுவன் - பிறந்த சில நாட்களில் இறத்தல்
2. பாலகுசம் - கணவர் இரமணன் (காதல் மணம்)
3. நடராசன் - மனைவி தாராபாய்
4. மணிமேகலை - கணவர் சுப்பிரமணியம் (மணிமேகலை என்ற நூலினை எழுதுங்காலத்துப் பிறந்தவர்)
5. திலகவதி - கணவர் நரசிம்மன்
6. தமிழரசி - கணவர் குமாரவேலு
7. ஆண்மகவு - பிறந்த சில நாட்களில் இறப்பு
8. திருநாவுக்கரசு - மனைவி முத்துலட்சுமி
9. திருஞானசம்பந்தன் - மனைவி சந்திரிகா
10. மெய்கண்டான் - மனைவி சீதா ('சிவஞானபோதம்' நூலினை எழுதும்போது, பிறந்தவர்)
11. நெடுமாறன் - மனைவி கலாவதி

உரைவேந்தரின் மூத்த மகன் திரு.ஔவை நடராசன், தம் தந்தையைப் போன்றே பேச்சிலும் எழுத்திலும் வல்லவர்; தம் விடாமுயற்சியால் பல்வேறு உயர்பதவி வகித்துத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்து பெயரும் புகழும் பெற்றவர். மற்ற அனைவரும் உயர்படிப்புப் படித்துப் பல்வேறு பணிகளில் சிறந்து விளங்குகின்றனர்.

சிறந்த இல்லற வேந்தராக வாழ்ந்த உரைவேந்தர், தமது இறுதிக்காலம் வரை எங்கும் தமிழ், எதிலும் தமிழ் எனவும், சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்குக எனவும் முழக்கமிட்டு வாழ்ந்தார். 69 வயது வரை மருத்துவராகத்

திகழ்ந்த மகன் மெய்கண்டானது இல்லத்தில் வாழ்ந்து வந்த உரைவேந்தர் ஔவை அவர்கள் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

"சற்றுப் பருமனான உடம்பு; குட்டையான வடிவம்; முழுக்கைச் (ஜிப்பா) சட்டை; அடிக்கடி பொடிபோடும் பழக்கம்; தலைமுடியைக் குறைத்து வைத்திருப்பார்; நெற்றியில் திருநீற்றின் மணம் வீசும்; வீட்டில் கைமேசை வைத்தே எழுதுவார்; பெரும்பாலும் பேனாவைப் பயன் படுத்தாமல் மைதொட்டு, அழகாக நிறுத்தி எழுதுவார்; எப்போதும் தமிழ் - சைவச் சிந்தனையே! குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட செயலைச் செய்வதில் வல்லவர்; மறந்துங்கூட மனைவியிடத்திலோ பிள்ளைகளிடத்திலோ கடிந்து பேசமாட்டார்! செந்தமிழ் நடையில் தான் பேசுவார்! ஒவ்வொரு நாளும் ஏதாவதொரு நூலைப் படித்தபின் தான் படுக்கைக்குச் செல்வார்; பெரும்பாலும் அஃது ஆங்கில நூலாகவே இருக்கும்!" (ச.சாம்பசிவனார், உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, ப.22) என்பது உரைவேந்தர் ஔவையைப் பற்றிய சொல்லோவியம் - இத்தகைய பாராட்டுக்குரிய 'உரைவேந்தர் ஔவை சு.துரை சாமிப் பிள்ளையவர்கள் (1902-1981) சிறந்த பேராசிரியப் பெருந்தகையாக விளங்கியவர்; சங்கத் தொகைநூல்களான ஐங்குறுநூறு, நற்றிணை, பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய நூல்களுக்கு உரைநயம் கண்டவர்; சைவ சமய இலக்கிய வரலாறு, 'ஞானாமிர்தம்' என்னும் சைவ சமய நூலுக்கு விளக்கவுரை எழுதிய சைவ சித்தாந்த வித்தகர்; 'திருவருட்பா'வுக்கு சொற்பொருள் நயம் உரைத்த சான்றோர்; பேச்சாலும் எழுத்தாலும் பிறர் உள்ளம் கவர்ந்தவர்; தமிழர் வரலாற்றைத் தகவுடன் உரைத்தவர்; ஊர்களின் உண்மைப் பெயர்களைக் கண்டறிந்தவர்; ஏடு படிப்பதிலும் கல்வெட்டு ஆராய்வதிலும் வல்லவர்; மாணவர்களின் உள்ளம் கவர்ந்தவர்; விடாமுயற்சியாலும், கடும் உழைப்பாலும் முன்னேறி, உலகம் போற்ற வாழ்ந்த உத்தமர்; சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர், பேரவைச் செம்மல் முதலான பல பட்டங்களும் விருதுகளும் பெற்றவர்.

'அதியன் இன்றில்லை' என்னும் தலைப்பில் கவிஞர் மீ.இராசேந்திரன் (மீரா) பாடிய கையறுநிலைக் கவிதை உரைவேந்தருக்கு முற்றிலும் பொருந்துவதாகும். அக்கவிதை:

‘பயனுள்ள வரலாற்றைத் தந்த தாலே
பரணர்தான்; பரணர்தான் தாங்கள்! வாக்கு
நயங்காட்டிச் செவிக்குத்தேன் தந்த தாலே
நக்கீரர்தான் தாங்கள் இந்த நாளில்
கயன்மன்னர் தொழுதமொழி காத்ததனால் – தொல்
காப்பியர்தான! காப்பியர்தான் தாங்கள்! எங்கும்
தயங்காமல் சென்றுதமிழ் வளர்த்த தாலே
தாங்கள் அவ் ஔவைதான்! ஔவை யேதான்!

அதியன்தான் இன்றில்லை இருந்தி ருந்தால்
அடாடாவோ ஈதென்ன விந்தை! இங்கே
புதியதொரு ஆண்ஔவை எனவி யப்பான்
பூரிப்பான்; மகிழ்ச்சியிலே மிதப்பான்; மற்றோர்
அதிமதுரக் கருநெல்லிக் கனிகொ ணர்ந்தே
அளித்துங்கள் மேனியினைக் காத லிக்கும்
முதுமைக்குத் தடைவிதிப்பான்; நமது கன்னி
மொழிவளர்க்கப் பல்லாண்டு காத்திருப்பான்!’

உரை காண்பதில் தனித்திறன் வாய்ந்தவராக விளங்கிய ஔவை துரைசாமி அவர்களின் புகழ் தமிழ்மொழி உள்ளளவும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

2. புறநானூறு உரைத்திறன்

"உரையாசிரியர்கள் பெரும்புலமையுடையவர்கள்; பெருமிதம் வாய்ந்தவர்கள்... உரைகள் வாயிலாக அறங்களையும் நாட்டு மரபுகளையும் கற்பிப்பது அவர்தம் கருத்து."

*- வ.சு.பமாணிக்கம்**

உரைவேந்தர் ஔவை அவர்கள் கடுமையான உழைப்பாளி. தன்னலம் கருதாது தமிழ்நலம் காக்கப் பாடுபட்டவர். பள்ளியை விட்டு வீடு வந்ததும், திண்ணையில் புத்தகங்களைப் பரப்பிக் கொண்டு அமர்ந்து விடுவாராம். வீட்டில் மின் விளக்கு வசதி இல்லாத நிலையிலும், இரவில் எண்ணெய் விளக்கின் முன் இருந்து நெடுநேரம் விழித்திருந்து குறிப்புகள் எடுப்பதும், கட்டுரை, ஆய்வுரை, மறுப்புரை, நூலுரைகள் எழுதுவதும் அவரது வழக்கம்.

உரைவேந்தர் ஔவை எழுதிய நூல்கள் 34, அவற்றுள் 12 நூல்கள் உரை விளக்கமாக அமைந்துள்ளன. அவை வருமாறு:

1. திருமாற் பேற்றுத் திருப்பதிகவுரை
2. திருவோத்தூர் தேவாரத் திருப்பதிகவுரை
3. ஐங்குறுநூறு உரை
4. புறநானூறு உரை
5. பதிற்றுப்பத்து உரை
6. நற்றிணை உரை
7. ஞானாமிர்தம் உரையும் விளக்கமும்
8. சிவஞானபோத மூலமும் சிற்றுரையும் பதிப்பும்

---

* தொல்காப்பியக் கடல், ப.273.

9. மணிமேகலை உரை

10. யசோதரகாவியம் மூலமும் உரையும்

11. வள்ளலாரின் திருவருட்பா உரை

12. சீவகசிந்தாமணிச் சுருக்கம்

13. சூளாமணி

14. சிலப்பதிகார ஆராய்ச்சி

15. மணிமேகலை ஆராய்ச்சி

16. சீவக சிந்தாமணி ஆராய்ச்சி

உரைநெறி

உரைவேந்தர் உரை செய்யும் பண்பு அவர்க்குக் கருவில் வாய்த்த திருவாக விளங்கியது. "இலக்கிய நூலாயினும், இலக்கண நூலாயினும் அதன் பண்டை உரைகளை ஆழ்ந்து பயின்று, தோய்ந்து நுகர்ந்து, ஆய்ந்து தெளிவதும், அவ்வுரையாசிரியர்கள் நூல்களை அணுகும்முறை, உரைகாணும் நெறி, உரை வகுக்கும் திறம் ஆகியவற்றை அறிந்து" உரை எழுத முற்பட்டார் அவர் என்று உரை செய்யும் முறையினை அவரோடு உடனிருந்து கல்விகற்ற அவருடைய மாணவர் ம.வி.இராகவன் எடுத்துரைத்துள்ளார். (உ.ஒ.நூ.,ப.30)

உரை கூறும் முறை

உரைவேந்தர் உரை வரையும் முறையில் ஒரு தனிச் சிறப்பு அமைந்துள்ளது. பாடல் ஆசிரியரின் வரலாற்றையும், அவர் பாடல் பாடுவதற்கு அமைந்த சூழலையும், அப் பாட்டின் வாயிலாக அப்புலவர் கூற விழையும் கருத்தையும் ஒவ்வொரு பாட்டின் உரையிலும் எடுத்துரைக்கின்றார் உரைவேந்தர். அவர் உரைகூறும் முறையினை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. பாடலாசிரியரும், பாடல் அமைந்த சூழலும்
2. பாடல்
3. உரை
4. விளக்கம்

பாடலாசிரியர்

புறநானூற்றுப் பாடல்களில் ஒரே ஒரு பாடல் பாடிப் புகழ் பெற்றவர் கணியன் பூங்குன்றனார். அவரைப் பற்றி உரைவேந்தர் தரும் குறிப்பு வருமாறு;

"கணியன் பூங்குன்றனார் இராமநாதபுர மாவட்டத்திலுள்ள மகிபாலன்பட்டியென இப்போது வழங்கும் ஊரினர். இவ்வூர்ப் பூங்குன்றமெனப் பண்டைநாளிலும் இடைக்காலத்தும் வழங்கிற்று என்பதை, அவ்வூர்க் கோயில் கல்வெட்டால் அறிகின்றோம். பூங்குன்றம் இப்போது குடகமலையென வழங்குகிறது. மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியாராகிய தமிழ்ப் பேராசிரியரும் இவ்வூரினராவர்; இவ்வூர் பண்டே போல் இன்றும் தமிழ்ப் புலமைச் சான்றோரைப் பெற்றிருப்பது இதன் சிறப்பை வற்புறுத்துகிறது" (புறநானூறு, பகுதி I, ப.415)

இவ்வாறு புலவரைப் பற்றிக் கூறும்போதே, அவரது ஊரின் சிறப்பையும், அமைந்துள்ள இடத்தையும், இன்று அவ்வூர் எவ்வாறு அழைக்கப்பெறுகிறது என்பதையும், அவ்வூரைப் பற்றிய சமகாலச் செய்திகளையும் இணைத்துக் கூறுவது உரைவேந்தரின் தனிச்சிறப்பு ஆகும். மேலும் சில சான்றுகள் வருமாறு:

'மாறோக்கம் - இது 'மாறோகம்' எனவும் வழங்கும். பாண்டிநாட்டில் கொற்கையைச் சூழ்ந்த பகுதி; தருமபுரி - முன்பு தகடூர்; பிரான்மலை - முன்பு பறம்பு மலை; பூந்தமல்லி - பூவிருந்தவல்லி.

பாடல் எழுந்த சூழலை விளக்குதல்

புலவரைப் பற்றிக் கூறிய பின்னர், உரைவேந்தர் பாடல் எழுந்த சூழலை விளக்குகிறார்:

"இச்சான்றோர் (கணியன் பூங்குன்றனார்), இடரினும், தளரினும் இன்பத்தினும் துன்பத்தினும் எவ்விடத்தும் அயராத உள்ளமும், கலங்காத அமைதியும் உடையர். நலஞ் செய்தாரென ஒருவரைப் பாராட்டலும், தீது செய்தாரென ஒருவரை இகழ்தலும் இல்லாதவர். இவ்வாறே பெரியோரென ஒருவரைப் புகழ்தலும், சிறியோரெனப் புறக்கணித்தலும்

அறியாதவர். உயிர்கள் அனைத்தும் தாந்தாம் செய்த வினைக்கேற்ப இன்பமும் துன்பமும் உயர்வும் தாழ்வும் செல்வமும் வறுமையும் எய்தும் என்பதை நூல்களாலும் நடைமுறையானும் நன்கறிந்தவர். இப்பண்பினால் நல்லிசைப் புலமை மிக்க இவர் எத்தகைய வேந்தரையும் வள்ளல்களையும் பாடிற்றிலர். இதனைக் கண்ட அக்காலச் சான்றோர்க்கு வியப்புண்டாயிற்று. சிலர் முன் வந்து "பாடுபெறு சான்றோராகிய நீவிர் எவரையும் பாடாமை என்னையோ?" என்றாராக. மேலே கூறிய தம் கருத்துக்களையமைத்து இப்பாட்டைப் பாடியுள்ளார்" என்று 'யாதும் ஊரே யாவருங்கேளிர்' என்னும் பாடல் எழுந்த சூழலை விளக்கியுள்ளார் உரைவேந்தர்.

'நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்' எனத்தொடங்கும் பெருஞ்சித்திரனார் குமணனைப் பாடிப் பரிசில் கொணர்ந்து மனையோட்குச் சொல்லியது என்னும் துறையில் அமைந்த பாடல் எழுந்த சூழலை இவ்வாறு விளக்குகிறார் உரைவேந்தர்:

"குமணன்பால் பெருஞ்செல்வம் பரிசிலாகப் பெற்றுப் போந்த பெருஞ்சித்திரனார் அதனைத் தம் மனைவிபால் தந்து எல்லோர்க்கும் கொடுத்து இன்புறுமாறு பணிக்கின்றவர், இனிய இப் பாட்டினைப் பாடினார். இதன்கண் எல்லோர்க்கும் என்பதை வகுத்து, "நின்னை விரும்புவோர் நின்னால் விரும்பப்படுவோர், நின் கிளைஞராகிய மூத்த மகளிர், கடன் நல்கியோர் முதலிய பலர்க்கும் வழங்குக. அவ்வாறு வழங்குமிடத்து இன்னார்க்கு வழங்குகின்றோமென்றும் என்னைக் கேட்டல் வேண்டும் என்றும் கருதற்க; இச்செல்வ முற்றும் முதிரமலைக்குத் தலைவனான குமணன் தந்தது" என்று இனிமை கனியக் கூறியுள்ளார். 'பண்டை நாளில் பரிசில் பெற்ற பரிசிலர், தாம் பெற்ற பரிசிற் பொருளின்பாற் கொண்டிருந்த மனப்பான்மையினை இப்பாட்டு ஒரு வகையில் எடுத்துக்காட்டுவது காண்மின்" (புறநானூறு I-ப.349).

உரையும் விளக்கமும்

மூன்றாவதாக அமையும் உரைப்பகுதி, பாட்டின் கருத்தைப் பதம் பிரித்து விளக்குவதாக அமைகின்றது. "தொலி நீக்கிய பின் பழத்தைச் சுளைசுளையாகப் பிரித்துண்டு மகிழ்வது போலப் பாட்டினுள் ஒவ்வொரு கருத்தாக எடுத்து

வரன்முறையில் தெளிவுபடுத்துவதும், அத் தெளிவுரையைத் "தென்னுண்தேனில் தேக்கிய செஞ்சொற்'களில் தொடுத்து உரைப்பதும் உரைநடையின் மாண்பாகும்" (டாக்டர் இராதா தியாகராசன் அம்மையார், 'நற்றிணை உரைநலம்', உ.ஒ.நூ.,ப.54) என்று இராதா தியாகராசன் அம்மையார் கூறுவது போன்று இப்பகுதி அமைந்துள்ளது.

நான்காவது பகுதியாகிய 'விளக்கம்' என்னும் பகுதியில், அப்பாடலின் வாயிலாகப் புலப்படும் அக்கால மக்களின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், நாகரிகம் பண்பாடு முதலான செய்திகள், வரலாற்றுச் செய்திகள், கல்வெட்டுச் சான்றுகள் முதலாயின விளக்கப்படுகின்றன.

புறநானூற்று உரைத்திறன்

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகிய புறநானூறு, பண்டைத் தமிழகத்தின் அரசியல் நிலைமையையும், குடிவாழ்க்கையினையும் பொருளாதாரச் செழுமை யினையும், புலவர் பெருமக்களின் உள்ளத்து உணர்வு களையும் தெரிவிக்கும் நூலாகும். இதனைப் பழைய உரையுடன் 1894-ஆம் ஆண்டு டாக்டர் உ.வே.சாமிநாதையர் முதற்பதிப்பாக வெளியிட்டார். இது பல பதிப்புகளைக் கண்டது. இந்நூலுக்கு அமைந்த பழையவுரை பாடற் பொருளைத் தொகுத்துரைக்கும் பொழிப்புரையாகவும், சொன்முடிபும். இலக்கணக் குறிப்பும், பிறநலங்கள் ஆகியவற்றை விளக்கும் சிறப்புரையாகவும் அமைந்துள்ளது. இப்பழைய உரை 266ஆம் பாடல் வரை தான் கிடைத்துள்ளது. இதனுள்ளும் 242-ஆம் பாடலுக்கு மேலுள்ள உரைப் பகுதிகள் சில இடங்களில் சிதைந்து காணப்படுகின்றன. 'இந்நிலையில் புறநானூறு முழுவதுக்கும் யாவரும் எளிதாக உணரும் வகையில் உரைவேந்தர் எழுதிய தெளிவான விளக்கவுரை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் 1947ஆம் ஆண்டில் முதற்பகுதியும், 1951-ஆம் ஆண்டில் இரண்டாம் பகுதியும் வெளியிடப்பெற்றன. பழைய உரை இல்லாத 269 முதல் 400 வரையுள்ள பாடல்களுக்கு உரைவேந்தர். தாமே புதியதோர் உரையினை எழுதி யுள்ளார்; "இப்புதிய உரை முற்பகுதிக்கு அமைந்த பழைய வுரையின் சொன்னடையினையே பெரிதும் அடியொற்றிச் செல்வது பாராட்டத் தக்கது... ஓரளவு தமிழ்ப்பயிற்சி யுடைதாரும், புறநானூற்றின் நலங்களைத் தெளிவாக உணர்ந்து

இன்புறும்படி இனிய எளிய தமிழ்நடையில் அமைந்துளது. இக்காலத்து அரசியற் சீர்திருத்தங்களிற் கருத்துடைய தமிழ்ச் செல்வர்கள், தமிழ் மாணவர்கள், தமிழ்நாட்டு வரலாற்றிற் கருத்துடையோர் ஆகிய அனைவருக்கும் இவ்விளக்கவுரை நன்கு பயன்படுமென்னும் துணிபுடையேன்" என்று இந்நூலுக்கு எழுதிய அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார் டாக்டர் அ.சிதம்பரநாத செட்டியார் (புறநானூறு, பகுதி I, பக்.xii & xiii)

உரை மரபுகள்

'இளம்பூரணர் உரை செய்த முகூர்த்தம் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு நல்ல முகூர்த்தம்' எனக் குறிப்பிடுவார் அறிஞர் மு.அருணாசலம் (இளம்பூரணர், ப.62) ஏனெனில் அவரைப் பின்தொடர்ந்து உரையாசிரியர் திருக்கூட்டம் ஒன்றே உருவாயிற்று. பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச்சிலையார் எனப் பலரும் தொல்காப்பியத்திற்கு உரை எழுத முற்பட்டனர். தொடர்ந்து பழந்தமிழ் நூல்களுக்கு உரை எழுதுவது என்பது இடைக்காலத்தில் செழித்து வளர்ந்து வந்துள்ளது. தருமர், மணக்குடவர், தாமத்தர், பரிதி, பரிமேலழகர் முதலான பதின்மர் உரை திருக்குறளுக்கு எழுந்தது. சிலப்பதிகாரத்திற்கு அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லார் உரையும் கிடைத்தன. இம்மரபு இன்றளவும் வளர்ந்து வருகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையரின் அரும்பணியால், சங்க இலக்கிய நூல்களுக்கும், இடைக்கால நூல்களுக்கும் பழைய உரைகளும், திருத்திச் செப்பமிட்ட புதிய உரைகளும், அரிய பல விளக்கவுரைகளும், ஆராய்ச்சி உரைகளும் தோன்றத் தொடங்கின. அப்பணியில் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை முதலான சங்க இலக்கியங்களுக்கும், மணிமேகலை, ஞானாமிர்தம், திருவருட்பா முதலான நூல்களுக்கும் அரிய உரைகளை எழுதியுள்ளார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் மூலநூல் ஆசிரியர் களுக்கு இணையான இடத்தினை உரையாசிரியர்கள் பெற்றுள்ளனர். இதனை,

"வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை - எண்ணியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி யோராறும்
தண்டமிழின் மேலாந் தரம்"

என்னும் உமாபதிசிவாச்சாரியாரின் பழைய வெண்பா உணர்த்துகிறது. பழந்தமிழ் நூல்களுக்கு இணையான இடத்தினைப் பரிமேலழகர் உரைக்கும் வழங்குவதன் மூலம் இதனை அறியலாம். பழைய உரையாசிரியர்களைப் போலவே, உரைவேந்தரும், அவர்தம் கருத்துக்களை ஏற்றும், புதிய உரைகளை வகுத்தும், அக்கால மக்களின் வாழ்வியல் செய்திகளைத் தக்க இடங்களில் குறித்தும், வரலாற்றுச் செய்திகளைப் புலப்படுத்தியும், கல்வெட்டுச் சான்றுகள் தந்தும் தம் உரைநெறியை வகுத்துள்ளார். எனவே உரைவேந்தர் உரையைப் படிக்கும்போது பழைய உரையாசிரியர்களது உரையை நினைவூட்டுவதாய் அமைந்துள்ளது.

"நூலாசிரியரின் கருத்தை வெளிப்படுத்துவதே உரையின் ஒழுக்கம். தன் கருத்து எதுவாக இருந்தாலும் இன்னொருவன் எழுதிய நூலில் அதனை ஏற்றிக் கூறலாகாது. அப்படிச் செய்வது உரை வழுவாகும். ஒரு நூலின் கருத்தையோ பாட்டின் பொருளையோ காண்பதற்குப் பல அறிவுக் கூறுகள் வேண்டும். இது இன்ன காலத்துத் தோன்றியநூல் என்ற காலவறிவும், இக்காலத்து இச்சொல்லுக்கு இப்பொருள் என்ற சொல்லறிவும், இன்ன காலத்து இருந்த பழக்கவழக்கங்கள் இவை என்ற சமுதாயவறிவும், இத்தொடர் ஒடிக்கிடக்கும் முறை இது என்ற நடையறிவும், நாட்டின் வரலாற்றறிவும் இன்ன பிறவும் இருந்தால் தான் உரையெழுதும்போது நினைவுக்கு வந்தால்தான் பொருளை முரணின்றிக்காண முடியும்" ('உரைநெறிகள்', தமிழியல் - ஓர் அக நோக்கு, ப.24) என்று அறிஞர் வ.சுப.மாணிக்கம் கூறுவது உரைவேந்தருக்கும் பொருந்துவதாகும்.

பண்டைத்தமிழ் மரபுகளைச் சுட்டல்

உரைவேந்தர் தம் உரையில் பண்டைத் தமிழ் மரபுகளைச் சுட்டி உரை விளக்கம் செய்துள்ளார். ஒரு சான்று வருமாறு:

'கையது வேலே காலன புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்
வட்கர் போகிய வளரிளம் போந்தை
உச்சிக் கொண்ட ஊசி வெண்தோடு
வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச்
சுரியிரும் பித்தை பொலியச் சூடி
வரிவயம் பொருத வயக்களிறு போல
இன்னும் மாறாது சினனே யன்னோ
உய்ந்தனர் அல்லர் இவன் உடற்றி யோரே
செறுவர் நோக்கிய கண்தன்
சிறுவனை நோக்கியுஞ் சிவப்பா னாவே.' (புறம்.100)

என்னும் பாடல், 'அதியமான் தவமகன் பிறந்தவனைக் கண்டானை அவர் (ஔவையார்) பாடியது' என்னும் துறையில் அமைந்ததாகும். அதியமானுக்கு முதல் மகனாகிய பொகுட்டெழினி பிறந்த சின்னாட்குப் பின் அதியமான் அவனைக் காணச் சென்றான். அக்காலை ஔவையார் அங்கே இருந்தார். அவர் அதியமானது போர்க்குரிய மறநிலையை இப்பாட்டின்கண் விளங்கக் கூறியுள்ளார். இப்பாடல் எழுந்த சூழலை விளக்கும்போது,

"குடிக்குரிய முதல்மகன் பிறந்த காலத்தில், பிறந்த சின்னாட் கழித்துத் தந்தை போர்க்குரிய உடை உடுத்துச் சான்றோர் சூழச்சென்று அம்மகனைக் காண்டல் பண்டைத் தமிழர் மரபு; உலகிற் பிறந்த மகன், முதன்முதல் தன் தந்தையைக் காணுமிடத்து அவன் நெஞ்சில் போர்க் கோலமும் போர் மறமும் நன்கு பதிய வேண்டுமென்பது கருத்து; அக்காலநிலை போர்மறவரையே பெரிதும் வேண்டியிருந்தது" (புறநானூறு, பகுதி I, ப.231) என்று அக்கால வீர மரபைப் புலப்படுத்தி உரை வரைந்துள்ளார் உரைவேந்தர்.

சமகால நிலையை எடுத்துரைத்தல்

பாண்டிய மன்னன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் நாடாளும் மன்னன் மட்டுமல்ல; கவிபாடும் புலவரும் ஆவார். கல்வியின் சிறப்பைக் கூற வந்த அம்மன்னன்,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடை யோன்ஆறு அரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே" (பா.183)

என்று பாடுகிறார். இப்பாடலில் வரும் உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் என்பதற்கு உரைவேந்தர் தரும் விளக்கம் வருமாறு:

"ஆசிரியனுக்கு ஊறுபாடுற்றவிடத்து உதவுதல் வேண்டா எனக் கருதற்க என்றற்கு "உற்றுழி யுதவியும்" என்றும், உரிய அளவினும் மிகைபடவே தருக என்பான், "உறுபொருள் கொடுத்தும்" என்றும் கூறினான். உற்றுழி யுதவுதல் எல்லார்க்கும் பொதுவாய் அறமாதலின் அதனை முதலிலும், உறுபொருள் கொடுத்தல் செல்வமுடையார்க்கே இயல்வதாகலின், அச்சிறப்புப் பற்றி அதனைப் பின்வைத்தும் மொழிந்தான். இக்காலக் கல்வித் துறையில் இவ்வுணர்வு அறவே இல்லாது ஒழிந்தமையின், ஆசிரியர்களை அடிமை களாகக் கருதி அல்லற்படுத்தும் கீழ்மைப் பண்புடைய செல்வமாக்கள் கல்வித் துறைகட்குத் தலைவர்களாய்த் தோன்றி, நாட்டு மக்களின் நல்லறிவை முளையிலே கெடுத்து, அவரிடையே ஒருமையுணர்வும் சீர்த்த புலமையும் உண்டாகாவாறு செய்துவிட்டதை இக்கால நிலை யெடுத்துக் காட்டுகிறது." (ப.399) என்று சமகால நிலையை எடுத்துக்காட்டி விளக்கம் கூறியுள்ளமையை அறியலாம்.

இப்பாடலில் வரும் 'வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்' என்பதில் உள்ள 'நாற்பால்' என்பதற்கும் வடநூல் மரபோடு ஒப்புமை காட்டி அரிய விளக்கம் தருகின்றார். அவ்விளக்கம் வருமாறு:

"பார்ப்பார் அரசர் வணிகர் வேளாளர் என்ற நால்வகையினையும் 'நாற்பால்' என்றான். இது வட ஆரியப் பகுப்புமுறை. தமிழகத்தில் தமிழ் மக்களிடையே இப்பாகுபாடு

இன்றும் கிடையாது; என்றும் இருந்ததில்லை. வட ஆரிய நூல்களை யடிப்படையாகக் கொண்டெழுந்த "இந்து லா' (Hindu Law)வில் மட்டில் இருக்கிறது. வேளாளர் கீழ்ப்பாலாராயின், அவர்க்குரிய தொழிலான உழவு உயர் தொழிலாகத் திருவள்ளுவர் முதலாய சான்றோர்களால் உயர்த்துக் காட்டப்படமாட்டாது. கல்வியறிவு நாற்பாலார்க்கும் பொதுவாதலின், அறிஞனை இப் பாற் பாகுபாடு கட்டுப்படுத்தாது என்றற்கு 'கீழ்ப்பாலொருவன் கற்பின்' என்றாற்போல' மேற்பாலொருவன் கல்லானாயின் அவனும்' என்னாது, 'மேற்பாலொருவனும்' என்றும், உரைகாரர், 'மேற்குலத்துள் ஒருவனும்' என்றும் கூறியது மேற்பாலா னொருவன் கற்றவனாயின், கீழ்ப்பாலொருவன் கற்றுத் தலைவனாயின், அவன்பாற் சென்று வழிபடுதற்குரியன் என்பதை வற்புறுத்துகிறது" (புறநானூறு -I, ப.400)

இங்ஙனம் வட ஆரியப் பாகுபாட்டினின்று, தமிழ் இனப்பாகுபாடு வேறுபட்டு விளங்குவதையும், தமிழ்ச் சமுதாயம் கல்விக்குத் தரும் இன்றியமையாமையையும் அழகுற விளக்கிச் செல்கின்றார் உரைவேந்தர்.

அணிநயம் காணுதல்

'நீயே அமர்காணின்' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் (167) அரச வாகைத் துறையில் ஏனாதி திருக் கிள்ளியைக் கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியதாகும். இப்பாடலில் 'ஏனாதி திருக்கிள்ளி யின் மேனி முற்றும் வாள் வடுவுற்று அவனது போர்த் திறத்தை வெளிப்படுத்தும் நலத்தை வியந்து பழிப்பது போலப் புகழ்ந்து பாடினார்; அதன்கண், திருக்கிள்ளியையும், அவன் பகைவரையும் ஒப்ப நிறுத்தி, 'நீ வடுப்பொருந்திய யாக்கையை உடையனாதலின், கண்ணுக்கு இனியனல்லை; புகழுடைமையால் கேட்டற்கினியை; நின் பகைவரோ போர்க்கஞ்சி ஒடுங்கி வாழ்வதனால் மெய் சிறிதும் வடுவுறாது கேட்டற்கு இனியரல்லராயினும் காண்டற்கு இனியராயுள்ளனர். இருவீரிடத்தும் இனிமையும் இன்னாமையும் இருப்பவும் அறிவுடைய உலகம் உன்னையே வியந்து கூறுகிறதே! காரணம் என்னையோ?' என்று வினவுவார் போலக் குறித்துப் பாடியுள்ளார்...

பழித்ததுபோலப் புகழ்தலும், புகழ்ந்ததுபோலப் பழித்தலும் ஆகிய இது வஞ்சப் புகழ்ச்சி அணி என்று இப்பாட்டில் அமைந்துள்ள அணிநயத்தை எடுத்துரைக்கின்றார் உரைவேந்தர்.

‘நீயே, அமர்காணின் அமர்கடந்தவர்
படைவிலக்கி யெதிர் நிற்றலின்
வாஅள் வாய்த்த வடுவாழ் யாக்கையொடு
கேள்விக்கினியை கட்கின் னாயே
அவரே, நிற்காணிற் புறங்கொடுத்தலின்
ஊறறியா மெய்யாக்கையொடு
கண்ணுக்கினியர் செவிக்கின்னாரே
அதனால், நீயும் ஒன்றினியை அவரும் ஒன்றினியர்
ஒவ்வா யாவுள வெல்போர்க்
கழல்புனை திருந்தடிக் கடுமான் கிள்ளி
நின்னை வியக்கும்இவ் வுலகம் அஃது
என்னோ பெரும உரைத்திசின் எமக்கே.’ (புறம்.167)

இப்பாடலில், போரில் புறம் கொடுத்து ஓடுகின்றவர் மீது படைக் கருவிகளை எறியாத போர் மரபும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ‘புறந்தந்தார் மேல் வாள் முதலிய படைகளைத் தூய வீரராயினார் எறியாராகலின், புறங் கொடுத்தலின் ஊறு அறியா மெய்யாக்கை’ என்றார் (ப.360) என்று இம்மரபைச் சுட்டிச் செல்கின்றார் உரைவேந்தர்.

இல்லறப் பண்பு எடுத்துரைத்தல்

‘அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது’ (குறள்: 45)

என்பது வள்ளுவர் வாய்மொழி. சங்க கால மக்கள் இல்லறம் என்னும் நல்லறத்தைப் போற்றி வாழ்ந்தனர். அந்நெறி யிலிருந்து பிறழ்பவர் மன்னனாக இருப்பினும், அவனை இடித்துரைத்து நல்வழி காட்டினர். குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த மயிலுக்குத் தன் போர்வையினை அளித்த வள்ளல் வையாவிக் கோப்பெரும்பேகன். ஆனால் அவனே, தன் மனைவியைப் பிரிந்து, பரத்தையை நாடி அவள் வீட்டிலேயே சென்று தங்கிவிட்ட பேகனது செய்கையைப் போற்றவில்லை தமிழ்ப்புலவர்கள். கபிலர், பரணர், அரிசில்

கிழார், பெருங்குன்றூர்கிழார் ஆகிய நான்கு புலவர்களும் பேகனைக் காணச் சென்றனர். அவர் வரிசைக்கும் தன் தகுதிக்கும் ஏற்ப பேகன் பரிசில் வழங்க முற்பட்டபோது, பரணர் இடைமறித்து, 'மயில் பனிக்குமென அருள்கொண்டு படாஅம் நல்கிய பேக, யாங்கள் பசித்து வந்தோம் இல்லை; எம்மாற் புரக்கப்படும் சுற்றமும் எம்பால் இல்லை; நீ அறம் செய்தல் வேண்டும்; அருளறத்தை விரும்பும் அண்ணலாகிய நீ, இன்று இரவே புறப்பட்டுத் தேரேறிச் சென்று அவளுடைய அருந்துயரைக் களைவாயாக; இதுவே யாம் நின்னை இரந்து பெறும் படிசில்' என்று இல்லறப் பண்பை எடுத்துரைக்கின்றனர்.

'கடாஅ யானைக் கலிமான் பேக
பசித்தும் வாரேம் பாரமு மிலமே
களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந் துறையுநா் நடுங்கப் பண்ணி
அறஞ்செய் தீமோ அருள்வெய் யோய்என
இஃதுயாம் இரந்த பரிசில்" (புறம்.145)

அறம் என்னும் சொல் பல பொருள்களைத் தரும் சொல் ஆகும். இப்பாட்டில் வரும் 'அறம் செய்து ஈமோ' என்னும் வரியில் வரும் அறம் என்பதற்கு அருமையான விளக்கமளித்துள்ளார் உரைவேந்தர். அவ்விளக்கம் வருமாறு:

'அறமாவது செய்யத்தகுவது' தம்மாற் காதலிக்கப் பட்டாரைத் தலையளித்தல் தலைவர்கட்கு அறமாதலால், காதலியாகிய கண்ணகிக்குத் தலையளி செய்க என்பார் 'அறஞ்செய்தீமோ' என்றார்' (புறநானூறு - I, ப.305)

இங்ஙனம் அறம் என்ற சொல்லிற்கு இல்லறமாகிய நல்லறத்தைப் பேணுதல் என்னும் பொருளை உணர்த்தி யுள்ளார் உரைவேந்தர்.

கணவனை இழந்த பெண்கள் தீப்பாய்ந்து இறக்கும் வழக்கம்

ராஜஸ்தானில் சதி என்னும் கொடிய வழக்கம் இருந்ததும், ராஜாராம் மோகன்ராய் போன்றோர் இவ்வழக்கத்தைத் தடைசெய்யப் போராடினர் என்பதும், எனினும் இன்னும் சில இடங்களில் இவ்வழக்கம் இருப்பதும் நாம் அறிந்த ஒன்று.

இவ்வழக்கம் சங்க காலத்திலும் நிலவியது என்பதைப் பூதபாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு பாடிய பாடல் ஒன்று எடுத்துரைக்கின்றது.

'பல்சான் றீரே பல்சான் றீரோ
செல்கெனச் சொல்லாது ஒழிக என விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கரி தாகுக தில்ல எமக்குஎம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்புஅற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயும்ஓர் அற்றே' (புறம்.பா.246)

இப்பாடல் எழுந்த சூழலை விளக்க வந்த உரைவேந்தர், "செந்தமிழ்ப் பாண்டி நாட்டில் சிறப்புற அரசு செலுத்திய பூதபாண்டியன் இறந்தானாக, அவன் மனைவி பெருங் கோப்பெண்டென்பாள் தீப்பாயக் கருதினாள். அவள் மண்ணாளும் வேந்தர்க்குக் கண்ணென்று ஓதப்படும் அரசியல் நீதிகளை நன்கு பயின்றவள்; மூதில் மகளாதலால் மறத்திலும் வாடாத மாண்புடையவள்; பூதபாண்டியனுக்குப் பின் பாண்டி நாட்டைக் காக்கும் பண்புடைய வேந்தர் இன்மையின், அரசியற் சுற்றத்தாராகிய சான்றோர் பலர் அவளை வேண்டித் தீப்புகாது அரசு கட்டிலேறி ஆட்சி புரியுமாறு வேண்டினர். அவர் உரை நாட்டு மக்களின் நலம் குறித்து நவிலப்பட்டது. ஆனால், பெருங்கோப் பெண்டோ அதனை அவ்வாறு கொள்ளாது. தன் காதலன் உயிருடன் தன்னுயிரை ஒன்றுவித்து மறுமையிற் பிரிவிலாக் காதல் வாழ்வு தனக் குண்டாகாவாறு விலக்கும் விலக்குரையாகக் கருதினாள்; விலக்குண்டு உயிர் வாழக் கருதின் கைம்மை நோன்பு மேற்கொண்டு துன்புற வேண்டியிருத்தலையும் சீர்தூக்கிப் பார்த்தாள். ஆற்றாமை

மீதூர்ந்தது; பலவாறு வேண்டி நிற்கும் சான்றோர்பால் வெகுளியும் மிக்கெழுந்தது. அந்த வெகுளியுரை கண்ணீர் சோரக்கதறி நிற்கும் அவள் வாயினின்றும் ஒரு பாட்டாய் வெளிவந்தது (புறம். II, ப.98) என்று விளக்குகிறார்.

சொல் நயம்

'சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து' (குறள்:645)

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப, பெரும்புலவர்கள் கையாண்டுள்ள சொற்களின் வன்மையையும் வனப்பையும் எடுத்துக்காட்டுவது உரையாசிரியர்களது இயல்பு. பழந்தமிழ் உரைகளில் ஊறித் திளைத்த உரைவேந்தரும், பல்வேறு சொற்களின் நயங்களைச் சிறப்புற எடுத்துக் காட்டுகின்றார். சில சான்றுகள் வருமாறு:

"தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்'
(புறம்.189:12)

என்னும் பாடல் வரிகளில் இடம்பெற்றுள்ள ஒருமையோர் என்பதற்கு, "கொண்ட கொள்கையில் ஒருமையுணர்வும், அதற்கு வேண்டும் செயற்பண்பும் இல்வழி, அதனாற் பெருமையுண்டாகாமையால் 'ஒருமையோர்' என்றார்; 'ஒருமை மகளிரே போலப் பெருமையும், தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு' (குறள்.974) என்ப" (புறம். I, ப.411) என்று குறளை சான்று காட்டி விளக்கம் தருகிறார் உரைவேந்தர்.

பிசிராந்தையார் பாடிய புறநானூற்றுப் பாடலில் (பா.184) இடம்பெறும் மா.குழி.வேலி என்னும் சொற் களுக்கு, அக்கால அளவை வகைகளைக் கூறி விளக்கம் தந்துள்ளார் உரைவேந்தர்:

'மா, குழி, வேலி யென்பன நில அளவை வகை. இருபது மா கொண்டது ஒரு குழி; நூறு குழி கொண்டது ஒரு வேலி. செய்யென்பது ஒரு தளை. கோடி மிக்கதோர் அளவினைக் குறிப்பது' (புறம்,ப.402).

'இவ்வுலகம் இனிதன்று; ஒரு மனையில் சாப்பறை முழங்க ஒரு மனையில் மணப்பறை முழங்குகிறது. ஒருத்தி

பூவணியாற் பொற்புற்று விளங்க, ஒருத்தி கணவனைப் பிரிந்து கண் கலங்கி நிற்கிறாள்.' இவ்வாறு அமையுமாறு.

'படைத்தோன் மன்றஅப் பண்பிலாளன்' (புறம்.194:5)

என்னும் அடியில் இடம்பெறும் 'பண்பிலாளன்' என்பதற்கு, 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்பது பற்றி, எல்லார்க்கும் ஒரு தன்மைப்பட அமைக்காது. வேறுபட அமைத்தமையின் நான்முகனைப் பண்பிலாளன்' என்றார்' *(I,ப.420)* என விளக்கம் அளித்துள்ளார்.

பொருள் நயம்

பாட்டில் இடம்பெறும் சில அடைமொழிகட்கும் தொடர்களுக்கும் அரிய பொருள் நயம் கண்டு விளக்குதல் உரைவேந்தரின் இயல்பு.

குமணன்பால் பெருஞ்செல்வம் பரிசிலாகப் பெற்று வந்த பெருஞ்சித்திரனார் அதனைத் தம் மனைவியிடம் தந்து எல்லோர்க்கும் கொடுத்து இன்புறுமாறு பணிக்கின்றவர்,

'நின்னயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்
பன்மாண் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே' (புறம்.163)

என்னும் பாடலைப் பாடியுள்ளார். இதன்கண் எல்லோர்க்கும் என்பதை வகுத்து, 'நின்னை விரும்புவோர், நின் கிளைஞ ராகிய மூத்த மகளிர், கடன் நல்கியோர் முதலிய பலர்க்கும் வழங்குக. அவ்வாறு வழங்குமிடத்து இன்னார்க்கு வழங்குகின்றோம் என்றும், என்னைக் கேட்டல் வேண்டும் என்றும் கருதற்க; இச்செல்வ முற்றும் முதிரமலைக்குத் தலைவனான குமணன் தந்தது' என்று கூறித் தருகின்றார்.

இப்பாடலுக்கு விளக்கவுரை கூற வந்த உரைவேந்தர். 'கிளை முதலோர் என்றது சுற்றத்தோரில் மூத்த மகளிர்'

என்றும், 'குறியெதிர்ப்பை' என்பதற்கு, 'இப்போது நல்கின் அப்போது நமக்கு நல்குவர் என்று கருதி வழங்கும் கடன்' எனவும் விளக்கமளிக்கின்றார். மேலும், பொருளைப் பெற்றுப் போந்த முதன்மை தன்பாலிருத்தலின், 'என்னொடும் சூழாது' என்றும், பொருள் உளதாய காலத்துச் சிறிது பற்றுள்ளங் கொண்டு வாழின் வறுமைத்துயர்க்கு இடமிராது என்று கருதற்க என்பார், 'வல்லாங்கு வாழ்தும் என்னாது' என்றும். 'இச்செல்வம் குமணன் தந்தது; தன் செல்வத்தில் அவனே பற்றுள்ளம் கொள்ளாதபோது நாம் பற்று வைத்தற்கு உரிமை இல்லையாகலின், இச் செல்வத்தைக் காணுந்தோறும், அவனை நினைந்து வாழ்த்துவதல்லது செய்வது பிறிதில்லையென்பார். 'திருந்துவேல் குமணன் நல்கிய வளன்' என்றும் கூறினார் (I, ப.350) என்று இப்பாடலுக்கு நயமான விளக்கவுரை தந்திருப்பது போற்றத்தகுவதாகும்.

'அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவில்
எந்தையும் உடையேம்எம் குன்றும் பிறர்கொணா்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே.'
(புறம்.112)

என்னும் பாடல், தந்தையை இழந்து வருந்திய ஓர் இரவில் முழு நிலவைக் கண்டவுடன் பாரி மகளிர் தந்தையின் நினைவு வரப்பெற்றுப் பாடிய பாடல். இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'வென்றெறி முரசின் வேந்தர்' என்னும் தொடருக்கு. 'நல்வழியால் வென்று முழக்குதற்குரிய முரசினை, அல்வழியால் பாரியைக் கொன்று முழக்குகின்றமை தோன்ற நின்றமையின், இகழ்ச்சிக் குறிப்பினையுடைய தாயிற்று' (புறம் I, ப.248) என்று நல்வழியல்லாத அல்வழி வெற்றி இது என்றும், இது மன்னருக்குப் பெருமை தருவதன்று என்பதையும் விளக்கவுரையில் உணர்த்தி யுள்ளார் உரைவேந்தர்.

அடைமொழி நயம்

பொருள் பொதிந்த அடைமொழித் தொடர்கள் புறநானூற்றுப் பாடல்களில் பயின்று வந்துள்ளன. பாண்டியன் அறிவுடைநம்பி, மழலைச் செல்வத்தின் அருமை குறித்துப் பாடிய பாடல் வருமாறு:

'படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழு நாளே' (புறம்.188)

இப்பாடலில் 'மயக்குறு மக்களை' என்று மழலைச் செல்வத்திற்கு அடைமொழி தந்து சிறப்பிக்கின்றான் பாண்டிய மன்னன். இதற்கு, 'அறிவை இன்பத்தான் மயக்கும் புதல்வரை' என்று உரை கூறிய உரைவேந்தர். 'மயங்குவது அறிவாகலானும், மக்கள் மயக்கத்தைத் தரும் பொருளா காமையாலும், மயக்குறு மக்கள் என்றதற்கு அறிவை இன்பத்தான் மயக்கும் புதல்வர் என்றார்' என்று விளக்கமும் அளித்துள்ளார். பிற மயக்கம் தரும் பொருள்களினின்றும், (மது,மாது, நிதி முதலியன) மக்களை விலக்கி, 'அறிவை இன்பத்தால் மயக்கும் புதல்வர்' எனக் கூறுவது பட்டறி வின்பாற்பட்ட விளக்கமாகும்.

ஒல்லையூர் தந்த பூதபாண்டியன் இறந்துபட, அவன் மனைவியாகிய பெருங்கோப்பெண்டு, கணவனை இழந்த பெண்கள் கைக்கொள்ளும் கைம்மை நோன்பு நோற்று உயிர் வாழ விரும்பாது, தீப்பாய்ந்து உயிர்விடத் துணி கின்றாள்; 'உயவற் பெண்டிரேம் அல்லேம்' எனக் குறிப்பிடு கின்றாள். இத்தொடரை விளக்குமிடத்து, "கைம்மை மேற்கொண்டொழுகும் மகளிரை உயவற்பெண்டிர்" என்றாள். கண்ணகியார், "இன்புறு தங்கணவர் இடரெரி அகமூழ்கத் துன்புறுவன நோற்றுத் துயருறு மகளிரைப் போல், மன்பதையலர் தூற்ற மன்னவன் தவறிழைப்ப, அன்பனை யிழந்தேன்யான் அவலங் கொண்டழிவலோ" என்றும், துயருறு மகளிரை, "துறைபல திறமூழ்கித் துயருறு மகளிர்" என்றும், "கைம்மைகூர் துறைமூழ்கும் கவலைய மகளிர்" என்றும் இகழ்ந்து கூறுதல் (சிலப்.18:34-51) காண்க (பகுதி II, ப.100) என்று சிலப்பதிகார மேற்கோள் காட்டி நிறுவுகின்றார் உரைவேந்தர்.

உவமை நயம்

'உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்' என்பது தொல்காப்பிய உவமவியலில் வரும் ஒரு நூற்பா (பொருளதிகாரம், 283). "உவமானமும் பொருளும் தம்மின் ஒத்தன என்று உலகத்தார் மகிழ்ச்சி செய்தல் வேண்டும்" என இந்நூற்பாவிற்குப் பொருள் உரைப்பார் பேராசிரியர். புறநானூற்றுப் பாடல்களில் இடம்பெறும் பல உவமைகளுக்கு அரிய விளக்கங்கள் தந்துள்ளார் உரைவேந்தர். நட்பு என்றதும் நம் நினைவிற்கு வருபவர்கள் கபிலர் - பாரி; அதியமான் - ஔவை; கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் ஆகியோர். அதியமான் நெடுமான் அஞ்சி ஒருமுறை வேட்டைக்குச் சென்றபோது அரிய நெல்லிக்கனி ஒன்று கிடைத்தது. அதனையுண்போர் நெடிது வாழ்வர் என்பர். அதனால், அந்நெல்லி மரத்துக் கனியைப் பறித்துக் கொண்டு வந்த அதியமான், அதனைத்தானே உண்ணாது, தன்பால் வந்த ஔவைக்குத் தந்தான். அந்நெல்லிக்கனியின் உண்மையை அறிந்த ஔவையார், பெருவியப்புற்று,

'பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்அகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்குஈந் தனையே' (புறம்.91)

என்று பாடுகின்றார்.

'நீலமணி மிடற்று ஒருவன் போல மன்னுக' என்னும் உவமை சிவபெருமானைக் குறிக்கும். இவ்வுவமையை விளக்குமிடத்து, "நீலமணி மிடற்றொருவன் என்றவிடத்து, நீலமணி நிறம் நஞ்சுண்டமை நினைப்பித்து, 'விண்ணோரமுதுண்டுஞ் சாவ, ஒருவரும் உண்ணாத நஞ்சுண்டிருந் தருளச்' செய்யும் சிறப்பைப் புலப்படுத்துகிறது. இறைவன் நஞ்சினைத் தானுண்டு அமுதினை விண்ணோர்க்கு வழங்கியது போல, அதியமானும் நெல்லிக்கனியை ஔவைக்கீந்து சிறப்புற்றான். தன்னை நெடிது வாழப்பண்ண வேண்டு மெனக் கருதிய அவன் கருத்தை வியந்த ஔவையார், அவனும் இறைவன்

போன்ற செய்கையுடையனாயது பற்றி, அவ்விறைவனே போல நிலைபெறுதல் வேண்டுமென் றெண்ணி, 'ஒருவன்போல மன்னுக பெரும நீயே' என்றார் (புறம்.I, ப.216) என விளக்குகிறார் உரைவேந்தர்.

மேற்கோள் காட்டி விளக்குதல்

'ஆய்ந்து ஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்' (குறள்.792)

என்று 'நட்பாராய்தல்' குறித்து வள்ளுவர் கூறுவதுபோல், சோழன் நல்லுருத்திரன் பாடிய புறநானூற்றுப் பாடலில்' (புறம்.190) எலிபோலும் மனமும் தாம் உடையவற்றை மேலும் மேலும் பெருக்கிக் கொள்ளும் உள்ளமும் உடையாருடைய கேண்மை எமக்கு வேண்டா; தான் செய்யும் வேட்டத்தின்கண் மிக்க பசியுற்ற காலையும் இடம் வீழ்ந்ததை விடுத்து வலம் வீழ்ந்ததையே உண்ணும் விறல் படைத்த புலிபோலும் மனமும் உரனமைந்த உள்ளமும் உடையவர் நட்புக் கலந்த வாழ்வே வேண்டுவதாம்' (ப.412) என்று பாடியுள்ளான்.

'எலிமுயன் றனைய ராகி யுள்ளதம்
வளன்வலி யுறுக்கும் உளமி லாளரொடு
இயைந்த கேண்மை இல்லா கியரோ
... ...
புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்து
உரனுடை யாளர் கேண்மையொடு
இயைந்த வைகல் உளவா கியரோ' (புறம்.190)

'தன் அளை நிறைய வைத்துக் கொண்டதாயினும், அதற்கென்று உழைத்தவர் வேறாக, அவரது உழைப்பின் பயனாக வந்த விளைவைத் தான் கவர்ந்து கோடலின், 'சிறிய முயற்சி' யென்றார். உள்ள மிகுதி உள்ளத்தின் உயர்வு; மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு' (குறள்.595) என்பது காண்க. உள்ளத்தில் மெலிவு இல்வழி, உயர்வும் அதனைச் செயற்படுத்தற்குரிய திண்மையும் ஒருங்குஉண்டாதலின், 'மெலிவில் உள்ளத்து உரனுடையாளர்' என்றார். புலி இடம் வீழ்ந்தது உண்ணாது என்பதைப் பிற சான்றோரும், 'தொடங்கு வினை தவிரா அசைவினோன்தாள் கிடந்து உயிர் மறுகுவ தாயினும் இடம்படின், வீழ்களிறு மிசையாப் புலி' (அகம்.29) என்று கூறுதல் காண்க" (புறம்.I, ப.413) என்று இவ்வுவமையினைப் பிற நூற் சான்றுகளுடன் விளக்கிச் செல்கின்றார் உரைவேந்தர்.

இல்வாழ்க்கை இடும்பைக்கே கொள்கலமாதலை நன்குணர்ந்த ஓரேருழவர் என்னும் புலவர்,

‘அதளெறிந் தன்ன நெடுவெண் களரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல
ஓடி உய்தலுங் கூடுமன்
ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே.’ (புறம்.193)

என்னும் பாடலைப் பாடியுள்ளார். இப்பாடல் உரையில் உரைவேந்தர் தொல்காப்பியம், சீவக சிந்தாமணி முதலான நூல்களினின்றும் மேற்கோள் காட்டி விளக்கியுள்ளார்:

‘களரில் நின்ற மான்தன்னைத் துரத்தும் ஒருவன், தான் வழுக்கி வீழ்தற்கு இடம் உண்மையின், ‘ஓடி உய்தல் கூடும்’ என்றார். நன்னெறி களர் போல்வது என்றது, ஒக்கல் வாழ்க்கை செல்லவொட்டாது தடுக்கும் சேறும் வழுக்குப் பகுதியுமாத் தளைத்தலின் எவ்வகையாலும் தன்னை இன்றியமையாத மனைவாழ்வே ஒருவனுக்கு ஒக்கல் வாழ்க்கை ஆதலால் அதனை எடுத்தோதினார். இப் பாட்டின்கண் ஆசிரியர், தான் இல்வழி தாங்குவாரின்றிக் கெட்டுத் தலைத்தலைச் சிதறியோடி, அறமும் பொருளும் இன்பமும் பெறும் வகைகெட்டு அழியத்தக்க மனை வாழ்க்கையில் இருப்போனே உய்தல் கூடாத இயல்பினன் என்று குறிக்கப்படுகின்றான். ஆசிரியர் தொல்காப்பியர், “காமஞ்சான்ற கடைக்கோட் காலை, ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும், சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே” என்றதும் இக்கருத்தையே வற்புறுத்துவதை அறிந்து கொள்க. இக்கருத்தையே திருத்தக்கதேவர், “காட்டகத்தொரு மகன் துரக்குமாக்காலை ஒட்டுடைத் தாமெனின் உய்யும் தங்களை, ஆட்டியி டார்உயிர் அளைந்து கூற்றுவன், ஈட்டிய விளைமதுப் போல உண்ணுமே” (சீவக.1919) என்றார்” என்று ஒக்கல் வாழ்க்கை எனினும் மனைவாழ்க்கையே ஏற்புடையது என்பதை தொல்காப்பியம், சீவக சிந்தாமணி நூல்களி னின்றும் மேற்கோள் காட்டிச்சிறந்த முறையில் விளக்கி யுள்ளார் உரைவேந்தர்.

கல்வெட்டுச் சான்றுகள் காட்டல்

உரைவேந்தரின் தனிச்சிறப்புகளில் ஒன்று கல் வெட்டுக்களைப் படித்தறியும் திறன் ஆகும். கல்வெட்டுக் களில் ஆழ்ந்த பயிற்சி கொண்ட உரைவேந்தர் தாம் எழுதிய உரை விளக்கங்களில் கல்வெட்டுச் சான்றுகள் தருகின்றார்.

மாறோக்கத்து நப்பசலையார் என்னும் புலவரைப் பற்றிய முன்னுரையில், மாறோக்கம் என்னும் ஊரைப் பற்றியும், அப்புலவர் பாடிய அவியன் என்னும் மன்னன் வாழ்ந்த அவியனூர் பற்றியும் கல்வெட்டுச் சான்றுகள் இருப்பதை எடுத்துக்காட்டியுள்ளார் உரைவேந்தர்.

"மாறோக்கம் என்பது கொற்கையைச் சூழ்ந்த பகுதியாகும். இஃது இடைக்காலத்துக் குடநாட்டையும் முள்ளி நாட்டையும் தன்கண் கொண்டிருந்தது. இப்பகுதியிலுள்ள மாறமங்கலத்தை நற்குடி வேளாளர் வரலாறென்னும் தமிழ்நூல் (அகத்.38) ஒகமாநகரென்று குறிக்கிறது. மாறமங்கலமாகிய ஓகமாநகர்ப் பகுதி குடநாட்டுப்பகுதி; மாறோக்கத்து முள்ளி நாட்டில் கல்லிடைக்குறிச்சியும் சேரலன்மாதேவியும் இருந்தன எனக் கைந்நிலையென்னும் நூற்குறிப்பால் அறிகின்றோம்." (புறம்.II, 398) என்று வரலாற்றுச் சான்றுகள் காட்டி விளக்குகின்றார்.

மாறோக்கத்து நப்பசலையார் அவியன் என்னும் குறுநில மன்னனைப் புகழ்ந்து ஒரு பாடல் பாடியுள்ளார். (புறம்.383) அவியன் வாழ்ந்த ஊர் அவன் பெயரால் அவியனூர் என்று வழங்கப்பட்டது. இவ்வூர் குறித்து உரைவேந்தர் குறிப்பிடுவதாவது:

"அவியன் திருமுனைப்பாடி நாட்டில் வாழ்ந்தவன். அவன் பெயரால் அவியனூர் என்றோர் ஊர் பண்டைநாளில் இருந்தது. அஃது அவியனூர் நாட்டுக்குத் தலைநகராகவும் இருந்ததெனத் திருவதிகைக் கல்வெட்டொன்று (AR.No.419 of 1921) கூறுகிறது... இந்த அவியன் வழி வந்தவர்கள் "பாண்டி நாட்டுத் திருப்பத்தூர்ப் பகுதியைச் சேர்ந்த சூரைக்குடி யென்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு பிற்காலத்தே விளக்கமுற்றிருந்தனர். அவருள் சிலர் விசயாலயதேவ ரென்றும் மாளவ சக்கரவர்த்தியென்றும் தம்மைக் கூறிக் கொள்வாராயினர். ஆயினும் பழைய தம்குடி முதல்வனான அவியன் பெயரையும் மறவாது பேணி வந்தனர். சடாவர்மன் வீரபாண்டியன் காலத்தில் அவியன் பெரியநாயனான விசயாலய தேவன் (AR.No.119 of 1908) என்பவனுடைய கல்வெட்டொன்றும், அவியன் மாளவ சக்கரவர்த்தி (AR.No. 119 of 1908) என்பவன் கல்வெட்டொன்றும் திருப்பத்தூர் திருத்தளியாண்டார் கோயிலில் உள்ளன. இந்த அவியர் கட்குக் குடிமுதல்வனான அவியனைத்தான் மாறோக்கத்து

நப்பசலையார் "குன்றுபல கெழீஇய கான்கெழு நாடன் கடுந்தேர் அவியன்" என்றும், "காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார், களமலி கள்ளின் நற்றேர் அவியன்" (அகம்.271) என்றும் சிறப்பித்துள்ளனர். (புறம்.II, ப.398) என்று கல்வெட்டுக்களைச் சான்று காட்டி விளக்கியுள்ளார் உரைவேந்தர்.

மல்லிகிழான் காரியாதியை ஆவூர்மூலங்கிழார் பாடிய பாடலுக்கு (புறம்.177) விளக்கம் தருமிடத்து, மல்லி கிழானைப் பற்றியும், அவன் வாழ்ந்த ஊர் பற்றியும் கல்வெட்டுச் சான்று காட்டி விளக்கிச் செல்கின்றார் உரைவேந்தர்:

"இம்மல்லிகிழானுக்கு இப்போதுள்ள சீவில்லிபுத்தூர் உரியது. சீவில்லிபுத்தூர் வைத்தியநாதசாமி கோயில் கல்வெட்டுக்களிலும், ஆண்டாள் கோயில் கல்வெட்டுக் களிலும், "மல்லிநாட்டுச் சீவில்லிபுத்தூர்" என்றே குறிக்கப் படுகிறது. இந்த மல்லிநாட்டுப் புத்தூர் பின்னர் மல்லிபுத்தூர் என்றும், பிற்காலத்தில் வில்லிபுத்தூரென்றும் மருவியது. வில்லிபுத்தூராகி வழங்கிய காலத்தில் பெரியாழ்வாரும், திரு ஆண்டாளும் தோன்றி இதனைத் தம்முடைய தெய்வப் பாடலால் சீவில்லிபுத்தூர் ஆகுமாறு செய்தனர். இவ்வூர்க்கு அவ்வப்போது மலையிலிருந்து வரும் பழையரே இப் பாட்டின்கண் கூறப்படும் குடவராக இருக்கலாம். இப்பழையர் 'பளியர்' என இந்நாட்டவரால் வழங்கப்படுகின்றனர்" (I,ப.387)

இவ்வாறு உரைவேந்தர், புறநானூற்றின் பல ஏடுகளைக் கொண்டு ஆராய்ந்து, குறைப் பாடல்களாக இருந்தவற்றை இயன்ற வரை நிறைவு செய்து, முழு நூலுக்கும் விரிவுரை எழுதியுள்ளார். ஒவ்வொரு பாடலுக்கும் முன்னும் பாடினோர், பாடப்போட்டோர் வரலாறு பற்றிய அரிய ஆராய்ச்சிக் குறிப்புகளையும், புறநானூற்றுப் பாடல்களில் காணப்படும் சொல்நயம், பொருள்நயம், தொடர் நயம், உவமை நயம், அணிநயம் முதலானவற்றையும், சங்க கால மக்களின் வாழ்வில் காணப்படும் சில மரபுகளையும், வாழ்வியல் செய்திகளையும், மக்களின் பழக்க வழக்கங்களையும் சுட்டிக் காட்டி விளக்கியுள்ளார். மன்னர்கள், புலவர்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும், கல்வெட்டுச் சான்றுகளையும் காட்டித் தம் ஆய்வுக்கு வலு சேர்த்து நிறைவான உரை தந்துள்ளார் உரைவேந்தர்.

3. ஐங்குறுநூறு உரைத்திறன்

"உரைவேந்தர், பல்வேறு அரிய பல செய்திகளை உரைநூலின் இடையிடையே கூறிச் செல்வார்."

*- ச.சாம்பசிவனார்**

எட்டுத்தொகையில் அமைந்த ஐந்து அகப்பொருள் நூல்களுள் ஒன்று ஐங்குறுநூறு. இந்நூல். மூன்றடி முதல் ஆறடிக்கு உட்பட்ட பாக்களை உடையது. மருதம், நெய்தல், குறிஞ்சி, முல்லை, பாலை என்னும் ஐந்து திணைகளைப் பற்றி முறையே, ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் ஆகியோரால் திணைக்கு நூறாகப் பாடப்பட்ட 500 பாடல்களைக் கொண்ட நூல் இது.

'மருதம் ஓரம்போகி நெய்தல் அம்மூவன்
கருதும் குறிஞ்சி கபிலர் - கருதிய
பாலை ஓதலாந்தை பனிமுல்லை பேயனே
நூலை ஓதுஐங்குறு நூறு.'

என்னும் பழைய வெண்பா ஒன்று இதனை எடுத்துக்காட்டு கிறது. ஐங்குறுநூற்றை முதலில் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார்; தொகுப்பித்த வள்ளல் கோச்சேரமான் யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரமன்னன் ஆவர். இத்தொகைநூலை அரிதில் முயன்று தேடி, பனையேட்டில் பிழைபடக் கிடந்த நிலையினை மாற்றிச் செம்மை செய்து கி.பி.1903ஆம் ஆண்டு முதன் முதலாக வெளியிட்டவர் தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதையராவார். 1938ஆம் ஆண்டில் உரைவேந்தர் எழுதிய உரையுடன் 'ஐங்குறுநூறு மருதம் மூலமும் விளக்க வுரையும்' என்னும் தலைப்பில் இந்நூல் வெளிவந்தது.

---

* உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை, ப.72.

பின்னர் பிற நானூறு பாடல்களுக்கும் உரைவேந்தர் எழுதிய உரையுடன் 1957ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக ஐங்குறுநூறு வெளிவந்தது; இரண்டாம் பதிப்பு 1978-ஆம் ஆண்டு வெளியானது. முதலில் வெளிவந்த உ.வே.சா.வின் உரையையும், தமக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியர் சீர்காழி கோவிந்தசாமி ரெட்டி யாரின் குறிப்புரையையும், திருத்தங்களையும் ஆங்காங்கே சுட்டிச் சென்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார் உரைவேந்தர் (ஐங்குறுநூறு மூலமும் விளக்கவுரையும், முதற்பதிப்புரை, ப.xxxii)

உரைநெறி

> 'முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
> நுவலுங் காலை முறைசிறந் தனவே
> பாடலுள் பயின்றவை நாடுங் காலை.'
>
> (தொல்.அகத்.நூ.3)

என்று தொல்காப்பியர் கூறுவதற்கேற்ப, ஐங்குறுநூற்றில் அமைந்த ஐந்து திணைகளுக்கு உரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றை அவ்வத் திணைப்பாடல்களுக்கு முன் முன்னுரையாக எடுத்துரைக் கின்றார் உரைவேந்தர்.

ஐங்குறுநூற்றுப் பாடல்கள் பத்துப் பத்துப் பாடல் களாகப் பகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பத்துக்கும் ஒவ்வொரு பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. சான்றாக, மருதத் திணைப் பாடல்கள் வேட்கைப் பத்து, வேழப்பத்து, கள்வன் பத்து, தோழிக்குரைத்த பத்து, புலவிப் பத்து, தோழி கூற்றுப் பத்து, கிழத்தி கூற்றுப் பத்து, புனலாட்டுப் பத்து, புலவி விராய பத்து, எருமைப் பத்து எனப் பத்துத் தலைப்புகளில், பத்துப் பத்துப் பாடல்கள் கொண்டுள்ளன. ஒவ்வொரு பத்துக்கும் முதலில் விளக்கம் கூறும் உரைவேந்தர், பின்னர் பாடலையும், பழைய உரையையும், உரை என்னும் பெயரில் விரிவான விளக்கவுரையும் இறுதியில் தொகுப்புரையும் தந்து செல்லும் உரைநெறியைப் பின்பற்றியுள்ளார்.

தொடக்கவுரை

எடுத்துக்காட்டாக வேட்கைப் பத்து என்னும் முதல் பத்திற்கு உரைவேந்தர் தரும் விளக்கம் வருமாறு:

1. "இஃது அகனைந்திணையிடத்து அன்பு நெறியின் பாற்படும் களவு, கற்பு என்னும் இருவகை ஒழுக்கத்திலும் ஒழுகிப் போந்த தலைமகன், தான் அவ்வொழுக்கத்திற் பிரிந்துறைந்த ஞான்று, தலைமகளும் தோழியும் ஒழுகிய திறம் வேட்டு, தோழியொடு சொல்லாடி வினவிய வழி, தோழி, தலைமகளின் வேட்கைத் திறமும், தன் வேட்கைத் திறமும் கூறுதற் பொருளாக வரும் பாட்டுக்களின் தொகுதி; ஆகலின் இஃது இப்பெயர் பெறுவதாயிற்று. இதனுள் முதல் ஐந்து பாட்டுக்கள் கற்பினும், ஏனையைந்தும் கனவினும் நிகழ்ந்தனவாம்.

வேட்கையாவது, பொருள்கண் மேற் செல்லுகின்ற பற்றுள்ளம், ஈண்டு, அஃது அப்பற்றுள்ளத்தால் நிகழ்ந்த ஒழுக்கத்தின் மேற்று.

ஈண்டுக் கூற்று நிகழ்த்துவோர் தலைமகளது மனையகம் புகுந்து தகுவன உரைக்கும் உரிமையினையுடைய வாயில்களுள் தலையாயவளாகிய தோழியாகலின், அவ்வாயில்களால் கூறப்படுதற்குரிய தலைமகள் மாண்பு களைக் கூறுகின்றாள் என அறிக. மாண்புகளாவன, "கற்பும் காமமும், நற்பாலொழுக்கமும், மெல்லியற் பொறையும், நிறையும் வல்லிதின், விருந்து புறந்தருதலும், சுற்றம் ஓம்பலும். பிறவுமன்ன கிழவோள் மாண்புகள்" என வருதலாலறிக. இச்சூத்திரத்தில் 'பிறவும் அன்ன' என்றதனால், அரசர்க்கு வெற்றியும், உலகுயிர்கட்கு மழையும் அறமும் போல்வன விழைதலும் கொள்ளப்படும்" (ஐங்குறுநூறு, மூலமும் விளக்கவுரையும், பக்.11-12)

புலவர் பற்றிய குறிப்பு

ஒவ்வொரு திணையின் தொடக்கத்திலும், அகத் திணையைப் பாடிய புலவரைப் பற்றிய குறிப்பையும், அவரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும் தந்து செல்வது உரைவேந்தரின் வழக்கம். மருதத்திணை பாடிய ஓரம் போகியார் பற்றி அவர் தரும் விளக்கம் வருமாறு:

"ஓரம்போகியார் என்பது இவரது இயற்பெயர். இவர் ஆதன் அவினியென்னும் சேரமன்னன் ஆதரவு பெற்றவர். வடகொங்கு நாட்டில் காணப்படும் அவினியாறு இவன் பெயரால் வெட்டப்பட்டது போலத் தோன்றுகிறது. இவர்

ஏனைச் சோழநாடு பாண்டி நாடுகளில் விளங்கிய பேரூர்கள் பலவற்றைக் கண்டிருக்கின்றார்; அந்நாடுகளில் வாழ்ந்த குறுநில மன்னர்களான மத்தி, விரான் முதலாயினரால் சிறப்பிக்கப் பெற்றுள்ளார்" (ஐங்குறுநூறு, ப.9). என்றும், அவரது பாடல் வரிகளின் மூலம் அவரது புலமை ஆழம் வெளிப்படுவதையும் கூறிப் புலவரை அறிமுகப்படுத்து கிறார் உரைவேந்தர்.

நெய்தல் திணைப் பாடல்கள் பாடிய அம்மூவனார் பற்றி உரைவேந்தர் தரும் குறிப்பு:

"அம்மூவனார் என்பது இச்சான்றோரது இயற்பெயர். மூவன் என்னும் இயற்பெயரே, சிறப்புணர்த்தும் அகரத்தை முதற்கண்ணும், ஆர் விகுதியை இறுதியில் பெற்று அம்மூவனார் எனப் பாராட்டிக் கூறப்படுகிறது என்று கருதுவாருமுண்டு. "ஆயினும், இவர் பாடலில் மேலைக் கடற்கரையின்கண் உள்ள தொண்டி மாந்தை முதலாய மேலைநாட்டு ஊர்களைச் சிறப்பித்துப் பாடியிருப்பது பற்றி இவர் சேரநாட்டு மேலைக் கடற்கரையில் இருந்தவ ரென்று கருதற்கு இடமிருத்தலாலும், இக்காலத்தும் அந்நாட்டில் அம்மு, திம்மு, திப்பு என்னும் பெயர்கள் மக்களுக்கு இடப்பட்டு வழங்கி வருதலாலும் இவரது இயற்பெயர் அம்மூவென்றும் இருக்கலாம்" என்பர் பின்னத்தூர் திரு.அ.நாராயணசாமி ஐயர். சேரமான் கணைக்கால் இரும்பொறை வாழ்ந்த போது சேரநாட்டுப் பகுதியில் மூவன் என்பான் ஒருவன் இருந்து அவனோடு பொருது பல்லிழந்து கெட்டான் என்று பொய்கையார் கூறுவதால், மூவன் என்ற பெயருடையார் அந்நாளில் இருந்தமை துணியப்படும்" (ஐங்குறுநூறு, ப.278) என்று வரலாற்றுச் சான்றுகள், பிற உரையாசிரியர் குறிப்புகள், மக்களிடையே காணப்படும் வழக்கங்கள் முதலானவற்றையும் கூறி அறிமுகப்படுத்துவது அவரது ஆய்வுத் திறனுக்கு ஒரு சான்று ஆகும்.

'தொண்டிப் பத்து' என்னும் பகுதியின் முன்னுரையும், வரலாறு, கல்வெட்டு, அறிஞர்களின் குறிப்பு முதலிய வற்றைக் கொண்டிருத்தல் கண்கூடு.

"சேர நாட்டின் வடபகுதி குடநாடு எனவும், தென்பகுதி குட்டநாடு எனவும் விளங்கினமையின், குடநாட்டுக்குத் தொண்டி நகரமும், குட்ட நாட்டுக்கு வஞ்சியும் சிறப்புற்றன.

பின்னர், குடநாட்டுப் பிரிவுகளுள் ஒன்றான பொறை நாட்டுக்கும் தொண்டியே தலைநகரமாயிற்று. இஃது இப்போது குறும்பொறை நாட்டுப் பகுதியில் ஒரு சிற்றூராய்க் காட்சியளிக்கின்றது. சிலர், இப்போது கடலுண்டி என வழங்கும் பகுதியே பண்டைத் தொண்டியாகலாம் எனக் கருதுகின்றனர். இதன் பழம்பெயர் மண்ணூர் என்று அங்குள்ள கல்வெட்டு (S.I.I. Vol.V. No.782) கூறுவதை அவர் அறியாமையாலும், இவ்வூரையும் அவர்கள் நேரிற்சென்று காணாமையாலும் தொண்டி எனத் தவறாகக் கூறிவிட்டனர் என அறிதல் வேண்டும்.

தொண்டி நகர் கடற்கரையில் இருந்தமையின், மேலை நாட்டு யவனர்கட்கு (Ionians) அது நன்கு தெரிந்திருந்தது. பெரிப்புளூஸ் ஆசிரியர் பிளினி, தாலமி முதலிய யவன அறிஞர் குறிப்புகளில் இத்தொண்டி நகரம் குறிக்கப் படுகிறது. கிழக்கில் மலையும், வடக்கிலும் தெற்கிலும் நன்செய் வயல்களும் மேற்கில் கடற்கரை கானலும் கொண்டு விளங்கும் இத்தொண்டி இன்றும் தொன்மை சிறப்பைப் புலப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறது' (ஐங்குறுநூறு, ப.392) என்று தொண்டியின் அன்றைய நிலையையும், இன்றைய நிலையையும் ஒப்பிட்டுக் காட்டிச் செல்வது குறிப்பிடத்தக்கது.

மேற்கோள் காட்டுதல்

உரைவேந்தர் தமது உரை விளக்கத்தில் பழைய உரைகாரரர் கூறிய கருத்தைச் சுட்டுவதுடன், பல சங்க இலக்கியங்களினின்றும் தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களிலிருந்தும், இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர் உரைக் குறிப்புக்களினின்றும் மேற்கோள் காட்டிச் செல்வது, அவரது புலமை நயத்தை எடுத்துக்காட்டுவதாய் அமைகின்றது.

'தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளை தின்னும் முதலைத்து அவன் ஊர்'(ஐங்.பா.24)

என்று தலைவனது ஊரைப்பற்றிக் குறிப்பிடுகின்றார் ஓரம்போகியார். இதற்கு, 'தாய் சாவப் பிறக்கும் கள்வனையும், பிள்ளை தின்னும் முதலையினையும் உடைய ஊர் என்றதனால், முயங்கிய மகளிர் தொன்னலம் கெடுக்கும் அன்பின்மையும், இனி முயங்கும் மகளிர் நலம் நுகர்ந்து

பிரியும் அருளின்மையும் உடையன் என்றாளாம். இது தலைமகள் கொடுமை உணர்த்திய துனியுறு கிளவி. இதுவே பழையவுரைகாரரர்க்கும் கருத்தாதல் அறிந்து கொள்க” (ஐங்.ப.81) என்று பழைய உரையாசிரியர் கருத்தினையும் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார் உரைவேந்தர்.

அம்ம வாழி தோழி மகிழ்நன்
நயந்தோர் உண்கண் பயந்து பனிமல்க
வல்லன் வல்லன் பொய்த்தல
தேற்றான் உற்ற சூளவாய்த தல்லே (பா.37)

என்னும் பாடலுக்கு,

‘தலைமகளைச் சூளினால் தெளித்தான் என்பது கேட்ட காதற் பரத்தை தலைமகட்குப் பாங்காயினார் கேட்பத் தன் தோழிக்குச் சொல்லியது.’ என்று துறை விளக்கம் அமைந்துள்ளது. ‘காதற் பரத்தை’ என இவ்விளக்கத்தில் இடம்பெறும் சொல்லுக்கு, பரத்தையர் பற்றிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர், நாற்கவிராச நம்பி ஆகிய உரை யாசிரியர்கள் கருத்துக்களை மேற்கோள் காட்டி விளக்கி யுள்ளார் உரைவேந்தர்:

“பரத்தையர், காதற் பரத்தை, இற்பரத்தை, சேரிப் பரத்தை எனப் பலவகையாகக் கூறப்படுவர். அவரைத் தொல்காப்பியர் பரத்தையர் எனப் பொதுப்பட மொழிவர்.

இனி, காமக்கிழத்தியர், பரத்தையர் என வேறுபடுத்து, “காமக்கிழத்தியராவார் பின்முறை யாக்கிய கிழத்தியர்; அவர் மூவகைப்படுவர்; ஒத்த கிழத்தியரும், இழிந்த கிழத்தியரும், வரையப்பட்டாரும் என. ஒத்த கிழத்தியர், முந்துற்ற மனையாளன்றிக் காமம் பொருளாகப் பின்னும் தன் குலத்துள்ளாள் ஒருத்தியை வரைதல்; இழிந்தாராவார், அந்தணர்க்கு அரச குலத்தினும், வணிக குலத்தினும், வேளாண் குலத்தினும் கொடுக்கப்பட்டாரும், அரசர்க்கு ஏனையிரண்டு குலத்தினும் கொடுக்கப்பட்டாரும், வரையப் பட்டார், செல்வராயினார் கணிகைக் குலத்தினுள்ளார்க்கு இற்கிழமை கொடுத்து வரைந்து கொள்ளப்பட்டார். அவர், கன்னியில் வரையப்பட்டாரும், அதன் பின்பு வரையப் பட்டாரும் என இருவகையர். அவ்விருவரும் உரிமை பூண்டமையாற் காமக்கிழத்தியர்பாற்பட்டனர். பரத்தை

யராவார் யாரெனின், அவர் ஆடலும் பாடலும் வல்லராகி, அழகும் இளமையுங் காட்டி இன்பமும் பொருளும் வெஃகி ஒருவர் மாட்டும் தங்காதார்" என்பர் ஆசிரியர் இளம்பூரணர் (தொல்.149 உரை).

நச்சினார்க்கினியர், காமக்கிழத்தியர், பரத்தையர் என்பாருள், "காமக்கிழத்தியராவார் கடனறியும் வாழ்க்கை யுடையவராகிக் காமக்கிழமை பூண்டு இல்லறம் நிகழ்த்தும் பரத்தையர்" என்றும், "அவர் தலைவனது இளமைப் பருவத்தோரும், இடைநிலைப் பருவத்தோரும், காமஞ் சாலா இளமையோரும் எனப் பல பகுதியினராம்" என்றும், ஏனைப் பரத்தையர், "கூத்தும் பாட்டும் உடையராகி வரும் சேரிப் பரத்தையரும், குலத்தின்கண் இழிந்தோரும், அடியரும்; வினைவலப்பாங்கினரும் பிறருமாம்" என்றும் கூறி இளம்பூரணர் ஒத்த கிழத்தியர் முதல் மூவகையினராகக் கூறிய பாகுபாட்டைச் சிறப்புடைத் தலைவியரோடு பரத்தையரையுங் கூட்டிக் காமக்கிழத்தியரென்று சூத்திரஞ் செய்யின் மயங்கக் கூறல் என்னும் குற்றம் தங்குமாகலின், அஃது ஆசிரியர்க்குக் கருத்தன்று என மறுத்து, "சான்றோர் பலரும் காமக் கிழத்தியரைப் பரத்தையராகத் தோற்றுவாய் செய்து கூறுவாரும் உணர்க" (தொல்.பொ.151) என்பர்.

நாற்கவிராச நம்பியார், "ஒருவன் தனக்கே யுரிமை பூண்டு, வருகுலப் பரத்தையர் மகளிராகிக், காமக்குவரைந்தார் காமக்கிழத்தியர்", "யாரையும் நயவா வியல்பிற் சிறந்த, சேரிப் பரத்தையர் மகளிராகிக் காதலிற் புணர்ந்தோர் காதற் பரத்தையர்", "அவருளும் வரைதற்குரியார் உளரே" (113-5) என்பர் - இஃது உரைகளில் வருமாறு. நாட்டில் அடிக்கடி நிகழ்ந்த போர்களால், மகளிரினும் ஆடவர் தொகை குறைந்ததாக, ஆடவரின்றி மிக்க மகளிர் பரத்தையர் எனப்பட்டனர். பரத்தையர், மிக்கவர். இது வரலாறு காட்டுமாறு (ஐங்குறுநூறு, பக்.108-109) இவ்வாறு பரத்தை என்பதற்கு இளம்பூரணர் , நச்சினார்க்கினியர். நாற்கவிராச நம்பி ஆகியோரது உரை விளக்கத்தைத் தருவதோடு அமையாது, தம்முடைய கருத்தையும் நிலைநாட்டிச் செல்வது, உரைவேந்தரது அறிவுத் திறனை உணர்த்துவதாக அமைகின்றது.

கருத்து நயம்

உரைவேந்தர், தாம் வரையும் உரையில் ஒவ்வொரு பாடலிலும் அமைந்துள்ள கருத்தை விரிவாக விளக்கிச் செல்லும் மரபைப் பின்பற்றியுள்ளார்.

'வாழி ஆதன் வாழி அவினி
நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
எனவேட் டோளே யாயே யாமே
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாணர் ஊரன் வாழ்க
பாணனும் வாழ்க எனவேட் டேமே' (பா.1)

என்பது மருதத் திணையில் அமைந்த முதல் பாடல்.

"காவற்பொருட்டு அரசன் வாழ்க; விருந்தாற்றுதற் பொருட்டு நெற்பல பொலிக; இரவலர்க்கு ஈதற்பொருட்டுப் பொன் மிக வுண்டாகுக" என யாய் இல்லறத்திற்கு வேண்டுவனவே விரும்பி ஒழுகியதல்லது பிறிது நினைத்திலள்; அவள் இத்தன்மையளாக, நீ ஒழுகிய ஒழுக்கத்தால் நினக்கும், நின்னொழுக்கத்திற்குத் துணையாகிய பாணனுக்கும் தீங்கு வருமென்று அஞ்சி, யாணர் ஊரன் வாழ்க, பாணனும் வாழ்க என விரும்பினேம் யாங்கள் என்றவாறு" என்பது இப்பாடற்கு அமைந்த பழைய உரை.

இப்பாடலின் விளக்கவுரையில் இல்லற மாண்பினை எடுத்துரைக்கின்றார் உரைவேந்தர். "அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், அரசர் முதலாயினாரை இன்னவாறு வழிபடுக எனக் கணவன் முதலாயினார் கற்பித்தவாற்றால் வழிபடுதல் கற்பாகலின். வாழி ஆதன் வாழி அவினி என்றும், இல்லிருந்து நல்லறம் புரிவார்க்கு விருந்தோம்பல் தலையாய அறமாகலின், அது செய்தற்கு, 'நெற்பல பொலிக' என்றும், தங்கண் வந்து இரந்தார்க்குப் பொன் முதலாயின கொடுத்து இசைநடுதல் இல்வாழ்வின் பயனாதல் குறித்து, பொன் பெரிது சிறக்க என்றும் தலைமகள் வேட்டாள் என்றாள். "அருந்திறல் அரசர் முறைசெயின் அல்லது, பெரும் பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது' (சிலப்.28:207-208) என்றும், 'மன்னவன் புறந்தர வருவிருந் தோம்பித் தன்னகர் விழையக் கூடின் அது மன்பொருள்' (கலி.8) என்றும் சான்றோர் கூறுமாற்றால் இவற்றை வேட்டல் தலைமகட்கு அறமாதல் அறிக. இது

புரையறந் தெளிதல்” (ஐங்குறுநூறு, ப.14) என்று தலைமகட்கு உரிய அறத்தினையும், அவளது இல்லற மாண்புகளையும் தக்க சான்றுகளுடன் எடுத்துக் காட்டி விளக்கியுள்ளார்.

‘நனைய காஞ்சிச் சினைய சிறுமீன் யாணர் ஊரன்’ (பா.1) என்னும் அடியில் உள்ளுறைப் பொருள் அமைந்துள்ளது. தலைமகளையும் பொது மகளிரையும் தலைமகன் ஒப்பக் கருதியொழுகுகின்றான் என்பதனை உள்ளுறையாற் கூறினமையின் வெளிப்படக் கூறிற்றிலள். காஞ்சியின் பூவும், மீனின் சினையும் ஒப்ப விளையும் ஊரன் என்றதனால் குலமகளிரையும் பொதுமகளிரையும் ஒப்பக் கருதுகின்றான் என உள்ளுறையுவமம் கொள்ளப்படும்’ என்று இப்பாடலில் உள்ள உள்ளுறை உவமத்தையும் எடுத்துக் காட்டுகிறார் உரைவேந்தர் (ஐங்குறுநூறு, ப.15).

உள்ளுறை - விளக்கம்

உள்ளுறை உவமமாவது ஏனை வெளிப்படை உவமம் போலாது, உணர்த்தற்கரிதாய், களவு, கற்பு ஆகிய இருவகைக் கைகோளின் கண்ணும், வினை பயன் மெய் உரு பிறப்பு என்னும் ஐவகை நிலைக்களனுடைத்தாய், தெய்வம் ஒழிந்த கருப்பொருளே பற்றிச் சான்றோர் செய்யுட்கண் வரும் உவம வகை.

‘உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகஎன
உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்’
(தொல்.பொருள்.நூ.994)

என்பது உள்ளுறை உவமம் குறித்து வரும் தொல்காப்பிய நூற்பா.

‘வாழி ஆதன் வாழி அவினி
பகைவர் புல்லார்க பார்ப்பார் ஓதுக
எனவேட் டோளே யாயே யாமே
பூத்த கரும்பிற் காய்த்த நெல்லில்
கழனி யூரன் மார்பு
பழனம் ஆகற்க எனவேட் டேமே.’ (பா.4)

என்பது ஓரம்போகியார் பாடிய மருதத் திணையில் வேட்கைப் பத்தில் இடம்பெறும் பாடல்.

'ஆதன் அவினி வாழ்க என்றும், பகைவர் தம் பெருமிதம் இழந்து புல்லரிசிச் சோறு உண்க என்றும், பார்ப்பார் மறை ஓதுக என்றும், தலைமகள் இல்லத்திற்கு வேண்டுவனவே நினைந்து ஒழுகினாளாக, யாங்கள், பூத்து விளங்கும் கரும்பும் விளைந்து சிறக்கும் நெல்லும் உடைய கழனியூரனது மார்பு எல்லார்க்கும் உரித்தாகிய பழனம் ஆகாதொழிக என வேட்டொழுகினோம் என்பது இப் பாடலுக்குரிய விளக்கம். 'பூத்த கரும்பிற் காய்த்த நெல்லிற் கழனியூரன் மார்பு பழனம் ஆகற்க என வேட்டேமே' என்னும் வரியில் உள்ளுறைப் பொருள் அமைந்துள்ளது.

'தலைமகள் தான் கூடி இன்புறும் தலைவன் மார்பினைப் பரத்தையர் நோக்கினும் பொறாது புலக்கும் பான்மையள் ஆதலினாலும், உள்ளுறையால் தலைமகனது புறத்தொழுக்கத்தைக் கூறுகின்றாளாதலினாலும், ஊரன் மார்பு பழனம் ஆகற்க என வேட்டேம் என்றாள்...

இனி, பூத்துப் பயன்படாக் கரும்பினையும், காய்த்துப் பயன்படும் நெல்லினையுமுடைய ஊரன் என்றது, மகப்பயந்து பயன்படும் குலமகளிரையும். அஃதில்லாத பொதுமகளிரையும் ஒப்பக் கருதி ஒழுகுவான் என்றாளாம். பொதுமகளிர் ஈன்று பயன்படா இயல்பினர் என்பதனை. "அவரும், பைந்தொடி மகளிரொடு சிறுவர்ப் பயந்து, நன்றி சான்ற கற்பொடு எம்பாடாதல் அதனினும் அரிதே" (தொல்.பொருள். 156) எனவரும் சான்றோர் கூற்றான் அறிக" (ஐங்குறுநூறு, பக்21-22) என்று பாடலில் அமைந்துள்ள உள்ளுறைப் பொருளை விளக்குகிறார் உரைவேந்தர்.

உள்ளுறை, இறைச்சி

'நெய்தல் நிலப் பரதவர் கடலினின்றும் கொணர்ந்த கொழுவிய மீனாகிய உணவின் பொருட்டுப் பறத்தல் வலியிழந்த முதிர்ந்த குருகு தங்கியிருக்கும் துறை பொருந்திய தொண்டிநகர் போலும் இவளை மிகக் குறுகிய போதின் கண் வரைந்து இவளது நலத்தை நுகர்வாயாக' என்று தாழ்த்து வரையக் கருதிய தலைமகனைத் தோழி நெருங்கிக் கடிதின் வரைய வேண்டுமெனச் சொல்லும் பாடல் தொண்டிப்பத்தில் இடம்பெற்றுள்ளது. அப்பாடல் வருமாறு:

"சிறுநனி வரைந்தனை கொண்மோ பெருநீர்
வலைவர் தந்த கொழுமீன் வல்சிப்

பறைதபு முதுகுருகு இருக்கும்
துறைகெழு தொண்டி யன்னஇவள் நலனே" (பா.180)

இப்பாடலில் உள்ளுறைப் பொருள் அமைந்திருப்பதாகப் பழைய உரைகாரர் கூற, இப்பாடலில் இறைச்சிப் பொருள் அமைந்துள்ளதாகக் கூறுகிறார் உரைவேந்தர்.

"பரதவர் கொணர்ந்த கொழுமீன் வல்சியின் பொருட்டுப் பறைதபு நாரை தங்கியிருக்குமாறு போல, தலைமகள் வைகிய எம்மனையிடத்து வேற்றுவரைவு குறித்துச் சான்றோர் வந்துளர் என்பது உள்ளுறை. பழைய உரை காரர்க்கும் இதுவே கருத்தாதல் காண்க.

முதுமை கண்டு இரங்கிக் கொழுமீன் வல்சியினை வலைவர் எறியார் என்பதனை அறிந்து வைத்தும் குருகு அவ்வல்சிப் பொருட்டு இருந்ததாக, நீ வரைதல் வேண்டி முயலாமை என்னை என இப்பாட்டின் பொருட்புறத்தே இறைச்சி தோன்றுமாறு காண்க" என்று ஒரே பாடலில் உள்ளுறையும், இறைச்சியும் அமைந்திருப்பதைச் சுட்டிச் செல்கின்றார் உரைவேந்தர்.

"நூலின் முன்னுரைக்கண் இறைச்சியும் உள்ளுறையும் வேறு என்பதை உடன்படாது எழுதிய உரையாசிரியர் நூல் எழுதி முடித்த பின்றை இறைச்சி உளதாதலை உளங் கொண்டு நூலின் பகுதிக்கண்ணெல்லாம் பின்னர் அதனைச் சேர்த்துள்ளனர். (முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன், சங்க இலக்கிய ஆய்வுகளின் மதிப்பீடு, ப.112) என்று அறிஞர் கு.வெ.பாலசுப்பிரமணியன் குறிப்பிடுவது இங்குக் கருதத்தக்கது.

தலைவியது மாண்பு உரைத்தல்

குறிஞ்சித் திணையில், 'அன்னாய் வாழிப்பத்து' என்னும் பத்தில் 'உடன்போய் மீண்ட தலைமகள், நீ சென்ற நாட்டு நீர் இனியவல்ல; நீ எங்ஙனம் நுகர்ந்தாய் எனக்கேட்ட தோழிக்குச் சொல்லியது' என்னும் துறையில் அமைந்த பாடல் இது:

'அன்னாய் வாழிவேண்டு அன்னை நம்படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
உவலைக் கூவற் கீழ
மானுண்டு எஞ்சிய கலுழி நீரே' (பா.203)

அன்னாய், இதனை விரும்பிக் கேள்; அவர் நாட்டிலுள்ள இலைகள் உதிர்ந்து மட்கிய பள்ளத்தின் அடியில் மாவினம் உண்டு கலக்கிக் காத்த கலங்கற் சின்னீர், நம் பூந்துடவைக் கண் பெறப்படும் தேன் கலந்த பாலினும் இனிமையுடைய வாகும் காண் என்பது இப்பாடலுக்கு அமைந்த உரை.

'தேன் மயங்கு பாலினும் இனிய' என்னும் பாடல் அடிக்குத் தலைவியின் மாண்பும், பண்பும், கற்பும், அன்புடைமையும் தோன்றும் வண்ணம் உரைவிளக்கம் தந்துள்ளார் உரைவேந்தர். "ஈக்களை வாட்டியும், ஆண்களை மயக்கியும் ஈட்டிய தேனையும் பாலையும் கலந்துண்டலினும், தம்மிடத்து உளவாகிய பொருள் சிறிதெனினும், அறவோர்க்கு அளித்தல் முதலிய நல்லறத்திற் பகுத்தறித்து எஞ்சியது உண்டல் ஏற்றமுடைத்தாகலின், 'தேன் மயங்கு பாலினும் இனிய' என்றாள்; "உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர்' என்பவாகலினாலும், கற்புடைய மகள் "கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக் கொடுத்த தந்தை கொழுஞ் சோறு உள்ளாள்" என்பவாகலினாலும், நீ கொடுக்கும் தேன் மயங்குபால் உயர்ந்ததாயினும் எனக்கு இனிதாயிற்றன்று என்றும், அவர் நாட்டில் நீர் அரிதாயினும், அவ்வரிய நீர் தானும் 'மானுண்டு எஞ்சிய கலுழிநீர்' எனினும் உண்டற்கு இனிதெனக் குறிப்பால் உயர்த்தியும் கூறினாள். மானுண்டு எஞ்சிய கலுழி நீர் எனவே அஃது உண்டற் கேற்றது அன்மை பெறப்படும். வேட்டச் செந்நாய் கிளைத் தூண் மிச்சில், குளவி மொய்த்த அழுகற் சின்னீர், வளையுடைக் கையள் எம்மொடு உணீஇயர், வருகதில் அம்ம தானே" (குறுந்.56) எனத் தலைமகன் நினைந்துரைக்குமாறு காண்க" (ஐங்குறு நூறு, ப.480) என்கிறார் உரைவேந்தர்.

பழக்கவழக்கங்கள்

உரையிடையே அக்கால மக்களின் பழக்க வழக்கங்களைக் குறிப்பிட்டுச் செல்வது உரை வேந்தரது உரை மரபாகும். 'நம் படைப்பைத் தேன் மயங்கு பாலினும் இனிய' (203) என்னும் பாடல் அடியினை விளக்குமிடத்து உரைவேந்தர் படப்பை என்பதற்குரிய பொருளையும், மயங்குதல், கலத்தல் என்பது பற்றியும் விளக்கிச் செல்வதனோடு, அக்கால மக்களின் பழக்க வழக்கத்தினையும் எடுத்துரைக்கின்றார்.

"தம் பொருளாகிய ஆனிரைகட்குரிய உணவுப் பொருள் களைத் தொகுத்து வைத்தற்கும், தம் உணவுக்கு வேண்டிய காய்கறிகளைப் படைத்துக் கோடற்கும் மனைப்புறத்தே அமைந்துள்ள தோட்டக்கால் படப்பை எனப்படும். இக் காலத்தும் வைக்கோற் படப்பை என வழங்குவர். படப்பை யிலுள்ள மரங்களில் கட்டப்பட்ட தேன் படப்பைத் தேன் எனப்பட்டது. மயங்குதல் - கலத்தல் - பண்டையோர் பாலில் கலந்துண்டது தேனேயன்றி, இன்று வழங்கும் சருக்கரையன்று. "பாலொடு தேன் கலந்தற்று" (குறள்.1121) என்பது காண்க" என்று அக்கால வழக்கத்தைக் குறிப் பிட்டுள்ளார் (ஐங்குறுநூறு, பக்.478-480) உரைவேந்தர்.

வெறியாட்டு

இற்செறித்தவழித் தலைமகள் தலைவனைக் காணாது வருந்துவதால் உடல்நலம் குன்றி, மெலியுமிடத்து செவிலி, இது எதனால் நிகழ்ந்தது என்பதை அறிவதற்கு, வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்துவது அக்கால வழக்கங் களில் ஒன்று. இதனை வெறிப்பத்து உணர்த்துகின்றது. இவ்வெறியாட்டு குறித்து மிக விரிவாக விளக்குகின்றார் உரைவேந்தர்.

"முருகனை வழிபடும் இடத்தே நறுமணம் மிக்க பூவும் தளிரும் புகையும் மிக்கு எங்கும் இனிய மணமே நிலவும்; ஆகலின், அதனை வெறிக்களம் என முன்னோர் வழங்கினர். இவ்வழிபாடு வெறி என்றும், வெறியயர்தல் என்றும் பெயர் பெறுவதாயிற்று... 'வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்' (நற்.43) என்பதனால், வெறிக்களம் வெறிமனை என்றும் குறிக்கப்படுவதை அறிகின்றோம்.... 'சால்வ தலைவ எனப் பேஎ விழவினுள், வேலன் ஏத்தும் வெறியும் உளவே' (பரி.5:14-5) என்று கூறுவதனால், வெறி முருகவேள் வழிபாட்டுக்குப் பெயராதல் தெளியப்படும். (ஐங்குறுநூறு, ப.541) இவ்வெறியாட்டினை வெறிப்பத்துப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

"பொய்யா மரபின் ஊர்முது வேலன்
கழங்குமெய்ப் பகுத்துக் கன்னந்தூக்கி
முருகென மொழியு மாயின்
கெழுதகை கொல்இவள் அணங்கி யோற்கே"

(பா.245)

'பொய்த்தல் இல்லாத மரபினையும், ஊர்க்கண் வாழும் முதுமையுமுடைய வேலன், கழங்கு நிறுத்தி, அதன்கண் தான் வழிபடு தெய்வம் வரப் பண்ணிப். பின்னர் அதற்குக் கன்னத்தை அணிந்து வெறியாடி, இவளை அணங்கியோன் முருகனாவான் என்று மொழிவானாயின், இவளை மெய்யாற் கூடித் தன் ஒழுக்கத்தால் மெலியச் செய்த தலைமகற்கு அவ்வெறியாட்டு உரிமையன்று' என்பது இப்பாடலின் பொருள்.

கன்னம் - கழங்கு என்பதற்கு உரைவேந்தர் தரும் விளக்கம் வருமாறு:

கழங்கு - கழற்காய். இவற்றைக் கொண்டு வேலன் குறி கூறுமாறு; தன் தலையில் ஆடை கட்டி, சிறிய பைகள் நாலவிட்ட பல கிளைகளை உடைய வளைந்த கொம்பொன்றினால், கழற்காய்களை முருகன் முன் வைத்து, அள்ளியெடுக்குங்கால் கண்டு கூறும் ஒருவகைக் குறி.

கன்னம் என்பது, நோய் தணிதற்குப் பண்ணிக் கொடுக்கும் மந்திரத்தகடு உள்ளே வைத்துக் கட்டிய தாயத்தை. இது பொன்னாலும் செய்யப்படும்.

கழங்குமெய்ப்படுத்தலாவது - இது தெய்வத்தான் ஆயிற்றோ பிறிதொன்றினான் ஆயிற்றோ எனத் தெய்வம் பராவி அக்கழற்காய்களை எண்ணிப் பார்த்தல் என்றும், கழற்காய்களைத் தொகுத்து அவற்றிற்கு மஞ்சட் காப்புக் கட்டி, 'இம்மையல் தீருங்காறும் இக்காப்பினை அணிந்திருக்க' எனக் கட்டுவது கன்னம் என்றும் கூறுப," (ஐங்குறுநூறு, பக். 551-552) என்று கட்டு, கழங்கு, வெறி என்னும் மூன்று வகையால் குறி பார்க்கும் வழக்கம் அக்காலத்து நிலவியதைத் தம் உரையில் விரிவாக விளக்கியுள்ளார் உரைவேந்தர்.

'கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக்கண்ணும்'
(தொல்.பொருள்.நூ.1061)

என்னும் தொல்காப்பிய நூற்பா வரிகள் இதனை உணர்த்தும்,

'நாமுறு துயரம் நோக்கி அன்னை
வேலன் தந்தா ளாயின் அவ்வேலன்
வெறிகமழ் நாடன் கேண்மை
அறியுமோ தில்ல செறிஎயிற் றோயே.' (பா.241)

தலைவியின் மெலிவுக்குக் காரணம் அறியாத செவிலி, வேலனை அழைத்து வெறியாடி, குறி கேட்க முயலுமிடத்து, செவிலி கேட்ப தோழி அறத்தொடு நிற்பாளாய்க் கூறிய கூற்று இது. 'நெருங்கிய பற்களையுடையோய், நாம் எய்தியுள்ள துயரத்தை நம் அன்னை கண்டு, அதற்குக் காரணம் அறிவாளாய் வெறியெடுத்தற்கு வேலனைத் தருவித்துள்ளாள்; ஆயினும், அவ் வேலன், மணம் கமழும் நாடனொடு நம்மிடை உளதாகிய நட்பினை அறிவான் கொல்லோ? அறியான் கொல்லோ?' என்று தோழி, செவிலி கேட்குமாறு கூறுவதன் மூலம், தலைவியின் நோய்க்குக் காரணம் முருகணங்கன்று என்பதைப் புலப்படுத்துகிறாள்.

சிலம்பு கழி வழக்கம்

தலைவனும் தலைவியும் களவொழுக்கத்தின் கண், நொதுமலர் வரைவு காரணமாகவோ, இற்செறிப்பு காரணமாகவோ உடன்போக்கு மேற்கொள்வது வழக்கம். அவ்வாறு தலைவன் தலைவியை உடன் கொண்டு தன் இல்லத்திற்குச் சென்றவழி, அவன் தாய், அவளுக்குச் சிலம்பு கழீஇக் கடன் செய்கின்றாள். இதனைக் கேட்ட நற்றாய், அச்செய்தியைக் கொண்டு வந்தவரிடம், 'நும்முடைய மனையின்கண் சிலம்பு கழீஇத் திருமணமாகிய கடனை ஆற்றுவையாயினும் எம்மனைக்கண் வதுவையாகிய நன்மணத்தைச் செய்வாயாக' என நீவிர் அவட்கு உரைப்பதால் வரும் இழுக்கு என்ன?' என்று வினவுவது போல் அமைந்துள்ளது ஒரு பாடல்.

'நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம்மனை வதுவை நன்மணம் கழிகெனச்
சொல்லின் எவனோ மற்றே வென்வேல்
மையற விளங்கிய கழலடிப்
பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே.' (பா.399)

இவ்வழக்கத்தினைத் தம் உரையில் விரிவாக விளக்கியுள்ளார் உரைவேந்தர்.

"மகளிர்க்கு மணமாகாமுன் பெற்றோர் அணிந்த சிலம்பு கன்னிமைச் சிலம்பு என்றும், மண நிகழ்ச்சிக்கண் கொழுநன் அணியும் சிலம்பு கற்புச் சிலம்பென்றும் கணவன் தரும் சிலம்பையணியும் திருமணம் சிலம்பு கழீஇய மணம் என்றும் அறிக. திருமணமும் பெற்றோர் மகட்குச் செய்து கழித்தற்குரிய கடனாதலின், 'நன்மணம் கழிக' என்று கழித்தல் வாய்பாட்டாற் கூறினார்...

சிலம்பு கழீஇய திருமணம் நிகழினும், வதுவை நிகழ்ந்த பின்னல்லது சிறப்புடைய உடனுறை வாழ்வு தலைமகட்கு எய்தாமையின், அதனைப் பயப்பிக்கும் வதுவை மணத்தை வதுவை நன்மணம் என்றார்....

சங்க காலத் தமிழ் வாழ்வில் சிலம்பு கழீஇயும் வதுவையும் எனத் திருமணம் இருகூறாகி முன்னது முதற்கண்ணும் பின்னது அதன் பின்னரும் நிகழ்ந்துள்ளன. வதுவை நன்மணத்துக்குச் சிலம்பு கழீஇ இன்றியமையா முன்னணிக் கூறாதலின் அதனை மகட்பெற்றோர் தம்மனைக் கண் நிகழ்த்துவதையே பெரிதும் விரும்புவர்; அவருள்ளும் நற்றாய் அதனைத் தன் மனைக்கண் நிகழ்த்துதற்கே சிறப்பாக வேட்கையுறுவார்" (ஐங்குறுநூறு, பக்.848-849) என்று சிலம்புகழி என்னும் இவ்வழக்கத்தினை விரிவாக விளக்கியுள்ளார் உரைவேந்தர்.

தந்தை பெயரன்

தலைமக்களது கற்பறத்துக்கு உரிய இடம் முல்லை. முல்லைத் திணையின் முதற்பத்தாக செவிலி கூற்றுப் பத்து இடம்பெற்றுள்ளது. இப்பத்தில் அமைந்த ஒரு பாடல், தந்தையின் பெயரைத் தன் மகனுக்கு இட்டு வழங்கும் வழக்கத்தைப் புலப்படுத்துகிறது.

'புணர்ந்த காதலியிற் புதல்வன் தலையும்
அமர்ந்த உள்ளம் பெரிதா கின்றே
அகன்பெருஞ் சிறப்பில் தந்தை பெயரன்
முறுவல் இன்னகை பயிற்றிச்
சிறுதேர் உருட்டுந் தளர்நடை கண்டே' (பா.403)

'தலைவன் குடிக்கு முன்னோனாகிய அவன் தந்தையின் பெயரைத் தாங்கித் தன் குடியை விளக்கம் செய்வது பற்றிப் புதல்வனை, 'அகன்பெருஞ் சிறப்பின் தந்தை பெயரன்' என்று கூறினாள் என்றும், 'குடிக்கு விளக்காகிய புதல்வன்' என்று பிறரும் கூறுவது காண்க' (ஐங்குறுநூறு, ப.855) என்றும் விளக்கியுள்ளார் உரைவேந்தர்.

புனலாட்டு - விளையாட்டு

மருதத் திணையில் எட்டாம் பத்தாக இடம்பெற்றுள்ளது புனலாட்டுப் பத்து. இப்பத்தின் முன்னுரையில், "பண்டைக்

காலத்துத் தமிழ் வாழ்க்கையில் நிகழ்ந்த விளையாட்டு வகைகளில் புனலாட்டு என்பது ஒன்று. யாறுகள் புதுநீர் பெருகிப் பொலிவுற்றுத் திகழும் சிறப்புக் குறித்துப் புனலாட்டு அயர்தல் பண்டையோர் மரபு. குறிஞ்சியில் அருவி நீராட்டும், முல்லையில் ஆறாட்டும், நெய்தலில் கடலாட்டும், மருதத்தில் புனலாட்டும் சிறந்து விளங்கின. ஆறாட்டு என்ற வகையில் சேர நாட்டில் இது மிக்க சிறப்புடன் கொண்டாடப் பெற்றுள்ளது" (ஐங்குறுநூறு, ப.201) என்று புனலாடி மகிழும் அக்கால மக்களின் பழக்க வழக்கங்களை எடுத்துக் காட்டுகின்றார் உரைவேந்தர். மேலும், இப் புனலாட்டு, செல்வரும், மறியரும், இளையரும், முதியரும், ஆண்மக்களும், பெண்மக்களும் ஒத்த வகையாற் கூடிப் புனலாடி இன்பம் துய்க்கும் இனிமை உடையதாதலின், சான்றோர் இதனைச் சிறப்பக் கூறியிருக்கின்றனர் என்று அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, சிலப்பதிகாரம் முதலான இலக்கியங்களினின்றும் மேற்கோள் காட்டி விளக்கியுள்ளார் அவர்.

தொடித்தலை விழுத்தண்டினார் என்னும் நல்லிசைச் சான்றோர் ஒருவர். கழிந்த தமது இளமைப்பருவத்தின் இன்ப நயப்பை நினைந்து, "மறையெனல் அறியா மாயமில் ஆயமொடு, உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்த, நீர்நணிப் படிகோடு ஏறிச் சீர்மிகக் கரையவர் மருளத் திரையகம் பிதிர, நெடுநீர்க் குட்டத்துத் துடும்எனப் பாய்ந்து, குளித்து மணல் கொண்ட கல்லா இளமை' (புறம்.243) என நினைந்து கூறுவது, இப்புனலாட்டு ஆடவர் பெண்டிர் என்ற இரு பாலாரும் விரும்பும் இயல்பிற்று என்பதனை வற்புறுத்து கின்றது (ஐங்., ப.202).

அம்பல், அலர்: வேறுபாடு சுட்டுதல்

உரைவேந்தர், தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், தேவாரப் பாடல்கள், தொல்காப்பிய உரைகள் எனப் பலப்பல நூல்களிலிருந்து சான்றுகள் காட்டித் தம் கருத்தை நிறுவுவதை உரை மரபாகக் கொண்டுள்ளார்.

'தண்துறை ஊரன் கேண்மை
அம்பல் ஆகற்க எனவேட் டேமே' (பா.9)

என்னும் பாடல் அடி, தோழி தலைவனுக்குக் கூறும் பகுதியாக இடம்பெற்றுள்ளது. 'வரைவு நீட்டித்துக் களவை வெளிப்படுத்தற்குரிய செயல் தலைவனதாகலின், அம்பலாகற்க என வேட்டேம் என்றாள். 'அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தலின், அங்கு அதன் முதல்வன் கிழவனாகும்' என்பது களவியல் என்று உரை விளக்கம் அளித்த உரைவேந்தர், அம்பல், அலர் என்னும் சொற்களுக்கு இடையே உள்ள வேறுபாட்டினை இறையனார் அகப்பொருளை மேற்கோள் காட்டி விளக்குகிறார்:

"அம்பல் என்பது சொல் நிகழாதே முகிழ்முகிழ்த்துச் சொல்வதாயிற்று;... அலரென்பது இன்னானொடு இன்னாளிடை அதுபோலும் பட்டது என விளங்கச் சொல்லி நிற்பது. அம்பல் என்பது பெரும்போதாய்ச் சிறிது நிற்க அலருமென நிற்பது. அலர் என்பது அப்பெரும்போது தாதும் அல்லியும் வெளிப்பட மலர்ந்தாற் போல நிற்கும் நிலைமை என வேற்றுமை சொல்லப்பட்டதாம்" (இ.அ.பொ. 22 உரை).

புலவி, ஊடல், துனி - வேறுபாடு காட்டல்

காமப் புணர்ச்சிக் கண், துனி, புலவி, ஊடல் என்ற மூன்றும் காம இன்பத்துக்குச் சிறப்புத் தருவனவாகும். எனினும் இவற்றிடையே சிறு வேறுபாடு இருப்பதை உரைவேந்தர் தம் உரையில் சுட்டிக் காட்டுகின்றார்:

"இவற்றுள், துனி முதிர்ந்த கலாம் என்றும், புலவி இளைய கலாம் என்றும் பரிமேலழகர் கூறுவர். இவை காமக் கலவிக்கு முன்னர் நிகழ்வன. "துனிபுலவி ஊடலின் நோக்கேன் தொடர்ந்த, கனிகலவி காதலினுங் காணேன்" (திணைமாலை, பா.153) என்றதனால், இவற்றின் பெயரும் முறையும் உணர்ந்து கொள்க... (ஐங்குறுநூறு, ப.117)

புலவி மிக்க வழி, துனி தோன்றக் காமவின்பத்தைச் சிறப்பிக்காமையின், அதன் இன்மை காமத்துக்கு ஆக்கம் என்றும், 'ஊடுதல் காமத்திற்கு இன்பம்', ஆயினும் காமம் நீடுவதன்று கொல் என்னும் உணர்வை எழுப்பித் துன்பம் உறுவிக்கும் சிறுமையுடைமையின், ஊடலினும் புலவியே சிறப்புடையது என்றும் சான்றோர் கருதுப. 'துனியும் புலவியும் இல்லாயின், காமம் கனியும் கருக்காயும் அற்று' (குறள் 1330) என்றதனால் ஆசிரியர் திருவள்ளுவனார், துனியை விலக்கிப்

புலவியின் சிறப்புடைமையை வலியுறுத்துதல் காண்க. அன்றியும், 'உப்பமைந் தற்றாற் புலவி அது சிறிது மிக்கற்றால் நீளவிடல்' என்று கூறுமாற்றாலும் காம நுகர்ச்சிக்குப் புலவி அழகும் இன்பமும் பயக்குமாறு அறிக (ஐங்., பக்.118-119) என்று தாம் கூறும் விளக்கத்திற்கு பேராசிரியர் உரையையும் சான்று காட்டி விளக்கியுள்ளார்.

உயிரினங்களின் இயல்பு குறிப்பிடல்

"தமிழர்கள் இயற்கையை இயற்கைக்காக இயற்கை யாகக் காதலித்தார் அல்லர்; வேறொன்றும் நோக்காது அழகு நோக்கியே அதன் பூப்பிலும், பொலிவிலும் வனப்பிலும் ஈடுபட்டு அகமகிழ்ந்தார் அல்லர். தமிழர் இயற்கையின் பாவை அல்லர். இயற்கை தமிழரின் எண்ணப்பாவை, வாழ்க்கைக் கருவி. மலையையும், மானையும் கடலையும் மீனையுங் காரையும் பொழுதையும் செடியையும் கொடியையும் ஒரு பயன் நோக்கியே பார்வை செலுத்தினர்" (மூதறிஞர் வ.சுப.மாணிக்கம், தமிழ்க் காதல், ப.158) என்பர் மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார். இதற்கேற்ப, ஐங்குறுநூற்றுப் பாடல்களிலும் தெய்வம், உணா, மா, மரம், புள் முதலான அவ்வத் திணைக்குரிய கருப்பொருள்கள் அக்கால மக்களின் வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்தே கூறப் பட்டுள்ளன. உரைவேந்தர் இவ்வுயிரினங்களின் இயல்புகளை பல்வேறு இலக்கியங்களைக் கொண்டும், உயிரியல் நூல்களைக் கொண்டும் மிக விரிவாக விளக்கி உரை செய்துள்ளார்.

'புல்லும் மரனும் ஓர்அறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'

(தொல்.மரபியல், நூ.1527)

என்பது தொல்காப்பியம். உரைவேந்தர் பாடல்களில் இடம்பெறும் ஓரறிவு உயிர்கள் முதல் ஆறறிவு படைத்த மனிதர்கள் வரை அவ்வுயிர்கள் குறித்த விரிவான விளக்கங் களையும் உயிர்நூல் அறிஞர்கள் கருத்துக்களையும் தமது கருத்துக்களையும் தந்து செல்கின்றார். சில சான்றுகள் வருமாறு:

வேழம்

வேழம் மருத நிலத்துச் சிறப்புடைக் கருப்பொருளாய் வரும்... இது வேழக்கரும்பு என்றும், கொறுக்கச்சி என்றும்

வழங்கும்... இக்காலத்து இதனைக் கொறுக்கந்தட்டு என வழங்குவர்... கரும்பும் மூங்கிலும் புல் வகையில் அடங்கும்; வேழமும் புல்லே என்று தாவர நூலார் கூறுவர் (பக்.36-37).

கரந்தை

'கரந்தை, ஒருவகைக் கொடி... இதனைக் கொட்டைக் கரந்தையென்று இக்காலத்திற் கூறுப.' (ப.84)

வள்ளை

'இதுவும் ஒருவகைக் கொடி. இதன் தண்டு உள்ளிற் புழையுடையதென்பது 'அத்தூம்பு வள்ளை' என்பதனால் அறிக' (ப.84).

ஞாழல்

'ஞாழல் என்பது கொன்றை வகைகளுள் ஒன்று. இதனைப் புலிநகம் என்னும், புலிநகக் கொன்றை யென்றும் வழங்குவர்... கடல் சார்ந்த நிலப் பகுதியில் நுண்மணல் பரந்த கானலிடத்தே இந்த ஞாழல் வளமாக வளரும்... ஞாழல் மரம் அடிபருத்து உயர்ந்து வளரும் இயல்பிற்று; இதன் அடிப்பகுதி பொருக்குகளையுடைய தோல் மூடி யிருக்கும்; 'பொரியரை ஞாழல்' என்பர் (ப.340).

முதலை

'முதலை நீர் வாழும் உயிரினத்துள் வைத்துக் கூறப் படுதற்கு அமைந்ததாயினும், நிலத்தினும் இயங்கும் இயல் புடைமையின். இதனைத் தவழ்வனவற்றுள் அடக்கினர் ஆசிரியர் தொல்காப்பியனார். 'ஒருங்கிருங் குட்டத்து அருஞ்சுழி வழங்கும், தொடுந்தாள் முதலையும், இடங்கரும், கராமும்' (குறிஞ்சிப்பாட்டு, 256-7) என்பதன் உரையில் 'இவை மூன்றும் சாதி விசேடம்' என்று நச்சினார்க்கினியர் கூறினர். இனி, இக்காலத்தறிஞர், முதலை வகை இருபதின் மேலும் உள என்பர்... பிறவற்றின் பார்ப்பைத் தின்றல் அஃறிணையுயிர்கட்கு அமையும்; ஆனால் தன் பார்ப்பினைத் தானே தின்றல் அமையாது என்னுங் கருத்தால் 'தன் பார்ப்புத் தின்னும் அன்பில் முதலை' என்பது தோழி கூற்று (பக்.121-123).

அலவன் (நண்டு)

'கள்வன் பத்து' என்னும் தலைப்பில் மருதத் திணையில் பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. கள்வன் என்பது நண்டு - இது மருதநிலக் கருப்பொருள்களுள் ஒன்று; களவன் எனவும் வழங்கும். இது நான்கறிவுடைய உயிர்ப்பாகுபாட்டில் வரும்.

'நண்டும் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'

(தொல்.பொருள்.586)

என்பர் தொல்காப்பியர். அலவன் குறித்து மிக நீண்ட உரை விளக்கம் தந்துள்ளார் உரைவேந்தர்.

"அலவன் என்பது ஓடு மூடிய பத்துக் கால்களை யுடைய உயிர்வகை; சிலர் இதனை ஓட்டுமீன் என்பர். ஆயினும் மீனுக்குரிய இயல்புகள் முற்றவும் இன்மையின் மீன் என்றல் நிரம்பாது என்பர் உயிர் நூலறிஞர். தமிழ் நூலார்க்கும் இஃது உடன்பாடன்று.

இதன் உடலின் ஒரு பகுதி ஓடொன்றில் அடங்கியுளது; உடற்பொருளை ஆராய்ந்த விடத்து, அது கடல்நீரிற் பிறக்கும் சுண்ணாம்பினாலாகியது என்பது தோன்றுகிறது...

சினை பயந்த அலவன் உடல் சுருங்கிப் பின் முன்னையினும் பருத்தல் வேண்டி ஓடு மாற்றத் தொடங்கும். இதனை ஆங்கிலத்தில் மோல்ட்டிங் (Moulting) என்று கூறுவர். சினை பயவாமுன் இருந்த நிலைமையின் வேறாய்ப் புத்தோடும் பருவுடலும் பெறுவான் புலர்ந்து ஒய்ந்து ஒடுங்கிக் கிடக்கும் நண்டு இறந்தது போலத் தோன்றுதலின், நம் நாட்டுப் பண்டைச் சான்றோர், 'தாயுயிர் வேண்டாக் கூருகிர் அலவன்' என்றும், 'தாய் சாவப் பிறக்கும் புள்ளிக் கள்வன்' (ஐங்.24) என்றும் கூறுவாராயினர்.

உயிர் வரலாறு கூறும் ஆசிரியன்மார் நண்டினம் உலகில் ஏறக்குறையப் பத்து நூறாயிரம் யாண்டுகட்கு முன் தோன்றியிருத்தல் வேண்டும் எனவுரைக்கின்றனர்... நண்டின் மூக்குணர்வு மிக்க நுட்பமானது, ஆசிரியர் பேராசிரியர், 'நண்டிற்கு மூக்குண்டோவெனின், அஃது ஆசிரியன் கூறலான் உண்டென்பது" என்பாராயினர்... (ஐங்., பக்.70-73) என்று நண்டு குறித்த பல தகவல்களை விரித்துரைக்கின்றார் உரைவேந்தர்.

வெள்ளாங்குருகு

நெய்தல் திணையில் வெள்ளாங்குருகின் செய்தியைப் பாட்டுத்தோறும் கொண்டிருக்கும் பத்து வெள்ளாங் குருகுப் பத்து எனப் பெயர்பெற்றுள்ளது. வெள்ளாங்குருகு குறித்து உரைவேந்தர் கூறுவன வருமாறு:

"வெள்ளாங்குருகு நீர்ப்பறவை இனத்துள் ஒன்று. இது வயிற்றுப்புறம் வெண்மை நிறமும், முதுகுப்புறம் சாம்பல் நிறமும் உடையது. நீர்நிலைகளின் கரைகளில் வளர்ந்திருக்கும் புதர்களில் கூடமைத்து வாழ்வது இதன் இயல்பு... நிலத்தில் இருக்கும்போது இதன் வால் மேலும் கீழும் அசைந்து கொண்டே இருப்பது பற்றி இது வாலாட்டி (Wagtails) எனவும் வழங்கும்.

வெள்ளாங்குருகின் இனத்தில் ஆணினும் பெண் குருகுகளின் தொகையே மிக்குளது என உயிர்நூல் அறிஞர் கண்டுரைக்கன்றனர்...

நிலவுலகில் எவ்வெப்போது மழைக்காலம் எங்கெங்கு சிறந்து நிலவுகிறதோ அப்போது அங்கே இவைகள் சென்று சேர்ந்துவிடும். இவற்றிற்கு யாதும் ஊர்; எந்நாடும் தம் நாடே. ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகட்குச் செல்வதும் திரும்ப வருவதும் இயல்பு. இமயத்தில் ஆறாயிரம் ஏழாயிரம் அடிவரையில் இவை காணப்படுகின்றன.

ஆமை

'தீம்பெரும் பொய்கை யாமையிளம் பார்ப்புத்
தாய்முக நோக்கி வளர்ந்திசி னாஅங்கு
அதுவே ஐயநின் மார்பே
அறிந்தனை யொழுகுமதி அறனுமா ரதுவே.' (பா.44)

என்பது மருதத் திணையில் இடம்பெற்றுள்ள ஒரு பாடல். இப்பாடலின் உரையில் உரைவேந்தர் ஆமை பற்றிய செய்திகளை விரிவாக விளக்கிச் செல்கின்றார்.

"யாமைகளும் முதலை போல நெடுங்காலம் வாழும் உயிர்வகையாகும். ஊறின்றி வளரவிடின் முதலைகள் முந்நூறு யாண்டும், யாமைகள் முந்நூற்றைம்பது யாண்டும் உயிர் வாழும் என்று உயிர்நூல் அறிஞர் கூறுவர்.

யாமை இராக்காலங்களில் நிலத்திடை வந்து மேயும். சினையீனும் காலத்தில் நீராலும் பிறவற்றாலும் இடையூறு நிகழாததோர் தனியிடங்கண்டு ஆங்கொரு குழி செய்து, அதன்கண் தன் சினைகளை ஈன்று மணலால் மெத்தென மூடிவிட்டுப் பின் வேறொரு வழியால் நீர்நிலையை அடையும்...

முட்டை பொரித்தவுடன், யாமைப் பார்ப்புகள் மணலைக் கிளைத்துக்கொண்டு வெளிவரும். அவற்றிற்கு அக்காலத்திற் கண் முதலிய பொறி இல்லையாயினும், வாயினால் மணலைக் கறித்துக் கொண்டே நீர்நிலையை அடையும். காந்த ஊசியை எவ்வழித் திருப்பினும் அது வடதிசையே நோக்கி நிற்றல் போல, யாமைப் பார்ப்புக்கள் நீர்நிலையை அடைதற்குரிய நெறியைப் பற்றாதவாறு எத்துணை இடையீடு படுப்பினும், அவை அவ்வனைத்தையும் கடந்து நீர்நிலையைத் தவறாது அடையும் இயற்கை ஒண்மை படைத்துள்ளன...

'தாய்முகம் நோக்கி வளர்கின்றன' என்றது தம் தாய் வாழுமிடம் அந்நீர் நிலையேயாகலின் ஆண்டு அடையின், தம் தாயினை அடைதல் கூடும் என்ற கருத்தினாற் போலும்" *(ஐங்., பக்.130-132)* என்று உரை வரைந்துள்ளார் உரைவேந்தர்.

இலக்கணக் குறிப்பு தருதல்

உரைவேந்தர் தம் உரை விளக்கத்தில், ஒவ்வொரு பாடலுக்கும், அதன்கண் அமைந்துள்ள இலக்கணக் குறிப்புகளை விளக்கிச் செல்கின்றார். சில சான்றுகள் வருமாறு,

'மறியிடைப் படுத்த மான்பிணை போலப்
புதல்வன் நடுவணன் ஆக நன்றும்
இனிது மன்றஅவர் கிடக்கை முனிவின்று
நீனிற வியலகங் கவைஇய
ஈனும் உம்பரும் பெறலருங் குரைத்தே.' (பா.401)

இப்பாடலில் இடம்பெறும் இலக்கணக் குறிப்புகள்:

மறி, மான்கன்று. மான்பிணை உம்மைத்தொகை. மான் என்றது கலையாகிய ஆணின் மேற்று... முனிதல், வெறுத்தல்; ஈண்டு இடையறவுபடுதல். இன்றி என்பது செய்யுளாகலின் இன்று என நின்றது. வியலகம் - வானம், நீலம், கடை குறைந்து நீனிறமென வந்தது; கவைஇய - கவவு என்னும் சொல்லடியாகப் பிறந்த பெயரெச்ச வினை. குரை - அசைநிலை." *(ஐங்., ப.862)*

'தேர் தொடங்கு இன்று' என்புழித் தொடங்கு - முதனிலைத் தொழிற்பெயர். 'குற்றியலுகரமும் அற்றென மொழிப என்றதனால் உயிரேறி முடிந்தது (ப.930).

'பசலை பாயப் பிரிவே தெய்யோ' (பா.231) தெய்யோ என்பது. 'தம்மீது திரிதலும்' (தொல். சொல். இளம். 246) என்பதனால் திரிந்து வந்த தெய்ய என்னும் இடைச்சொல்; அசைநிலை இங்ஙனம் தொடரின்கண் இடம்பெறும் ஒவ்வொரு இடைச்சொற்கும். உரிச்சொற்கும், இலக்கணக் குறிப்பு தந்து செல்வது உரைவேந்தரின் இலக்கணப் புலமையைக் காட்டுகிறது.

தொகுப்புரை

நூறு பாடல்களின் முடிவில் அப்பாடல்களின் வைப்புமுறை குறித்து ஒரு தொகுப்புரை தருகின்றார் உரைவேந்தர். "இதுகாறும் உரை கூறிப்போந்த மருதப் பாட்டுக்கள் நூறும் வேட்கைப் பத்து முதல் எருமைப் பத்து ஈறாகப் பப்பத்துக்களாகக் கூறப்பட்டிருக்கின்றன; எனினும் இவற்றின் வைப்புமுறை நன்கு புலப்பட்டிலது. இந்நூறு பாட்டுக்களையும் வகுத்துத் தொகுத்த ஆசிரியப் பெருமக்களும் இதுபற்றி ஒன்றும் குறித்திலர். ஒவ்வொரு பத்தும் தொகுத்துப் பெயர் குறிக்கப் பெற்ற முறைமட்டில் ஒருவாறு புலனாகிறது. வேழப்பத்து (2), கள்வன் பத்து (3), எருமைப்பத்து (10) என்ற மூன்றும் மருதத்துக்குரிய கருப்பொருள் பற்றியும், வேட்கைப்பத்து (1), புலவிப்பத்து (5), புலவிராயப்பத்து (9), புனலாட்டுப் பத்து (8) என்ற நான்கும் உரிப்பொருளும் அதன் சார்புடையதுமான பொருள் பற்றியும், தோழி கூற்றுப்பத்து (6), கிழத்திக் கூற்றுப்பத்து (7) என்ற இரண்டும் கூற்று நிகழ்த்துவோர் என்னும் இயல் பற்றியும், தோழிக்குரைத்த பத்து (4) என்பதொன்றும் கேட்போர் என்னும் இயல் பற்றியும் வகுக்கப் பெற்றிருக்கின்றன. கருவும் உரியுமாகிய பொருள் நெறியால் வகுக்கப்படாதன, கூற்று வகையாலும், அந் நெறியாலும் அடங்காதன கேட்போர் வகையாலும் வகுத்துத் தொகுக்கப் பெற்றிருக்கின்றன என்பது இதுகாறும் கூறிய உரைகளால் இனிது விளங்கும் (100) (ஐங்குறு நூறு, மூலமும் விளக்கவுரையும், ப.274).

இங்ஙனம், ஒவ்வொன்றையும் நுணுகிப் பார்த்து உரை எழுதிச் செல்லும் ஆய்வு நெறியினை உரைவேந்தரின் உரையில் காணமுடிகின்றது.

ஒவ்வொரு திணையின் தொடக்கத்திலும், உட்பிரிவு களான ஒவ்வொரு பத்தின் தொடக்கத்திலும் முன்னுரை தருவதுபோல, அவ்வத் திணைகளின் நிறைவில் தொகுப்புரை தந்து முடிப்பது உரைவேந்தரின் வழக்கம். மருதத் திணையில் தொடங்கி, முல்லைத் திணையில் முடிகிறது ஐங்குறுநூறு உரை விளக்கம்.

"இந்நூலைத் தொகுக்குமிடத்துத் தொடக்கத்தே அகனைந்திணைக்குரிய இன்ப வாழ்வில், புறத் தொழுக் கத்திற் பிரிந்தொழுகிய தலைமகன், தனை மனையறம் போந்த தலைமகளைக் கூடி நிகழ்த்தும் இன்பவுரையை மங்கல மரபினால் தோழி கூற்றாக முதற்கண் கோத்தது போல, இறுதிக்கண், பொருளும் அறமும் கருதிப் பிரிந்து பாசறையிடத்தும் பிறாண்டும் இருத்தலைச் செய்த தலைமகன் மீண்டு போந்து தன் சொல் வழியே கற்பு நெறி நின்று தான் குறித்த கால வரவு நோக்கித் தன் மனைக்கண்ணே ஆற்றியிருந்த தலைமகளைக் கூடி இன்புறும் மங்கலமரபே நிலைபெறத் தோழி கூற்றே வரக் கோத்திருப்பது குறிக் கொள்ளத் தக்கதொன்று. இதனால் இதுவும் இதுபோல் வனவுமாகிய தொகை நூற்களைச் சிறந்த குறிக்கோளும் முறையும் அடிப்படையாகக் கொண்டே சான்றோர் தொகுத்துள்ளனர் என அறிக" (ஐங்குறுநூறு, பக்.1002-1003)

இங்ஙனம் தொடக்கமும் முடிவும் இயைபுபட்டு நிற்கும் (Concord) உத்தியை உரைவேந்தரின் தொகுப்புரை புலப்படுத்துகிறது.

முடிவுரை

தலைவன் தலைவியரது அகவாழ்க்கையினை மட்டுமல்லாது, ஐந்து திணைக்கு உரிய கருப்பொருள்களின் இயல்புகளையும் சுட்டும் வண்ணம் மிக விரிவான விளக்க வுரையாக அமைந்துள்ளது உரைவேந்தரின் ஐங்குறுநூற்று உரை. தொடக்கவுரை, தொகுப்புரை, சொல்நயம், பொருள் நயம், கருத்து நயம், இலக்கண விளக்கம், அகப்பொருள் மரபுகள், மக்களின் பழக்க வழக்கங்கள், உயிர் இன இயல்புகள் எனப் பலவற்றையும் கொண்டு அமைந்த விளக்கவுரையாக ஆய்வுரையாக அமைந்து உரைவேந்தரின் புலமை நயத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

4. நற்றிணை உரைத்திறன்

"உரையாசிரியர்கள் 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று உலக மக்களை அறைகூவி அழைத்துப் புலமை விருந்தளித்த நல்லவர்கள்; அறிவுச் செல்வத்தை அள்ளிச் சொரிந்த வள்ளல்கள்; கல்விக் கோயிலின் பெருவாயிலைத் திறந்துவிட்ட மேலோர்கள்."

*- மு.வை.அரவிந்தன்**

எட்டுத்தொகை நூல்களுள் அமைந்த 5 அக இலக்கியங்களுள் ஒன்று நற்றிணை. நற்றிணை ஒன்பது அடி முதல் பன்னிரண்டு அடி வரையறை அமைந்த பாடல்கள் கொண்டது. இதனைத் தொகுப்பித்தான் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. இந்நற்றிணைக்கு முதலில் உரை செய்தவர் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர். அவ்வுரை முற்றுப் பெறுமுன், அவர் இவ்வுலகை விட்டு மறைந்தார். பின்னர், உரைவேந்தர் ஔவை, அரிதின் முயன்று பல இடங்களில் தேடி நான்கு ஏடுகளைக் கண்டெடுத்தார். அவை:

அரசினர் கையெழுத்து நூல் நிலைய	ஏடு - 1
மதுரைத் தமிழ்ச் சங்க நூல் நிலைய	ஏடு - 1
டொம்மிச்சேரி கருப்பையாத்தேவர்	ஏடு - 1
புதுப்பட்டி சிவ.மு.முத்தையா செட்டியார்	ஏடு - 1

இவ் ஏடுகளை ஒப்புநோக்கியபோது, பல பாட வேறுபாடுகள் இருந்தமையைக் கண்டறிந்தார் உரைவேந்தர். "ஏறத்தாழ 1500க்கு மேற்பட்ட பாட வேறுபாடுகளும், பெயர் தெரியாதிருந்த பல பாட்டுகளின் ஆசிரியர் பெயர்களும் தெரிய வந்தன. சில ஆசிரியர்களின் பெயர்கள் திருத்த மடைந்தன" என்று உரைவேந்தர் தம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

---

* உரையாசிரியர்கள், ப.24.

பின்னத்தூரார் உரையில் இல்லாத சில மாற்றங்கள் உரைவேந்தர் உரையில் இடம்பெற்றுள்ளன. சான்றாக,

"அண்ணாந்தேந்திய' என்னும் பத்தாம் பாடலைப் பாடியவர் பெயர் முற்பதிப்பில் அறியப்பெறவில்லை. சங்கச்சுவடி ஒழிந்த மூன்று சுவடிகளிலும் இப்பெயர் இருந்தமையைக் குறிப்பிடுகிறார் உரைவேந்தர் (ந.மூ.வி.ப.20).

சில பெயர்கள் பிழைபட வழங்கு நிலையை விளக்கி எழுதியுள்ளார் உரைவேந்தர். 34-ஆம் பாடலைப் பாடியவர் 'பிரமசாரி' எனப் பின்னத்தூரார் பதிப்பில் உள்ளது. 'பிரமன் என்பார்க்கு மகனாதலின் பிரமன்காரி எனப் பெற்றார். பிரமன் என்றும் காரி என்றும் பெயர் பூண்டவர் பலர் சங்க காலத்தும் இடைப்பட்ட கல்வெட்டுக் காலத்தும் இருந்துள்ளனர். இவர் பெயர் ஏடு பெயர்த்தெழுதினோரால் பிரமசாரி எனப் பிழைப்பட்டுள்ளது. கிடைத்த ஏடுகளில் பிரமன்காரி எனக் காணப்படுவதே இதற்குச்சான்று என்று குறிப்பிடுகிறார் உரைவேந்தர். (ந.மூ.வி.ப.21)

இத்தகைய மாற்றங்கள் பல உரைவேந்தர் உரையில் காணப்படுகின்றன. நற்றிணை மூலமும் - விளக்கவுரையும் (ந.மூ.வி) என்னும் இந்நூல் இரண்டு பாகங்களாக - ஒவ்வொன்றும் 200 பாடல்களுக்கு அமைந்த உரையுடன் 1966-ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

நற்றிணை பதிப்பு முறை

நற்றிணைக்கு உரையும் விளக்கமும் எழுதிப் பதிப்பித்த உரைவேந்தர் பதிப்பு வேந்தரும் ஆவார் என்பதை நற்றிணை நூலில் அமைந்த அவரது முகவுரை எடுத்துரைக்கின்றது.

பிரதிகளை ஒப்பிட்டு உண்மைப்பாடம் தேர்ந்தெடுத்த வகையை உரைவேந்தர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

1. உரையின்றி நூல்களின் மூலம் மட்டும் கிடைக்கு மிடத்து பிரதிகளில் உள்ள மூலத்தால் மட்டும் திருத்தம் செய்தல்.
2. உரைகளும் உள்ளவிடத்து அவைகளின் துணை கொண்டு பிரதிகளில் உள்ள மூலத்தை நோக்கிப் பொருத்தமுள்ள பாடங்கொள்ளுதல்.

3. தொல்காப்பிய உரை முதலியவற்றில் மேற்கோளாக எடுத்தாளப்பட்டவிடத்து அவ்வுரையிற் காணும் பாடத்தோடு ஒப்பு நோக்கித் தகுதியான பாடம் கொள்ளுதல்.

“இவ்வளவு முயற்சி செய்தும் பொருள் விளங்காத பகுதிகள் பலவுள்ளன. அப்பகுதிகளில் பாடம் சிதைந்துள்ளது என்பது எளிதில் அறியக்கிடக்கின்றது. பாடம் இவ்வாறிருத்தல் வேண்டும் என்று ஊகிக்கவும் இடமுண்டு. ஊகங்கள் உண்மையெனத் துணிந்தவிடத்தும் அவை பதிப்பிற் பிழை திருத்தமாக உடுக்குறியுடன் கொடுக்கப் பட்டுள்ளனவே யன்றி, மூலங்கள் திருத்தப்படவில்லை. பிரதிகளின் உதவி இன்றிக் கேவலம் ஊகத்தையே கடைப்பிடித்துப் பாடங்களை மாற்றிவிடுதல் அடாத காரியம். இப்பதிப்பில் ஒரு பாடமேனும் ஊகத்தால் மாற்றப்படவில்லை. விளங்காத பாடங்கள் திருந்துதற்குரிய வழி ஒன்றேயுள்ளது. அது பெருமுயற்சிகள் செய்து மேன்மேலும் ஏட்டுப் பிரதிகளைத் தேடிச் சேகரித்து அவற்றின் துணைகொண்டு ஆராய்ந்து உண்மை காணுவதே” (ப.24) என்று அமையும் முகவுரை, உரைவேந்தரின் பதிப்புத் திறனையும், பதிப்பு முறையில் கையாள வேண்டிய உண்மையையும் நேர்மையையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்து, உரைவேந்தர் சிறந்த பதிப்பு வேந்தரும் ஆவார் என்பதைப் புலப்படுத்துகிறது.

உரைநெறி

உரைவேந்தரது நற்றிணை உரைநெறி கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது:

1. பாடலாசிரியர் பற்றிய குறிப்பு
2. பாடலில் காணப்படும் பொருள்
3. பாடலும் துறையும்
4. உரை
5. பொருளிலக்கண மரபு பொருத்திக் காட்டுதல்

பாடலாசிரியர் பற்றிய குறிப்பு

பாடலாசிரியர் பற்றிய குறிப்பில் புலவர்தம் பெயரும், பெயர்க்காரணமும், ஊரும், ஊரின் பழைய இருப்பும், இப்போது அதற்கு வழங்கப்பெறும் பெயரும், இருக்கும் இடமும், அவர் பாடிய பாடல்களும் அவரால் பாடப்பெற்ற அரசும் பற்றிய விரிவான செய்திகள் இடம்பெற்றுள்ளன.

நற்றிணையில் 110-ஆம் பாடல் பூதனார் என்னும் புலவரால் பாடப்பட்டுள்ளது. அவர் பற்றி உரைவேந்தர் தரும் குறிப்பு வருமாறு:

"இவர் பெயர், அச்சுப்படியிலும், மதுரைத்தமிழ்ச்சங்க ஏட்டிலும் போதனார், பொத்தனார் எனக் காணப்படினும்; ஏனை ஏடுகளில் பூதனார் என்றே காணப்படுகிறது. பூதனார் என்பது பயின்ற வழக்கிற்றாகலின், அதுவே ஈண்டுக் கொள்ளப்பட்டது. இப் பூதன் என்ற பெயர் மக்களிடையே கி.பி. பதினான்கு பதினைந்தாம் நூற்றாண்டு வரை வழங்கி வந்தமை கல்வெட்டுக்களால் அறிகின்றோம். பூதனார் என்பதே இப்பாட்டைப் பாடிய சான்றோர் பெயராயின், நற்றிணை 29-ஆம் பாட்டைப் பாடியோரும் இவரும் ஒருவர் என்பது பெறப்படும். இனி, பொத்தனார் என்பதே பாடமாயின், பொத்தன் என்பது இவர் இயற்பெயராம். பொத்தனது ஊர் என்ற பொருளில் பொத்தனூர் என்று ஓர் ஊர் காவிரி வடகரையில் மழ நாட்டில் திருவெயிலூர்க்கு அண்மையில் உளது; திருவெயிலூர் இப்போது வேலூர் என வழங்குகிறது" (ந.மூ.உ.ப.39)

இங்ஙனம் பெயர் விளக்கம் கூறுமிடத்து, தமக்குக் கிடைக்கப்பெற்ற ஏட்டுச் சுவடிகளை ஒப்பிட்டுப் பார்த்துக் கூறுவதும், இப்பெயர் பிற சுவடிகளில் காணப்படும் முறையைக் குறிப்பிடுவதும், அவர் சார்ந்த ஊரைப் பற்றிய குறிப்பையும், அவ்வூர் இன்று எவ்வாறு வழங்கப்படுகிறது என்பதையும் புலப்படுத்துகின்றார் உரைவேந்தர்.

2. பாடலின் பொருள் உரைத்தல்

பாடலாசிரியர் குறிப்பிற்குப் பின் பாடலில் கூறப்படும் பொருளையும், அதன் மையக் கருத்தையும் எடுத்துரைக்கின்றார் உரைவேந்தர்.

"களவு நெறியில் காதலுற்றுச் சிறந்து பின் கடிமணம் செய்து கொண்டு கற்புக்கடம் பூண்டு நல்லறம் செய்யத் தொடங்கிய தலைமகளை, மனையறம் தொடங்கிய சின்னாட் கெல்லாம் அவளை வளர்த்த செவிலி அவளது மனைக்குச் சென்று கண்டாள். அங்கே தலைமகள் செய்யும் மனையறத்தின் மாண்பை நேரிற்கண்டு பெருவியப்புற்றாள். தான் வளர்த்த மகள் கற்பும், காமமும், நற்பாலொழுக்கமும், மெல்லியற் பொறையும், நிறையும், விருந்து புறந்தருதலும், சுற்றம் ஓம்பலும்

ஆகிய நற்பண்புகளால் சிறந்து விளங்குவது காணப்பிறக்கும் இன்பத்தினும் மிக்கது பிறிதின்மையின் செவிலியின் உள்ளம் உவகை நிறைந்தது. பின்னர் அவள் தலைமகள்பால் விடை பெற்றுக்கொண்டு அவள் பிறந்து வளர்ந்த தொன்மனைக்கு வந்தாள். அங்கே தலைவியைப் பெற்ற நற்றாய் தன் மகளுடைய மனைநலத்தை அறிய விரும்பினளாக செவிலி, "தலைமகளை யான் கண்டதும், அவள் சிறு பெண்ணாகக் காலில் பொற்சிலம்பு அணிந்து விளையாடும் செவ்வியில் பால் கலந்த சோற்றை ஒரு வள்ளத்திலேந்தி, ஒரு கையில் சிறுகோல் கொண்டு, இச் சோற்றை உண்க என அச்சுறுத்தினால், நரைமுது செவிலியர் ஓடிப் பற்ற முடியாது மெலிந்து அயருமாறு பூப்பந்தரிடையே ஆட்டங் காட்டிய நிலை என் நினைவுக்கு வந்தது; அத்துணை இளையளாகிய அவளுடைய இன்றைய நிலையை நோக்கின், அவள் பால் அறிவும், ஒழுக்கமும் சிறந்து தோன்றுகின்றன; அவற்றை எப்பொழுது எவ்வாறு உணர்ந்தாள் என என் நெஞ்சில் வியப்பின் மேல் வியப்பு வீறு கொண்டெழுந்தது; தன்னைக் கொண்ட கணவனுடைய குடி ஒரு கால் வறனுற்றது. அதனை அறிந்த அவள் தந்தை அவட்கு வேண்டும் உணவுப் பொருளைக் கொடுத்து விட்டானாக, அதனை வேண்டா என விலக்கிவிட்டுத் தன் கொழுநன் தேடித் தக்கது சிறிதாயினும், அதனைப் பொழுது மறுத்துண்டு வாழும் பொற்புறு மான மாண்புடையளாக விளங்குகின்றாள்; என்னே அவளது மனைமாண்பு!" என்றாள்.

இக்கூற்றின்கண் விளங்கும் தலைமகளது மனையறச் சிறப்பு மகளிர் அனைவர்க்கும் மாண்புதரு செயலாக விளங்குதலின், இதனை ஆசிரியர் பூதனார் இப்பாட்டின் கண் தொடுத்துப் பாடுகின்றார்" (ந.மு.வி.பக்.39-40) எனப் பாட்டின் பொருளையும் பாடலின் மையக் கருத்தையும் விளக்குகின்றார் உரைவேந்தர்.

3. பாடலும் துறையும்

'பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொறகலத் தொருகை ஏந்திப்
புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்என்று ஒக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரீப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று

அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரிமெலிந் தொழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுஉணர்ந் தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்குஅறல் போலப்
பொழுதுமறுத் துண்ணும் சிறுமது கையளே.' (பா.110)

'இது மகள்நிலை யுரைத்தது; மனைமருட்சியுமாம்' என்பது இப்பாடலுக்குரிய துறை.

4. உரை

உரை என்னும் பகுதியில் ஒவ்வொரு சொற்கும் தொடருக்கும் விளக்கம் தருகின்றார் உரைவேந்தர். உரைக்கு விளக்கம் கூறும் பகுதியில், பாட்டின் சொற்புணர்ப்புக்களில் அமைந்த வினைமுடிவு காட்டிப் பொருளின் திட்பத்தை வரையறுத்து உணர்த்துவதும், அருஞ்சொற்களுக்குப் பொருளும் இலக்கண அமைதியும் கூறி நயம்பட விளக்குகின்றார். "தொலி நீக்கியபின் பழத்தைச் சுளைசுளையாகப் பிரித்துண்டு மகிழ்வதுபோலப் பாட்டினுள் ஒவ்வொரு கருத்தாக எடுத்து வரன்முறையில் தெளிவுபடுத்துவதும், அத் தெளிவுரையைத் தென்னுண்தேனில் தேக்கிய செஞ்சொற்களில் தொகுத்து உரைப்பதும்" (முகவுரை,ப.11) உரைவேந்தரின் தனிச் சிறப்பாகக் குறிப்பிடுகிறர் திருமதி இராதா தியாகராசன்.

சான்றாக, 'அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள் சொல்' என்னும் தொடருக்கு

"தன் சொற் செயல்களில் சோர்வு உண்டாகாமல் தற்காத்துத் தற்கொண்ட தலைமகனைப் பேணி நிற்கும் பெருந்தகைமை கண்டு வியந்து மகிழ்தலின், அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனன் கொல் என்றாள்.

தன்னைக் கொண்ட கணவனுக்குத் தன்னைப் பொருளாகப் பெற்ற தந்தை தனக்குத் தருவனவற்றைக் கோடற்கு உரிமை யுண்டாயினும் அது கொண்டு செய்யும் மனையறம் தான் உவந்து செய்யும் தனியறம் போல் சிறவாமைப் பற்றி, "கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக் கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்" என்றாள்.

5. பொருள் இலக்கணத்துடன் பொருத்திக் காட்டுதல்

உரையின் இறுதியில் தொல்காப்பியப் பொருள் இலக்கணம் பொருந்தி வருமாற்றை எடுத்துக்காட்டுகிறார் உரைவேந்தர்:

"கழிவினும் வரவினும் நிகழ்வினும் வழிகொள நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும், செவிலிக்குரிய ஆகுமென்ப" என்பதன் உரையில் "ஆகும்" என்றதனாலே செவிலி நற்றாய்க்கு உவந்துரைப்பனவும் கொள்க என்று கூறி, இப்பாட்டைக் காட்டி "இது மனையறம் கண்டு மருண்டு உவந்து கூறியது" (தொ.பொருள்.153) என்றும் "சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு, அனைநால் வகையும் சிறப்பொடு வருமே' (தொல்.பொருள்.245) என்பதன் உரையில் இதனைக் காட்டி, "இதுகுடி வறனுற்றென நல்குரவு கூறியும் காதலைச் சிறப்பித்தலின் அமைந்தது என்றும் கூறுவர் நச்சினார்க்கினியர்" (ந.மூ.வி., ப.44).

பெயர் விளக்கம் கூறல் - இடைக்காடனார்

நற்றிணை உரைகாரரான பின்னத்தூர் அ.நாராயண சாமி ஐயரும், டாக்டர் உ.வே.சாமிநாத அய்யரும், இடைக்காடு என்னும் ஊரினராதல் பற்றி இச்சான்றோர் இடைக் காடனார் என்று குறிக்கப்படுகின்றார் என்றனர். வெண்காடு, மறைக்காடு, ஆர்க்காடு என்ற ஊர்களைச் சேர்ந்தவர்களை வெண்காட்டான் மறைக்காட்டான், ஆர்க்காட்டான் என்பது பெருவழக்கேயன்றி, வெண்காடன், மறைக்காடன், ஆறகாடன் என வழங்குவதில்லை. வெண்காடன் என்பதாகிலும் சைவத் திருமுறைகளில் திருவெண்காட்டு இறைவனைக் குறித்து நின்று பின்பு இறைவன் பெயரை மக்கட்கு இட்டு வழங்கும் மரபு பெருகியபோது மக்கட்பெயராய் வருவதாயிற்று. ஏனையவை அவ்வாறு வரவில்லை; அதனால் இடைக்காட்டார் என்ற பொருளில் இடைக் காடனார் என்ற பெயர் வந்ததெனக் கோடல் செவ்விதாகத் தோன்று கின்றிலது (ந.மூ.வி., ப.192) என முன்னை உரையாசிரியர் கருத்தை எதிர்மறுத்துக் கூறுவதைக் காணலாம்.

வெள்ளிவீதியார்

"வெள்ளி வீதி என்ற இப்பெயரில் உள்ள வீதி என்னும் சொல் சங்க நூல்களில் காணப்படாததொன்று; தெருவைக்

குறிக்கும் இச்சொல் சங்ககாலச் சான்றோராகிய வெள்ளிவீதியார் பெயரில் எவ்வாறு இடம்பெற்றதென்பது தெரிந்திலது. ஔவையார் பாட்டொன்றில், 'நெறிபடு கவலை நிரம்பா நீரிடை வெள்ளி வீதியைப் போல நன்றும் செலவு அயர்ந்திசினால் யானே' என இவர் குறிக்கப்படுவது நோக்க, வீதி என்ற இச்சொல் இவர் பெயரில் சங்க காலத்தேயே சேர்ந்திருப்பது மாத்திரம் தெரிகிறது. இதுபற்றி ஒருகால் பேச்சு நிகழ்ந்தபோது, தாழையின் வெள்ளிய வேரை வெள்ளிவீழ்து என்றாராக அது வெள்ளிவீதி என மருவிற்றாகலாம் எனக் கருதினர் நாவலர் வேங்கடசாமி நாட்டார்" (ப.353) எனப் பிற அறிஞர்கள் கருத்தைச் சான்றுகாட்டி விளக்குவதும் உரைவேந்தரின் உரையில் காணப்படும் பண்பாகும்.

நற்றிணையின் 105வது பாடலைப் பாடிய முட்டத் திருமாறன் குறித்து உரைவேந்தர் தரும் விளக்கம் வருமாறு:

"முட்டத் திருமாறன் என்ற இச்சான்றோர் பெயர் அச்சுப் பிரதியில் முடத்திருமாறன் எனக் காணப்படுகிறது. முடத்திருமாறன் என்ற பாடத்தினும் முட்டத் திருமாறன் என்பது சிறந்து தோன்றுகிறது. முட்டம் என்பது "தென்னாட்டு வள்ளுவநாட்டில்' உளது; இது முதல் இராசராசன் காலத்தில் மும்முடிச் சோழநல்லூர் எனப் பெயர் மாற்றம் எய்தியது கல்வெட்டு ஆராய்ச்சியாளர் நன்கறிந்தது. இவர் தமது நாட்டுச் சேர மன்னனான குட்டுவனைச் சிறப்பிப்பதே இதற்குச் சான்று. இவர் பெயர் மாறன் என இருப்பது கண்டு, இவர் பாண்டியர் குடியில் தோன்றிய அரசர் எனக் கருதுவோரும் உண்டு. தென்னாட்டுத் தமிழ்ப் பகுதியிலுள்ள முட்டம் என்னும் ஊர்க்குரியராய்ப் பாண்டி வேந்தர்களால் திருமாறன் என்ற சிறப்புப் பெற்றவராக எண்ணுதற்கும் இடமிருக்கிறது. இவர் பாடியனவாக இரண்டு பாட்டுக்கள் இத்தொகை நூலுள் தொகுக்கப்பட்டுள்ளன.

பாட பேதம் சுட்டுதல்

பாட வேறுபாடு காட்டுமிடத்து, உரைவேந்தர். "இது புதுப்பட்டிச் செட்டியார் ஏட்டில் காணப்பட்டது" (ப.44) எனவும், "வருதுணையாகிய என்ற பாடம் புதுப்பட்டி யேட்டில் காணப்படுகிறது" (ப.121) எனவும், "இது தேவர்

ஏட்டில் இல்லை" (ப.351). "இது அச்சுப் பிரதியில் இல்லை" (ப.262) எனவும் குறிப்பிடுகின்றார். பாடல் அடிகள் மாறிக் காணப்படுவதையும் தம் உரையில் சுட்டிச் செல்கின்றார் அவர்.

'அவல நெஞ்சின் அஞ்சினம் பெயர
உயர்திசை யிடுநீர்ப் பனித்துறைச் சேர்ப்பனொடு
நுண்ணுகம் நுழைத்த மாவே'

என ஏட்டில் மாறிக் காணப்படுகின்றன" (ப.234) எனவும், "இப்பாட்டின் இறுதிப் பகுதி ஏடுகளில் சிதைந்துள்ளது" (ப,280) எனவும், வரும் பகுதிகள், உரைவேந்தரின் ஆய்வு நேர்மையைப் புலப்படுத்துவதோடு, ஏடுகளை ஆர்வத்தோடு ஆராய்ந்து கூறும் இயல்பினையும் எடுத்துக்காட்டுகின்றன.

நற்றிணை 10வது பாடல் எழுதிய ஆசிரியரின் பெயர் சில ஏடுகளில் காணப்படவில்லை. ஆனால் உரைவேந்தர் "இவர் பெயர் (குடவாயிற் கீரத்தனார்), அச்சுப்படிகளிலும், மதுரைத் தமிழ்ச் சங்க ஏட்டிலும் இன்றி ஏனை ஏடுகளில் காணப்படுகின்றது. குடவாயில் என்பது சோழநாட்டுப் பழமையான ஊர்களில் ஒன்று; இக்காலத்தில் இது குடவாசல் என வழங்குகிறது. இவ்வூரினராதல் பற்றிச் சான்றோர் இவரைக் குடவாயிற் கீரத்தனார் என்று நூல்களில் குறித்துள்ளனர்" (ப.80) எனத் தமக்குக் கிடைத்த சுவடிகளை ஒப்புநோக்கிக் குறித்துச் செல்கின்றார் உரைவேந்தர்.

இங்ஙனம் பாடபேதங்களைச் சுட்டும்போது நேர்மையாகவும், உண்மையாகவும் ஏட்டுச் சுவடி சான்றுகளைக் காட்டுவது, அவரது பதிப்பு நேர்மையைக் காட்டுவதாகும்.

தமிழர் மரபு, பண்பாடு உணர்த்துதல்

தமிழர் பண்பாட்டின் தலையாய பண்பு விருந்தோம்புதல், இதனைச் சிறப்பிக்காத தமிழ் இலக்கியமே இல்லை என்று கூறலாம். இத்தகைய விருந்தோம்பல் பண்பினை, நற்றிணைப் பாடல்கள் பல எடுத்துக்காட்டுகின்றன.

"விருந்து இல்லாமல் உண்ட பகல் ஒழிக" என்று நொந்தாரும் இருந்தனர். விருந்தினர், நேரம் கெட்ட நேரத்திலும் வருவர். பகலில் அன்றி ஓய்ந்து படுத்த இரவிலும் விருந்தினர் வந்து திண்ணையில் படுத்தால் அதனைத் தம் குறையாகக் கருதினர். நற்றிணைத் தலைவன் ஒருவன் வினைமுற்றி

மீளுமிடத்துப் பாகனிடம், 'இராப் பொழுதாயிருப்பினும் வந்த விருந்தை விரைந்து விரும்பி ஏற்றுப் புறந்தரும் கணவன் தெளித்த சொல்லைத் தேறியிருத்தற்கு வேண்டும் திண்மையமைந்த கற்பினையும் மெல்லியற் பொறையும் உடைய இளையவளாகிய காதலியாவாள்; அவள் உறைதலால் இனிமையுடையதாகிய ஊர்' என்று தன் தலைவியைப் புகழ்ந்து பேசுகின்றான் (ப.196).

"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள் உறைவின் ஊரே" (நற்.பா.142)

இவ்விருந்தோம்பல் பண்பையே, தலைவி தலைவன் மீது கொண்ட ஊடல் தீர்க்கும் மருந்தாகப் பயன்படுத்திக் கொள்கின்றான் தலைவன் என்பதை ஒரு நற்றிணைப் பாடல் சுட்டிக் காட்டுகின்றது:

பரத்தை வீட்டிற்குச் சென்று தங்கியிருந்த தலைவனைத் தலைவி எதிர்கொள்ளாமல் மறுத்து ஊடல் கொண்டாள். ஊடலைத் தணிக்க வகை அறியாமல் வீட்டினுள் நுழைய முடியாமல் தலைவன் திகைத்தான். எதிர்பாராமல் புதியவர் ஒருவர் வீட்டிற்கு வந்தார். அவர் வரக் கண்டதும், அவரை அழைத்துக் கொண்டு தலைவன் வீட்டினுள் புகுந்தான். விருந்தினரை இன்முகம் கொண்டு வரவேற்க வேண்டும் என்பதையும், குடும்பத்தில் உள்ள குழப்பத்தை வெளியார்க்குப் புலப்படுத்தாமல் நடக்கவேண்டும் என்பதையும் கடமையாக உணர்ந்தவள் தலைவி.

ஆதலின் விருந்தினர் வருவதைக் கண்டவுடன் ஊடலை மறந்து முகம் மலர்ந்து இன்சொல் கூறி வரவேற்றாள்; சமைத்து உணவு படைக்கும் கடமையில் முனைந்தாள். புன்முறுவல் கொண்ட முகத்தோடு ஊடலை அறவே மறந்து இவ்வாறு அன்புருவமாகத் தலைவி மாறியதைக் கண்ட தலைவன், 'இத்தகைய விருந்து மேன்மேலும் வரவேண்டும்; தலைவியின் ஊடல் தணிந்து மகிழ்விக்க வேண்டும்' என்று விரும்பினான். இதனை மாங்குடிகிழார் பாடிய நற்றிணைப் பாடல் ஒன்று எடுத்துரைக்கின்றது. அப்பாடல் வருமாறு:

"சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப,
வாழை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇ

புகையுண்டு அமர்த்த கண்ணள், தகைபெறப்
பிறைநுதல் பொறித்த சிறுநுண் பல்வியர்
அம்துகில் தலையின் துடையினள், நப்புலந்து,
அட்டி லோளே அம்மா அரிவை;
எமக்கே வருகதில் விருந்தே; சிவப்பு ஆன்று,
சிறுமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம்காண் கம்மே" (நற்.பா.120)

"விருந்தோடிருந்து உண்டி கொள்ளச் சமைத்தபோது புலவிக்குறிப்புச் சிறிதுமின்றி இன்முகமும் இன்மொழியும் வழங்கித் தாயினும் பரிந்து உண்பித்தமையின், அதனைப் பெரிதும் வியந்து, 'எமக்கே வருகதில் விருந்தே, சிவப்பு ஆன்று சிறுமுள் எயிறு தோன்ற முறுவல் கொண்ட முகம் காண்கம்மே" என்றான் என்று இப்பாடலின் முக்கியமான வரிகளுக்கு விளக்கம் தருகின்றார் உரைவேந்தர். மேலும்,

"கரணத்தின் அமைந்து முடிந்தகாலை" என்ற நூற்பாவில் வரும் 'நன்னெறிப் படரும் தொன்னலப் பொருளின்' கண் நிகழும் தலைவன் கூற்றுக்கு இப்பாட்டைக் காட்டி, "இதனுள் ஊடற் குறிப்பினளாகிய தலைவி மனைவாழ்க்கைத் தருமமாகிய விருந்து புறந்தருதல் விருப்பினளாதலின் நன்னெறிப்படர்தல் ஆயிற்று" என்பர் இளம்பூரணர் (நற். ப91) எனத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் கருத்தையும் சான்றுகாட்டித் தம் கருத்தை வலியுறுத்துவதைக் காணலாம்.

சாதல் அஞ்சேன் - தலைவி மாண்பு

தலைவன் உயிர்வேறு தன் உயிர்வேறு என எண்ணாத தலைவி, தன் தலைவனுக்காகத் தன் உயிரையும் தருவாளாம்; ஆனால் தாராது இருக்க ஒரு காரணம் உண்டாம். அது, பிறக்கும் பிறப்பு வேறாய்த் தலைவனை மறக்கநேர்ந்து விட்டால் என்ன செய்வது என்னும் தடையால் உயிரைத் தாங்கி நிற்கிறாளாம்.

"சாதல் அஞ்சேன்; அஞ்சுவல் சாவின்
பிறப்புப்பிறிது ஆகுவது ஆயின்
மறக்குவென் கொல்என் காதலன் எனவே" (பா.297)

என்கிறாள்.

பண்பாடே செல்வம்

உலகத்தில் ஆடம்பரமாக வாழ்வதைச் செல்வம் என்று சான்றோர் மதிப்பதில்லை; அது பெருமையாகச் சொல்லப்படுதலும் இல்லை. விரைவாகச் செல்லும் யானை, தேர் முதலியவற்றில் ஊர்தலும் செல்வம் அல்ல; அவை செய்வினையின் பயன். சான்றோர் செல்வம் என்று போற்றுவது புறத்தே விளங்கும் பகட்டான ஆடம்பரத்தை அன்று; அகத்தே விளங்கும் அரிய பண்பாட்டையே ஆகும். தம்மைச் சேர்ந்தவர்களின் துன்பத்திற்காக அஞ்சுகின்ற மென்மையான பண்பே சான்றோரால் செல்வம் என்று மதிக்கப்படுவது. இவ்வுண்மையை எடுத்துரைக்கின்றது ஒரு நற்றிணைப் பாடல்.

"நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்று; தன் செய்வினைப் பயனே;
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம்என் பதுவே" (நற்.பா.210)

தொடர் நயம்

உடன்போக்கு மேற்கொண்டு தலைவனுடன் செல்லத் துணிந்த தலைவியைத் தலைவனிடம் கையகப்படுத்தும் தோழி அவனிடம் கூறும் பாடலாக நற்றிணை 10ம் பாடல் அமைந்துள்ளது. இப்பாடலைப் பாடியவர் குடவாயிற் கீரத்தனார் என்னும் புலவர் ஆவார்.

'அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனியின் மணியின் தாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர...
... ...
பிழையா நன்மொழி தேறிய இவட்கே.' (பா.10)

"தாய்மையுணர்வின்கண்... அமுதம் சுரத்தற்கேற்ற வளமை பெருகிய நிலையில் பணைத்துப் பெருத்தல் இயல்பு; இளமார்பு அண்ணாந்த நிலையொன்றையே விழைந்து கூடியிருத்தலும் பின்னர்ப் பிரிதலும் உடல்வழி இயங்கும் உள்ளமுடையார்க்கே உரியவை; அவை நின்பால் உளதாகல் கூடாது என்பாள். 'அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும் நீத்தல் ஓம்புமதி' என்று தோழி கூறினாள்... மகளிர்க்குக்

கருக்கோடற்குரிய செவ்விக்கண் கருங்கதிர் விரித்தொளிரும் கூந்தல், அச்செவ்வி மாறும் நிலையில், உண்ணின்று ஊக்கிப் போந்த காதற்காமவுணர்வின் காமப்பகுதி தேய்ந்து கெடும் திறத்தைக் காட்டி, உண்மைக் காதலுணர்வாய்க் காதலன் உயிரொடு தொடரும் ஒளியும் நிறமும் பெறுதலை நரைமுடி நன்கு உணர்த்துதலின், அக்காலத்தே பிரிதல் கூடாது என்பாள். 'தாழ்ந்த நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும் நீத்தல் ஓம்புமதி' என்றாள். இளமைக்கண் வளமுற்றுச் சிறந்து மிக விரைவில் சாய்ந்து முதுமையைத் தோற்றுவிக்கும் இயல்பினால் மார்பின் தளர்வை முற்படவைத்தும், அவ்வளம் பெரிதும் குறைந்தமை புலப்படுத்தும் நரையைப் பின்னர் வைத்தும் கூறினார்... பூக்கேழ் ஊரன் ஆகலின், நின்னூர்க் கண் பூவோரன்ன மகளிர்க்குக் குறையில்லை ஆகலின், நீ வண்டோரனையை யாய் மாறுதல் கூடாது என்பது விளங்க நீங்கற்க என்னாமல் நீத்தல் ஓம்புமதி என வற்புறுத்தினாள் எனவுமாம்" *(பக்.86-87)* என்று ஒவ்வொரு தொடருக்கும், சொல்லுக்கும் நீண்ட விரிவான விளக்கம் எழுதிச் செல்கின்றார் உரைவேந்தர்.;

"... வாழி தோழி பெரியோர்
நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே" (பா.32)

என்பது 'தோழி தலைமகட்குக் குறைநயப்பக் கூறியது' என்னும் துறையில் அமைந்த கபிலரின் பாடல் ஆகும். இப்பாட்டில், தலைவி தலைவனுடன் நிகழ்ந்த இயற்கைப் புணர்ச்சியை மறைக்க முயல்கின்றாள்; பெண்மைப் பண்பால் கூற இயலாது வருந்திய தலைவிக்குச் சான்றோர் சான்றாண்மை கூறுமாற்றால் மதி நுட்பத்துடன் வாய் திறந்து பேசுமாறு செய்கிறாள் தோழி.

'அவட்கும் (தலைவி) தலைமகனுக்கும் உண்டான உறவினைத் தான் அறிந்துள்ளமையைத் தலைமகட்குத் தெரிவிப்பதன்றி வேறு செயலின்மையின், இவ்வாராய்ச்சியை இயற்கைப் புணர்ச்சிக்கு முன்பே செய்தற்குரிய நீ, அதற்குப் பின்னர்ச் செய்வது பெருமையாகாது என்று தெருட்டுவாளாய், 'பெரியோர் நாடி நட்பினல்லது நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே' என்றாள்... 'பெரியோர், முன்கூட்டியே நன்கு ஆராய்ந்து தெளிவெய்திய பின்பு ஆராய்வது செய்யார்; செய்யின்

அது பெருமை பயவாது என்பது கருத்து" என்று இயம்பினாள்" (ப.196) என்றும், 'நாடாது நட்டலின் கேடில்லை நட்டபின் வீடில்லை நட்பாள்பவர்க்கு' (குறள்,791) என்பது இங்கு ஒப்புநோக்கற்குரியது (பக்.197-198) என்று வள்ளுவர் வாய்மொழியையும் மேற்கோள் காட்டித் தொடருக்கு நயம் கூறுகிறார் உரைவேந்தர்.

"நிலையான வாழ்க்கைக் கணங்கொள் உமணர்" என்ற தொடருக்கு, "நாடுதோறும் ஊர் ஊராய்ச் சென்று வாணிகம் செய்வது பற்றி, 'நிலையா வாழ்க்கைக் கணங்கொள் உமணர்' என்றார் பலராய்க் கூடிச் செல்லும் பான்மையர் ஆகலின், 'கணங்கொள் உமணர்' என்று குறிக்கின்றார் என உரைசெய்கின்றார் உரைவேந்தர்.

"கரும்பைக் கணுக்கணுவாகத் தறித்துச் சுவை காண்பது போலப் பாட்டைத் தொடர் தொடராகப் பிரித்துப் பொருள் உரைப்பது பழைய உரைகாரர்களான பரிமேலழகர் நச்சினார்க்கினியர் முதலியோர் கைக்கொண்ட முறை யாகும். அம்முறையில் இவ்வுரையும் அமைந்திருப்பதால், படிக்கும்போது பல இடங்கள், உரைவேந்தர் உரையோ பரிமேலழகர் முதலியோர் உரையோ எனப் பன்முறையும் நம்மை மருட்டுகின்றன" (ப.10) என்று இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய அறிஞர் திருமதி இராதா தியாகராசன் குறிப்பிடுவது முற்றிலும் பொருந்துவதாகும்.

பொருள் நயம் காணுதல்

நற்றிணையின் முதற் பாடலிலேயே தலைவன் தலைவியர் சிறப்பும் காதல் சிறப்பும் குடிநலச் சிறப்பும் அருமையாகக் கூறப்பட்டுள்ளன. அப்பாடல் தலைவி கூறுவதாக அமைந்தது. பாடியவர் கபிலர்.

"தலைவர் நிலைபெற்ற சொல்லை உடையவர்; நாளும் நாளும் பெருகிய அன்பில் விளங்கும் இனிமையர்!" என்கிறார். அவர்தம் காதல் அன்பும் குடிநலப்பேறும் அரியவை. தாமரை மலரின் தேனை எடுத்துச் சந்தன மரத்தில் கட்டப்பட்ட கூட்டில் வைக்கப்பட்ட தேன் போன்ற இனிமையும் பண்பு நலமும் உடையவர்! அவர்தம் இயல்பை நோக்கினால் பெரியவர் என்பவர் தன்மை எவ்வாறு இருக்கும் என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம் என்று தன் தோழிக்குக் கூறுகிறார்":

"நின்ற சொல்லர் நீடுதோறு இனியர்
என்றும் என்தோள் பிரிபுஅறி யலரே
தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீரின்றி அமையா உலகம் போலத்
தம்மின்று அமையா நம்நயந்து அருளி
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்பு அறியலரே" (நற்.பா.1)

"சாந்தில் தொடுத்த தீந்தேன் நறுமணம் பெற்று உயர்ந்தாற் போல, அவர்பால் வைத்த என் அன்பு, புரையோனாதலின் கேண்மை பெற்று உயர்ந்தது என்றற்குத் தீந்தேன் போலப் புரையமன்ற எனப்பட்டது. புரை - உயர்வு; புரையோர் என்றது தலைமகன் மேல் நின்றது. இச்சிறப்பால், நீர் இல்வழி உலகியல் அமையாதொழிவது போல அவர் இல்வழி யான் உயிர் வாழாத தொடர்புஉண்டாய் விட்டது என்றும், அதனையும் அவர் நன்கு அறிந்து தலையளித்து ஒழுகுகின்றார் என்பாள், நீரின்றி அமையா உலகம் போலத் தம்மின்று அமையா நம் நயந்து அருளி என்றும், அவர் பிரியார் என்றும்" (ப.40) கூறுகிறார்.

களவின்கண் ஒழுகிவரும் தலைமக்களிடையே, தலைமகன் அக்களவினையே விரும்பியொழுகலானான்; அதனால் தலைமகனைக் கூடிய வழி இன்புறுதலும், பிரிந்த வழிப் பசத்தலும் எய்தித் தலைவியது மேனிநலம் அடிக்கடி மாறத் தலைப்பட்டது. அதனைக் கண்ட ஏதில்மகளிர் அலர் கூறலாயினர். அதனை அறிந்த தலைவியின் அன்னை, அவளை இற்செறித்துப் புறம்போகாதவாறு சிறை செய்தார். தோழி தலைவனைக் காணும்போதெல்லாம் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் வரைவு கடாவி வந்தாள்; வேறு வழியின்மை கண்ட தோழி தலைமகளைக் கொண்டுதலைக் கழியுமாறு தூண்டுவதே இனிச்சிறந்தது எனத் துணிந்தாள்.

ஒருநாள் தலைவன் சிறைப்புறம் வந்து நின்றதைத் தோழி கண்டாள்; அதனைத் தான் அறியாது தலைவியொடு உரையாடுபவள் போலத் தலைமகன் கேட்பத் தலைவியை நோக்கி, "தோழி, இவ்வூர் மகளிர் சிலரும் பலருமாகத் தம்மிற்

கூடிக் கடைக்கண்ணால் நம்மை இகழ்ந்து நோக்கித் தம் மூக்கை உயர்த்திக் கைவிரலை வாயில் வைத்து, அம்பலும் அலரும் உரைக்கின்றார்கள். அவர்களுடைய அச்செயலைக் கண்டுணர்ந்த அன்னை வெகுண்டு கையில் ஒரு சிறுகோலை ஏந்தி வந்து அச்சுறுத்தி அலைப்பதால் யான் பெரிதும் வருந்துகின்றேன்; இனி, நள்ளிரவில் தேரூர்ந்து வரும் தலைமகனான கொண்கனது தேரேறி அவனூர்க்குச் செல்லக் கருதுகின்றேனாகலின், அலர் கூறும் தொழிலராகிய இவ்வூரவர் அதனைத் தாமே சுமந்து ஒழிக" என்று மொழிந்தாள். இதனைச் சிறைப்புறத்து நின்று கேட்ட தலைமகன் நிலைமை கடிதானமை உணர்ந்து தெருண்டு வரைதலை மேற்கொள்வானாயினான்.

இக்கூற்றின்கண், தலைவியது காதற் பெருமையை ஊரவர் கூறும் அலர்மேல் வைத்துக் காட்டித் தலைவியைத் தலைமகனோடு போக்குடன்படுத்தும் செயல் நலத்தை வியந்து நோக்கிய உலோச்சனாரது பாடல் வருமாறு:

'சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் ஊக்கி வாய்விரல் பொத்தி
மறுகில் பெண்டிர் அம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப
அலந்தனென் வாழி தோழி கானல்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவல்
கடுமாப் பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉம் பெருந்தோட் கொண்கனொடு
செலவயர்ந் திசினால் யானே
அலர்சுமந் தொழிகஇவ் அழுங்கல் ஊரே'

(நற்.பா.149)

- இது தோழி தலைவியை உடன்போக்கு வலித்தது; சிறைப்புறமாகச் சொல்லியதூஉமாம். 'சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி, மறுகில் பெண்டிர் அம்பல் தூற்ற' என்பதற்கு உரைவேந்தர் தரும் விளக்கம் வருமாறு:

"சில பல என்பன தமிழ் வழக்கு. இரண்டு முதல் ஐந்து சேர்ந்தவை சில என்பதனுள்ளும், அவற்றின் மிக்கவை பல என்பதனுள்ளும் அடங்கும் என்பர். சிலரும் பலருமாய்க் கூடிப் பேசுதல் பெண்மக்கட்கு இயல்பாதலின், சிலரும் பலரும்

என்றும், ஒருபால் நிகழும் மறைந்த செய்கையை அவர்க்குப் புறத்தே அவர் அறியாவாறு பேசுதலால் கண்ணின் கடைப்பார்வையால் பார்த்துக்கொண்டு பேசுவது பற்றி, கடைக்கண் நோக்கி என்றும் கூறினாள். தலைமகளை உடன்போக்கிற்கு இசைவித்தலும், தலைமகனைக் கொண்டுதலைக் கழியுமாறு அறிவுறுத்தலும், தோழிக்குக் கருத்தாதலால், தான் உரை நிகழ்த்தற்கு உரிய ஏது, ஊரவர் கூறும் அம்பலும் அலரும் என எடுத்துக் கூறுகின்றமையின், 'சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி' என்றும், மறையாயின பேசுமிடத்து மூக்கின் உயிர்த்து வாயிதழைப் பொத்திக் கொண்டு உரையாடுவது மூத்து முதிர்ந்த பெண்டிர் செயற்பண்பாதல் கண்டு 'மூக்கின் ஊக்கி வாய்விரல் பொத்தி' என்றும், ஏனை இளமகளிர் போல மனையின் அகத்தே ஒடுங்கியிராது புறத்தே இருந்துகொண்டு அம்பலும் அலரும் கூறுவது இயல்பாதல் பற்றி, 'மறுகில் பெண்டிர் அம்பல் தூற்ற' என்றும் கூறினாள் (ப.237) என்று உரைவேந்தர் தரும் விளக்கம், அபிநயம் பிடித்து நாட்டியம் ஆடும் மகளிரைக் காண்பது போல் அமைந்துள்ளது.

'மூக்கின் ஊக்கி வாய்விரல் பொத்தி'

என்னும் பாடல் வரி, 'மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி' என்று பாட பேதமாகக் காணப்படுவதையும் சுட்டிச் சென்றுள்ளார் உரைவேந்தர்.

வெறியாடல்

களவுக் காதல் தொடர்புற்ற தலைமக்களிடையே தலைவன் களவொழுக்கத்தை நீட்டித்தான். முறுகிப் பெருகிய காதலால், தலைமகள் மேனியிலும் ஒழுக்கத்திலும் வேறுபாடு தோன்றுவதாயிற்று. உண்மையறியாத அவளுடைய தாயார், "இவட்கு இவ்வேறுபாடு முருகனால் உண்டாயிற்று" எனப் பிறழக் கொண்டு முருகவேட்கு வெறி எடுப்பாராயினர். வெறியாடும் வேலன் கடப்பம்பூவால் தொடுத்த கண்ணி சூடி முருகற்குரிய வேற்படையைக் கையில் ஏந்தி வெறி மனையின்கண் வெறியாடலுற்றான். தன் மேல் முருகன் வந்ததாகவும், அவனே அவட்கு அவ்வேறுபாடு எய்துவித்ததாகவும் வேலன் கூறினான். அதனைக் கேட்ட தோழி, வேலனுடைய பொய்யுரையைத் தலைமகட்குக் கூறுவாளாய், அப்போழ்தில் அவள் மனையின் சிறைப்புறம்

வந்து நின்ற தலைவன் செவிப்படுமாறு, தலைவனது நட்பால் உண்டாகிய வேறுபாட்டை அறியாமல் "நின்னால் உண்டானதாக நினைத்து வேலன் எடுக்கும் வெறிமனைக்கு வந்த முருகனே, நீ கடவுளேயாயினும் இப்போது மடவையாவாய் என்று தெளிந்தேம்" என்றாள். இதனைக் கேட்கும் தலைமகன், பிறர் இனிது அறியத்தக்க அளவில் தலைமகட்குக் காதல் பெருகி வேறுபாடு பயந்து விட்டமையின், இனி விரைய வரைந்து கோடல் தக்கது எனத் தெளிந்து வரைவுக்கு வேண்டுவன முயல்கின்றான். செவிலி முதலிய தாயர் கேட்டு வெறியாடல் முதலிய வற்றைக் கைவிட்டுத் தலைவி உள்ளத்தில் வீற்றிருக்கும் தலைமகற்கு அவளை மணம் செய்விக்கும் கருத்தினரா கின்றனர்.

'கடவுட் கற்சுனை அடைவிறந்து அவிழ்ந்த
பறியாக் குவளை விரைஇக் காந்தள்
குருதி ஒண்பூ உறழக் கட்டிப்
பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி இன்னியத் தாடும் நாடன்
மார்புதர வந்த படர்மலி அருநோய்
நின்அணங் கன்மை அறிந்தும் அண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவுள் ஆயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே' (நற்.பா.34)

அறத்தொடு நிற்றல் துறையில் அமைந்த பாடல் என்பதை உரையின் இறுதியில் கூறிச் செல்கின்றார் உரைவேந்தர்:

"அறத்தொடு நிற்கும் காலத்தன்றி. அறத்தியல் மரபிலள் தோழி என்ப" என்பதற்கு இப்பாட்டைக் குறிப்பித்து, "இது வெறியாட்டு எடுத்தவழி அறத்தொடு நின்றது" என்றும், இது முருகற்குக் கூறியது என்றும் கூறுவர் நச்சினார்க் கினியர், இளம்பூரணர். 'இது முருகனை முன்னிலையாகக் கூறியது என்றும், சூடிய சென்றுழி அழிவு தலைவரின் நிகழும் கூற்று என்றும் கொள்வர்" என்று பாடலின் அகப்பொருள் மரபையும் சுட்டிச் செல்கின்றார் உரைவேந்தர்.

விழாக்கள்

சங்க காலத்துத் தமிழர் கொண்டாடிய கார்த்திகை விழா பற்றிய குறிப்பு ஒரு நற்றிணைப்பாடலில் கூறப் பட்டுள்ளது.

‘குறுமுயல் மறுநிறம் கிளர மதி நிறைந்து
அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்
மறுகு விளக்குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழா’ (நற்.பா.31)

என்று பாராட்டிக் கூறுவதை உரைவேந்தர் எடுத்துக் கூறியுள்ளார்.

உயிரின் இயல்புகளைச் சுட்டி விளக்கம் கூறுதல்

புன்னைத் தங்கை

சங்க காலத் தமிழ்ப் புலவர்கள் இயற்கையை இயற்கைக்காகப் பாடவில்லை; இயற்கை மூலம் வாழ்வியல் நெறிகளையும் எடுத்துக்காட்டியுள்ளனர். நற்றிணையில் அமைந்த ஒரு பாடல், தலைவி ஓரறிவு உயிரான புன்னை மரத்தையும் போற்றித் தங்கை எனக் குறிப்பிடுவதைக் காணலாம்.

இளம் பருவத்தில் தலைவி தோழியரோடு மணலில் புன்னை விதையை மறைத்து வைத்து விளையாடினாள்; அக்காயை எடுக்க மறந்து விட்டாள்; பெய்த மழையால் அது முளைத்தது. அவளுக்குக் குடிக்கத் தாய் தந்த இனிய பாலை ஊற்றி அப்புன்னையை வளர்த்தாள். அதனைக் கண்ட தாய், ‘உன்னைப் பார்க்கினும் உன் தங்கையாம் புன்னை சிறந்தவள்’ என்றாள். ஆதலால் தலைவி அப் புன்னையைத் தங்கையாகவே மதித்தாள். தலைவன் ஒருநாள் அப்புன்னையின் கீழே நின்று தலைவியிடம் காதல்மொழி பேசினான்; தலைவி நாணம் கொண்டு என் தங்கைமுன் இவ்வாறு பேசாதீர் என்று சொல்லி அவ்விடம் விட்டு அகன்றாள் என்கிறது அப்பாடல்;

“காதல்-களவு- ‘மறையோர் ஆறு’ என்று கூறுவதை நயமாகச் சுட்டுகிறது அது” (ப.) என உரை விளக்கம் தந்துள்ளார் உரைவேந்தர்.

'விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைஇய
நெய்பெய் தீம்பால் பெய்துஇனிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை யாகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே.' (நற்.பா.172)

'நுவ்வை-நும் தங்கை. அவ்வை, தவ்வை என்றாற் போறலின், நுவ்வை நுமக்கு முன் பிறந்தாள் எனப் பொருள் தருமாயினும், ஈண்டுப்பின் தோன்றியமை பற்றி நும் தங்கை எனக் கூறல் வேண்டிற்று.'

'புன்னைப் பொதும்பருள் ஒரு புன்னை மரத்தின் கீழ்ப் பகற்போதில் தலைமகளைக் கண்டு அளவளாவி இன்புறும் தலைமகனோடு சொல்லாடலுறும் தோழி, இப்புன்னையை யாம் பகற்குறிக் களனாகக் குறித்தமைக்குக் காரணம் இஃது எம்மால் வளர்க்கப்பட்டதென்பாள், 'விளையா டாயமொடு வெண்மணல் அழுத்தி மறந்தனம் துறந்த காழ்முளை அகைய நெய்பெய் தீம்பால் பெய்தனம் வளர்ப்ப" என்றாள். ஒருகால் ஆய மகளிரொடு கூடி இங்கே யாம் விளையாட்டயர்கையில் எம்மால் மணலின்கண் மிதிப்புண்டு புதைந்த புன்னை வித்து என்றற்கு, 'விளையா டாயமொடு' என்றும், 'வெண்மணல் அழுத்தித் துறந்த காழ்' என்றும், யாம் வேண்டுமென்றே புதைத்ததன்று என்றற்கு மறந்தனம் துறந்த காழ் என்றும் கூறினாள். சின்னாட்குப் பின்னர், அது முளைவிட்டு வளரக் கண்டதும், அதனை யாம் உண்ட பாலைப் பெய்து வளர்த்தனம் என்பாள். 'நெய் பெய் தீம்பால் - பெய்தனம் வளர்ப்ப' இது வளர்ந்தது என்றும், அதன் வனப்பினை யாம் காட்டக் கண்ட எம் அன்னை மகிழ்ந்து, நும்போல் தழைத்து அழகுற்று விளங்குகின்றமையின், 'இது நுமக்குத் தங்கை யாம்' என எமக்கும் இதற்கும் உறவுமுறை கற்பித்தனள் என்பாள். 'நும்மிற் சிறந்தது நுவ்வையாகும்" என்று அன்னை கூறினள் என்றாள். ஏனைப் புன்னைகளிடை இஃதும் ஒன்றாயினும் எமக்குத் தங்கையாம் தனிச்சிறப்பு இதற்கு உண்டு என்றற்குப் புன்னையது சிறப்பு என்றும், அது காண அதன் நிழலிலே இருந்து யாம் இக்கனவினை மேற்கொண்டு ஒழுகுவதற்கு எம் உள்ளம் நாணத்தால் சுருங்கி மறுக்கின்றனதென்பாள், 'அம்ம நாணுதும் நும்மொடு நகையே' என்றும் உரைத்தாள்

எனப் பாட்டின் ஒவ்வொரு சொற்கும், தொடருக்கும் பொருள் விளக்கம் தந்து பாட்டின் முழுமையான கருத்தை உணர வைக்கின்றார் உரைவேந்தர்.

'அன்னை கூறினள்' என்றது அன்னை முதலிய தமர் அறிவரென அஞ்சியவாறு உணர்த்திற்று.

'உடனுறை உவமம் சுட்டு நகை' என்னும் நூற்பா உரையில் இப்பாட்டைக் காட்டி 'இதனுள் புன்னைக்கு நாணுதும் எனவே, அவ்வழித் தான் வளர்த்த புன்னை என்றும், பல்காலும் அன்னை வருவள் என்றும் உடனுறை கூறி விலக்கியவாறு என்பர் இளம்பூரணர்' (ப.362) என்று உரையாசிரியர் கருத்தை மேற்கோள்காட்டித் தம் கருத்தை நிறுவுகிறார் உரைவேந்தர்.

கடுவன் - மந்தி காதல்

'ஒரு கடுவனும் மந்தியும் கூட்டத்தில் இருந்து பிரிந்து செல்கின்றன; மிளகுக் கொடி பந்தலாகப் படர்ந்த மறை விடத்தை நாடின; கடுவன் மந்தியை அணைத்துத் தலையைத் தடவி இன்புற்றது; மந்தி கூட்டத்தொடும் அந்நிலையில் சேர நாணம் கொண்டது. அதனால் வேங்கை மரத்தில் ஏறிக் கீழே இருந்த நீர் நிலையில் தன் தலையையும் முகத்தையும் சரிசெய்து கொண்டு சென்றது. மக்கள் காதல் வாழ்வின் மறைநிலையை மந்தியைக் காட்டிச் சொல்கிறது' என்று ஒரு நற்றிணைப் பாடல் வழி எடுத்துக் காட்டுகிறார் உரைவேந்தர்.

களவினில் புணர்ந்த மந்தி,

'பொன்கிணர் வேங்கைப் பூஞ்சினைச் செலீஇயர்
குண்டுநீர் நெடுஞ்சுனை நோக்கிக் கவிழ்ந்துதன்
புன்தலைப் பாறுமயிர் திருத்தும்' (பா.151)

என்கிறது.

குருவிக் குடும்பம்

மற்றொரு அழகான காட்சி. வீட்டுக் கூரையில் கூடுகட்டி இருக்கும் குருவிக் குடும்பம். அதில் ஆண் குருவி வேற்றிடம் சென்று ஆங்கொரு குருவியொடு கூடியிருந்து கூட்டுக்குத் திரும்பியது. கூட்டில் பிள்ளையொடும் இருந்த பெண் குருவி, சேவல் குருவியைக் கூட்டுக்குள் வரவிடாமல் வெருட்டியது. சேவல் குருவி அயலே இருக்க மழை பெய்து அதனை

நனைத்தது. அது நனைவது கண்ட பெட்டைக் குருவி இரக்கம் கொண்டு கூட்டுக்கு அழைத்தது என்கிறது ஒரு பாடல் (பா.181)

'வாழ்வியல் படிப்பினைகளை மற்றை உயிரிகளின் வழியே கற்பித்துக் காட்டும் இச் செய்ம்முறை போற்றி மகிழத்தக்கதாம்' என்கிறார் உரைவேந்தர்.

அருஞ்சொற்பொருள் விளக்கம்

உரைக்கு விளக்கம் கூறும் பகுதியில், பாட்டின் சொற்புணர்ப்புகளில் அமைந்த வினைமுடிபு காட்டி அருஞ்சொற்களுக்குப் பொருளும், இலக்கண அமைதியும் கூறும் நயம் உரைவேந்தரிடம் காணப்படுகின்றது. சில சான்றுகள் வருமாறு:

'வேனிற் காலத்து மலர்வது பற்றி வேனில் முருக்கு எனப்பட்டது' (ப.288)

"அறுகாற் பறவை, தேன்வண்டு; வண்டுக்கும் கால் நான்கேயாயினும் முகத்தில் முந்தி நீண்டிருக்கும் உணரிகள் இரண்டனையும் கூட்டி அறுகால் என்பது பண்டையோர் கொள்கை" (ப.225)

"திருந்திசை - சிறந்த முறையில் இசைக்கக் கருதி யெடுக்கும் இசை, இதனை இந்நாளில் சுருதியென வழங்குப; பண்டை நாளில், இதனை இயக்கம் எனக்குறித்து மூவகைப் படுத்துரைப்ப; 'மூவகை யியக்கமும் முறையுளிக் கழிப்பி' (சிலப்.8:42) என்பது காண்க." (ப.360)

'கடவுள் முதுமரம்' (பா.83)

என்னும் தொடருக்கு,

"முதுமரங்களில் கடவுள் உறையும் என்பது பண்டை மக்களின் கொள்கையாதலின் கடவுள் முதுமரம் எனப் பட்டது. முதுமரம் எனப் பொதுப்படக் கூறினாராயினும் சிறப்புடைய ஆலமரம் கொள்ளப்படும்." (ப.416) என்று பொருள்விளக்கம் தருகிறார் உரைவேந்தர்.

'அம்பில்'; அன்பில் என்பதன் திரிபாம். அன்பிலும் பழமையான ஊர் என்றற்குக் கல்வெட்டுக்கள் அதனை வடகரை இராசராச வளநாட்டு மழநாட்டுக் கீழைமுறிப் பிரமதேயமான அன்பில் (Do.No.149 of 1937-38) என்றும், இவ்

அன்பில் ஆலந்துறைக்கண் கோயில் கொண்ட இறைவனைப் பாடிய திருநாவுக்கரசர், 'வள்ளலார் வயல் ஆலந்துறை' (திருநாவு. 191-6) என்றும் கூறுவது சான்றாகும்.

"கச்சிப்பேடு என்பது இன்றைய கச்சிமாநகர்க்குப் பெயர் என்பது கல்வெட்டுக்களால் (A.R No.474 of 1925, 239 of 1931, 82 of S.I.I. Vol.I) அறியப்படுகிறது" (ப.119).

இங்ஙனம் கல்வெட்டுச் சான்றுகள், இலக்கிய மேற்கோள்கள், மக்களின் பேச்சுவழக்கு முதலானவற்றை எடுத்துக் கூறிப் பொருள் விளக்கம் தருகின்றார் உரைவேந்தர்.

கல்வெட்டுச் சான்று தருதல்

நக்கீரர் தம் பாடல் ஒன்றில் குறிப்பிடும் மருங்கூர்ப் பட்டினம் (பா.31) குறித்துப் பல கல்வெட்டுச் சான்றுகள் தந்து விளக்கிச் செல்கின்றார் உரைவேந்தர்:

"மருங்கூர்ப் பட்டினம், பாண்டி நாட்டு முத்தூற்றுக் கூற்றத்துக் கடற்கரை ஊர்களுள் ஒன்று என இராமநாதபுரம் மாவட்டத்துத் திட்டாந்ததானபுரத்துக் கல்வெட்டுக்களால் (A.R. No.597?603 of 1926) தெரிகிறது; ஆயினும், இதற்கு வடபாலில் விளங்கிய ஊணூர் கல்வெட்டுக் காலத்தேயே மறைந்து போனதாக அறிகின்றோம்...

எருமை நாட்டு அயிரியாறு இப்போது மைசூர்நாட்டு ஆசன் மாவட்டத்துக் குறும்பர்நாடு வட்டத்தில் கடற் கரையில் இருக்கிறது. பவத்திரி நகரம் நெல்லூர் மாவட்டத்துக் கூடூர் வட்டத்துக் கடற்கரை நகராயிருந்து கடல் கோட்கு இரையாகி விட்டது; அதனை அம்மாவட்டத்து ரெட்டி பாளையம் கல்வெட்டுக்கள் "சயங்கொண்ட சோழ மண்டலத்துக் கடல்கொண்ட பவத்திரிக் கோட்டம்" (Nel Ins. Gudur No.87) என்று கூறுகின்றன.

கரிகாற் சோழனது ஆட்சி மேற்கில் மலையமான் நாடுவரையில் பரந்திருந்தமையின், அந்நாட்டின் கீழ்ப் பகுதியான திருமுனைப்பாடி நாட்டு இடையாறு என்னும் ஊர் அக்காலத்தே சிறந்த நகரமாக விளங்கிய செய்தியை நக்கீரனார் குறிக்கின்றார். பாண்டி நாட்டு வையைக் கரையில் விளங்கிய திருமருதத் துறை போலத் தென்பெண்ணை கரையில் இவ் இடையாறு திருமருதத் துறையாக விளங்கிற்று

என்பதை அவ்வூர்க் கல்வெட்டுக்கள் திருமுனைப்பாடி நாட்டு இடையாற்றூர் நாட்டு இடையாறுடைய திருமருதந் துறை" (A.R.No.278 of 19280-9) என்று கூறுகின்றன. (ந.மு.வி., பக்.189-190).

இங்ஙனம் பாடலில் இடம்பெறும் ஊர்ப் பெயரை, விளக்குமிடத்துப் பல கல்வெட்டுச் சான்றுகள் தந்து விளக்குகின்றார் உரைவேந்தர்.

வாழ்வியல்

'தோழி விறலிக்கு வாயில் மறுத்தது' என்னும் துறையில் பாணர் பாடிய நற்றிணைப் பாடலின் உரையில், சங்ககால மக்களின் வாழ்வியலைப் புலப்படுத்தும் வகையில் உரை செய்துள்ளார் உரைவேந்தர்.

"சங்க காலத் தமிழ் வாழ்வில் அரசர்களிடையே நிகழ்ந்த போர்களில் பார்ப்பனரும். மிக்க முதியவரும், சிறுவர்களும், பெண்டிரும், மகப்பெறாதோரும். நோயுற் றோரும் விலக்கப்பட்டனர். போரில் இறந்தோரெல்லாம் கட்டாண்மை மிக்க ஆடவர்களே; இதனால் நாட்டில் ஆண் மக்கள் கூட்டம் மிகுந்திருந்தது. ஆடவரும் பெண்டிரும் தத்தமக்குரிய வாழ்க்கைத் துணையைத் தாமே தேர்ந்து கொள்வது தான் அந்நாளைய மணமுறை. ஆணும் பெண்ணுமாகத் தாம் பெற்ற மக்கட்கு உரிய வாழ்க்கைத் துணையைப் பெற்றோர் தேர்ந்தெடுத்து மணம் செய்யும் இன்றைய முறை தமிழ் வாழ்வில் இடைக்காலத்தே புகுந்த புதுநெறி...

ஆயினும் பின்வந்த சிலப்பதிகாரத்தில் பெற்றோர் வாழ்க்கைத் துணையைத் தேடிப் புணர்க்கும் மணமுறை காணப்படுதலால், இளங்கோவடிகள் முதலிய சான்றோர் காலத்திலேயே தமிழ் வாழ்வு கொண்டிருந்த மண முறையுடன் பெற்றோர் புணர்த்தும் மணமுறையும் உடன் நிலவினமை பெறப்படுகிறது.

பழந்தமிழ் முறையில் ஒருவனுக்கு ஒருத்தியும் ஒருத்திக்கு ஒருவனும் வாழ்க்கைத் துணையாயினர். முதல் மனைவிக்கு மகப்பேறு இல்லையாயின் வேறொருத்தியை மணக்கும் உரிமை ஆடவனுக்கு உண்டு; இரண்டாமவட்குப் பின்முறை யாகிய பெரும்பொருள் வதுவைத் தொன்முறை மனைவி என்று பெயர் கூறுவர். இருவர்க்கு மேலும் உளராயின் அவர்

காமக்கிழத்தியர் எனப்படுவர். இவ்வாறு பலர் ஒருவனுக்கு உரியவராக வரையப்படின், அவர்கள் உரிமை மகளிர் எனப்படுவாராயினர். ஆனால் இருமணம் செய்து கோடல் மகளிர்க்கு இயல்பன்று.

ஆடவர் தொகை குறைந்தும் மகளிர் தொகை மிகுந்தும் இருந்தமையின், மனைவியராகவோ, காமக்கிழத்திய ராகவோ, உரிமை மகளாகவோ வரையப்படாத பெண்கள் வரைவில் மகளிர் என்று கூறப்படுவர். ஒருவரின் மேலும் பரக்கும் மனமுடையவர் பரத்தர்; அவருள் ஆடவரைப் பரத்தர் என்றும், பெண்டிரைப் பரத்தையர் என்றும் சான்றோர் வழங்குவர். பரத்தையரைக் கூடியொழுகுவது பரத்தைமை என்று கூறப்படும்.

மணமாகாத ஆடவர்கள் இரவில் தங்குவதற்கு ஒரு பொது இடம் வகுத்து அங்கே உறங்கச் செய்வது பண்டை நாளில் இருந்ததொரு வழக்காறு; அஃது இப்போது நாட்டுப்புறங்களிலும் மலைமுகடுகளில் வாழும் பழங்குடி மக்களிடையும் இருந்து வருகிறது. அவ்வாறே ஆடவர் இல்லாமையால் வாழ்க்கைத் துணையாக வரைந்து கொள்ளப் படாத மகளிர் பரத்தைமை பூண்டமையால், பரத்தையென ஒதுக்கப் பெற்றமையின், அவர்கட்கு ஊர்ப்புறத்தே வீடுகள் அமைத்து வாழச் செய்தனர்; அவர் உறையுமிடம் பரத்தையர் சேரி என வழங்கி வந்தது. வரைவில் மகளிர், ஆடல் பாடல் அழகுகளால் தம்மை உயர்த்திப் பொருளீட்டித் தம் வாழ்க்கையை நடத்தினர். நாடு புரக்கும் தலைவர்கள் அவர்கள் நலத்தைப் பேணி வாழச் செய்வது புரவுக் கடனாகக் கொண்டிருந்தனர். வேறு நாடுகளில் வேந்தரிடையே போர் நிகழுமாயின், வென்ற வேந்தர்க்குப் பொன்னும் பொருளும் போல நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் மகளிரைத் திறையாகக் கொடுக்கும் வழக்கம் இருந்தது; இதனை எரடோட்டஸ் முதலியோர் எழுதிய வரலாற்று நூல்களிலும் பரக்கக் காணலாம்.

அவர்கட்குப் (பரத்தையர்க்கு) பாணர் என்பார் துணையாக இருந்தனர்; பாண் மகளிரை விறலியர் என்பதும் உண்டு. அவர்கள் ஆடல், பாடல் அழகுகளில் வல்லுநராய், அரசர், செல்வர் முதலியோருடைய மற மாண்புகளையும். அறச் செயல்களையும் இசையிலும் கூத்திலும் அமைத்துப் புகழ்ந்து

அவர்தரும் பரிசில் பெற்று வாழ்வர். அவ் வழக்காறு இடைக்காலச் சோழ வேந்தன் இரண்டாங் குலோத்துங்கன் காலத்தும் இருந்ததனைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன *(பக்.347-349)* (S.I.I., Vol. V.No.705).

இங்ஙனம் 'தோழி விறலிக்கு வாயில் மறுத்தது' என்னும் துறையில் வரும் விறலி பற்றி விளக்க வந்தவர், பரத்தமை தோன்றிய சூழலை வரலாறு, இலக்கியம், கல்வெட்டு முதலான சான்றுகள் காட்டி அக்காலச் சமுதாயத்தை விளக்கிச் செல்வது அவரது ஆய்வுத்திறனைக் காட்டுவதாகும்.

திருமாவுண்ணி கதை

மதுரை மருதன் இளநாகனார் தாம் பாடிய நற்றிணைப் பாடலில் (பா.216), ஏதிலான் ஒருவன் எடுத்த அலர்க்கு ஆற்றாது தன் மார்பின் ஒருமுலையை அறுத்துத் தன் கற்பை நிலைநாட்டிய திருமாமண்ணி (திருமாவுண்ணி - பாடபேதம்) பற்றிய செய்தியை,

'எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
குருகார் கழனி இதனைத் தாங்கண்
ஏதிலாளன் கவலை கவற்ற
ஒருமுலை அறுத்த திருமா மண்ணிக்
கேட்போர் ஏனைய ராயினும்
வேட்டோர் அல்லது பிறர்இன் னரே' (பா.216)

என்று எடுத்தோதுகின்றார்.

திருமாமண்ணி என்ற நங்கை ஒருத்திபால் காதலுற்றுக் கனவின்கண் ஒழுகி வந்த ஒருவன் பின்னர்த் தான் அவளை 'அறியேன்' என அன்பின்றிச் சொல்லி நீங்கினான்; அதனால் மனக்கவலை மிக்க மாமண்ணி தனக்கும் அவற்கும் உண்டாகிய காதலுறவைச் சான்றோர் அவையில் அறத்தோடு நின்று முடிவில் தன் மார்பைத் திருகி எறிந்து கற்பை நிலை நாட்டினாள். உண்மையுணர்ந்த சான்றோர் அவற்கு அவளை மணம் செய்துதர, அவனைத் தனக்கு இனிய கணவனாகக் கருதி அவள் மனையறம் புரிந்து மாண்புற்றாள் என்பது இதன்கண் குறிக்கப்படும் வரலாறு (ப.39 of 221) என்று குறிப்பிடுகிறார் உரைவேந்தர். சிலப்பதிகாரக் கண்ணகி கதைக்குத் தோற்றுவாயாக அமைந்த ஒன்று என்று இதனைக் குறிப்பிடுவதுண்டு.

உரைவேந்தரின் நற்றிணை உரை திட்பமும், நுட்பமும், நிறைந்து விரிவான விளக்கவுரையாக அமைந்துள்ளது. பாடலைப் படிக்கு முன்னரப் புலவரைப் பற்றிய முழு ஓவியமும் நமக்குப் புலனாகின்றது. இதனால் விளையும் நன்மை என்னவெனில், அப்புலவரின் பாடலை விரைவில் கற்கவேண்டும் என்ற எண்ணம் எழும்.

பாடலைப்பாடிய புலவரின் பெயர், ஊர், அவர்பாடிய பாடல்கள், பாடல் எழுந்த சூழல், உரையின்கண் அமைந்துள்ள வரலாற்றுச் செய்திகள், கல்வெட்டுச் சான்றுகள், இலக்கிய இலக்கண மேற்கோள்கள், தமிழ் மக்களின் வாழ்வியல் செய்திகள், உவமை நயங்கள், சொற்பொருள் விளக்கங்கள், தொடர்நயங்கள், பொருள் நயங்கள் முதலியன உரை வேந்தரின் புலமைத் திறத்தையும், ஆய்வியல் மனப்பான்மை யையும், பதிப்புத் திறனையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. இந்நூலுக்கு உரைநலம் வரைந்த பேராசிரியர் கண சிற்சபேசன் அவர்கள், “உரை முழுவதையும் நன்கு கண்ட எனக்கு ஒரே ஒரு குறையுண்டு, உரையைக் காண இரு கண்ணும், கருத ஒரு நெஞ்சமும், அறிய ஆறறிவும், எழுத ஒரு கையும் போதா. கற்றார்க்குக் கழிநலம் சேர்க்கும் பாகினும் இனிய இவ்வுரை கருத்துக் கருவூலம். தமிழ் மரபின் புதிய திறவுகோல், உரைநடைச் செறிவின் உயர்ந்த தோற்றம், ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் தமிழ் நெல்லிக்கனியை உண்டார். அவர் நெடிது வாழ்க. வளர்க அவர்தம் அரும் பணி. ஓங்குக அவர்தம் உழைப்பு” (ந.மூ.வி.ப.21) என்று குறிப்பிடுவது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை.

5. பதிற்றுப்பத்து உரைத்திறன்

"புறநானூறு, பதிற்றுப்பத்து,
ஐங்குறுநூறு, நற்றிணை,
மணிமேகலை
ஆகிய நூல்களில்
ஆழங்காற்பட்டு –
அவர்
ஆக்கியளித்த
உரை மூலம்
உயர்ந்தது மூலம்!" – வாலி*

எட்டுத்தொகை நூல்களுள் பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறப்பொருள் பற்றிய தொகை நூல்கள். இவை இரண்டும் அகவற்பாக்களால் அமைந்தவை. எனினும், இரண்டிற்கும் இடையே ஓர் இன்றியமையாத வேறுபாடு உண்டு. சேர, சோழ, பாண்டியர்கள், குறுநில மன்னர்கள், வேளிர் முதலானோர் பற்றிய பாடல்களின் தொகுதி புறநானூறு. பதிற்றுப்பத்தோ சேர மன்னர்களைப் பற்றி மட்டுமே அமைந்த பாடல்களின் தொகுதி ஆகும்.

பத்துப் பத்துப் பாடல்களால் அமைந்த பத்துப் பகுதிகளைக் கொண்ட நூல் ஆதலின், இது பதிற்றுப்பத்து என்னும் பெயரினைப் பெற்றது. ஒவ்வொரு பத்தும், தனித்தனியே, ஒவ்வொரு புலவரால், ஒவ்வொரு சேர மன்னரைக் குறித்துப் பாடப் பெற்றதாகும். இதில் உள்ள பத்துப் பத்துகளும், 'இரண்டாம் பத்து' 'மூன்றாம் பத்து' என்றாற்போல் எண்ணால் பெயர் பெற்றுள்ளன. இந்நூலினைத் தொகுத்தார், தொகுப்பித்தார் பற்றிய குறிப்பு எதுவும் கிடைக்கவில்லை. இத்தொகை நூலில் இப்பொழுது கிடைக்கும் பாடல்கள் 80; உரைகளால் தெரியவரும் பாடல்கள் 6. நூலின் முதற் பத்தும், பத்தாம் பத்தும் பற்றிய பாடல்கள் எந்த ஏட்டிலும் காணப்படவில்லை.

---

* இவர்கள் இன்னமும் இருக்கின்றார்கள், பக்.327, 329.

ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் மெய்க்கீர்த்திகளைப் போன்ற அமைப்பில் அப்பத்தைப் பாடியவர், அதன் பாட்டுடைத் தலைவர். அவர் செய்த அருஞ்செயல்கள், புலவருக்கு அவர் அளித்த பரிசில் முதலான செய்திகளைத் தெரிவிக்கும் பதிகம் அமைந்துள்ளது.

பாடாண் திணை

பாடாண் திணை என்பது பாடப்பட்ட தலைவனது புகழ், வீரம், கல்வி, கொடை முதலான பண்புகளைப் புகழ்தலும், அத்தலைவனை வாழ்த்திப் பாடுதலும் ஆகும்.

பதிற்றுப்பத்துப் பாடல்கள் சேர வேந்தர்களின் ஆற்றல்மிக்க ஒழுகலாறுகளைப் புலவர்கள் தம் பாடற்குரிய பொருளாகக் கொண்டு பாராட்டும் முறையில் அமைந்துள்ளன. ஆகவே 'இத்தொகையின்கண் அமைந்த பாடல்கள் பாடாண்திணை என்ற ஒரு திணையையே பொருளாகக் கொண்டு பாடப்பெற்றன எனக் கொள்ளலாம். 'பதிற்றுப் பத்து நூறும் இவ்வாறே வருதலின் பாடாண்திணையே ஆயிற்று' (தொல்.புறம்.25) எனவரும் நச்சினார்க்கினியரின் உரைக்குறிப்பும் இவ்வுண்மையினை வலியுறுத்தல் காணலாம். "இப் பாடல்களைத் தொகுத்தோர் ஒவ்வொரு பாடலுக்கும் திணையமைதி கூறாது, துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்பவற்றை மட்டுமே குறித்துச் செல்லுதற்கு இதுவே காரணமாதல் வேண்டும்" என்பர் அறிஞர் க.வெள்ளை வாரணனார் (உரைநலம், பதிற்றுப்பத்து மூலமும் உரையும், ப.17)

உரைநெறி

பதிற்றுப்பத்தில் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் வண்ணம், தூக்கு, துறை, பெயர் முதலியன வகுக்கப் பெற்றுள்ளன. இப்பெயர்களே பதிகத்திலும் தொகுத்துக் காட்டப்படுகின்றன. பதிற்றுப்பத்துக்குப் பழைய உரை உள்ளது. பழைய உரையினை இயற்றிய ஆசிரியர் பெயரும், காலமும் தெரியவில்லை.

இந்நூலை முதன்முதலில் பதிப்பித்த உ.வே.சாமி நாதையர், "ஒவ்வொரு செய்யுளின் பின்னும் அமைந்துள்ள துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்பவைகள் உரையில்லாத மூலப் பிரதிகளிலெல்லாம் இருத்தலின், அவை உரை

யாசிரியரால் எழுதப்பட்டன அல்ல என்றும், பதிகங்கள் உரைப் பிரதிகளில் மட்டும் காணப்படுகின்றமையால் அவற்றை இயற்றினோர் நூலாசிரியர் அல்லர் என்றும் தெரிகின்றன. ஆசிரியர் நச்சினார்க்கினியராலும், அடியார்க்கு நல்லாராலும் தத்தம் உரைகளில் எடுத்தாளப் பெற்றிருத்தலின், இப் பதிகங்கள் அவர்கள் காலத்திற்கு முந்தியவை என்று தோன்றுகின்றது" என்று கூறுவது இங்குக் கருதத்தக்கது.

உரைவேந்தர், மாணவர்களுக்குப் பதிற்றுப்பத்து கற்பிக்க வேண்டிய சூழல் எழுந்தபோது, பதிற்றுப்பத்து ஏட்டுச் சுவடிகளைத் தேடத் தொடங்கினார்; கிடைத்த சுவடி களைக் கொண்டு திருத்திய பதிப்பு முறையில் இந்நூலை 1950-ஆம் ஆண்டு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வாயிலாக வெளியிட்டுள்ளார்.

உரைவேந்தரது உரை, இந்நூலிலுள்ள அருஞ்சொற் களுக்கும், தொடர்களுக்கும் பொருள் கூறியும், சொல்முடிபு பொருள் முடிபு காட்டியும், ஒவ்வொரு பாடலுக்கும் உரிய துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்பவற்றின் அமைதியைப் புலப்படுத்தியும், இடையிடையே பாட்டின் சுவை நலங்களைச் சுருக்கமாக விளக்கியும், இலக்கணக் குறிப்புக்கள் தந்தும், இறுதியில் கருத்துரைத்தும், பாடல் களில் உள்ள வரலாற்றுக் குறிப்புக்களை விளக்கியும் இந்நூற் பொருளைத் தெளிவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது. பதிற்றுப்பத்துப் பாடல்களின் சுவை நலங்களைத் தமிழ் மாணவர் யாவரும் தெளிவாக உணர்ந்து மகிழும் வண்ணம் உரைவேந்தரது புதிய உரை அமைந்துள்ளது.

பாடினோர் வரலாறு தருதல்

பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்து இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனை ஆசிரியர் குமட்டூர்க் கண்ணனார் பாடியது. 'பாடினோர் வரலாறு' பகுதியில் உரைவேந்தர் 'குமட்டூர்' பற்றிய குறிப்பைக் கல்வெட்டுச் சான்றுகளின் வழி விளக்கிச் செல்கின்றார்.

"குமட்டூர் என்ற பெயரையுடைய ஊர்கள் நம் நாட்டில் இப்போது காணப்படவில்லை; கல்வெட்டுக் காலங்களில் இருந்து பின் மறைந்து போன ஊர்கள் பல உண்டு. ஆதலால், அவற்றை நோக்குமிடத்துக் குமட்டூர் எனப் பெயரிய ஊர்கள் இரண்டு கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. அவற்றுள்

ஒன்று குண்டூர் சில்லாவின் தலைநகரான குண்டூர். அங்குள்ள கல்வெட்டு ஒன்று (A.R.No. 83 of 1971) அதனை, ஓங்கேரு மார்க்கத்தில் உள்ள குமட்டூரு என்று குறிக்கிறது. அது சகம் 1080-ஆம் ஆண்டில் (கி.பி.1158) தோன்றியதாகும். மற்றொன்று புதுக் கோட்டையைச் சேர்ந்த சித்தன்னவாசல் என்னும் இடத்திற் காணப்படும் கல்வெட்டு. இச்சித்தன்னவாசல் கல்வெட்டின் காலம் கி.மு.இரண்டாம் நூற்றாண்டாகவோ மூன்றாம் நூற்றாண்டாகவோ கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர் (P.S.Ins.No.1). இஃது அசோக பிராமி எழுத்தாக எண்ணப்படுகிறது. தமிழ்த்தொடர் ஒன்று அசோக பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது எனவும், இவ் வழக்காறு, மதுரை திருநெல்வேலி சில்லாக்களில் வழங்கியது எனவும்' கல்வெட்டுத் துறைத்தலைவர் திரு.கே.வி.சுப்பிரமணிய அய்யர் எடுத்தோதுவதாகக் குறிப்பிடுகின்றார் உரைவேந்தர் (பதிற்றுப்பத்து மூலமும் உரையும், ப.30). மேலும், அவர் தரும் கல்வெட்டுச் சான்றுகளின் வழி, கண்ணனாரது குமட்டூர் ஓய்மா நாட்டுக் குமட்டூர் என்பதும், இது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே விளங்கியிருந்த தொன்மையான ஊர் என்பதும், ஓய்மா நாடு என்பது, தென்னார்க்காடு சில்லாவில் திண்டிவனம் தாலுகாவையும், செங்கற்பட்டுச் சில்லாவின் மதுராந்தகத் தாலுகாவின் தென்பகுதியையும் தன்கண் கொண்டு விளங்கிய தொன்மை நாடாகும் என்பதையும், அவ்வூர் இன்று முட்டூர் என்று வழங்கப் படுவதாகும் என்பதையும் மிக விரிவாக விளக்கியுள்ளார் உரைவேந்தர். எனவே, "இரண்டாம் பத்தைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார் தொண்டை நாட்டு ஓய்மா நாட்டைச் சேர்ந்த சான்றோர் என்பது தேற்றம்" என்று குறித்துச் செல்வது உரைவேந்தரது நுணுக்கமான ஆய்வுத்திறத்தைப் புலப்படுத்துகிறது. இவ்வாறே ஒவ்வொரு புலவரது வரலாற்றையும் மிக விரிவாக விளக்கிச் செல்கின்றார் உரைவேந்தர். தாம் எடுத்துக்கொண்ட பணியை மிகச் செம்மையாகச் செய்து முடிப்பதில் வல்லவர் என்பதையும் இது புலப்படுத்துகிறது.

திணை, துறை, வண்ணம், தூக்கு, பெயர் விளக்கம் தருதல்

பதிற்றுப்பத்தில் காணப்படும் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் துறை, வண்ணம், தூக்கு, பெயர் ஆகிய நான்கு குறிப்பிடப்படுகின்றன. பதிற்றுப்பத்தின் அனைத்துப்

பாடல்களும் பாடாண் திணையில் வருவன என்பதால் இவ்ஐந்து உறுப்புகளுக்கும் தம் உரையில் விளக்கம் தந்துள்ளார் உரைவேந்தர்.

பதிற்றுப்பத்தில் கூறப்படும் சேரர் வரலாறு

பதிற்றுப்பத்தில் ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் ஒன்று அமைந்துள்ளது. இப்பதிகங்கள் குறித்து ஆராய்ச்சி உரை வழங்கிய சதாசிவப் பண்டாரத்தார் 'பதிற்றுப்பத்தும் பதிகங்களும்' என்னும் தலைப்பில் சேரர் மரபு முறை குறித்து விளக்கியுள்ளார். அவர் கூறும் கருத்து வருமாறு:

"கடைச்சங்க காலத்தில் உதியன் மரபினர், இரும் பொறை மரபினர் ஆகிய இரு சேரர் குடியினர், சேர மண்டலத்தைத் தனித்தனிப் பகுதிகளிலிருந்து அரசாண்டனர் என்பது நன்கு புலனாகின்றது. அவ் இரு மரபினரும் தாயத்தினர் ஆவர். அவர்களுள் எண்மரே இப்பொழுது கிடைத்துள்ள எட்டுப் பத்துக்களின் பாட்டுடைத் தலைவர்கள் என்பது உணரற்பாலதாகும். அவ் எண்மருள் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழுகுட்டுவன், களங்காய்கண்ணி நார்முடிச்சேரல், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆகிய ஐவரும் உதியன் மரபினர் ஆவர். செல்வக்கடுங்கோ வாழியாதன். தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை ஆகிய மூவரும் இரும்பொறை மரபினர் ஆவர்.

இரண்டாம் பத்தின் தலைவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் உதியஞ்சேரலுடைய மகன் என்பது பதிகத்தால் அறியப்படுகிறது. ஆகவே இந்நாளில் கிடைக்காத முதல் பத்து நெடுஞ்சேரலாதன் தந்தையாகிய உதியஞ்சேரலின் மீது பாடப்பட்டதாயிருத்தல் வேண்டும்... பதிற்றுப்பத்துள் முதல் ஆறு பத்துக்களும் உதியஞ்சேரல், அவன் புதல்வர் இருவர், அவன் பேரன்மார் மூவர் ஆகிய அறுவர் மீது பாடப்பெற்றவை எனலாம்.

ஏழாம் பத்தின் தலைவன் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்பான். அந்துவஞ்சேரல் இரும்பொறையின் மகன் ஆவன். எட்டாம்பத்தின் தலைவன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்பவன். செல்வக் கடுங்கோவின் புதல்வன்

ஆவன். ஒன்பதாம் பத்தின் தலைவன் இளஞ்சேரல் இரும்பொறை என்போன், பெருஞ்சேரல் இரும்பொறையின் மகன் ஆவான். எனவே இறுதியில் உள்ள மூன்று பத்துக்களும் செல்வங்கடுங்கோ வாழியாதன், அவன் புதல்வன், அவன் பேரன் ஆகிய மூவர் மீதும் பாடப் பட்டவையாகும். இதுபோது கிடைக்காத இறுதிப்பத்து, யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் மீது பாடப்பெற்றிருத்தல் வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். ஆகவே அஃது இன்னும் ஆராய்தற்குரிய ஒன்று ஆகும். என்று குறிப்பிடுகின்றார் சதாசிவப் பண்டாரத்தார். (பதிற்றுப்பத்து, பக்.46-47)

பெயர்ப் பொருத்தம் தருதல்

பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்துக்கு உரிய மன்னன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். இம்மன்னன் இமயம் வரை தன் புகழைப் பரப்பி, ஆங்கே மறம் செருக்கிய ஆரிய மன்னரை வென்று மேம்பட்டான். ஆதலின்,

> 'ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
> தென்னங் குமரியொடு ஆயிடை
> மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே' (பா.1: 1820)

என்கிறார் புலவர்,

"இவ் இருவகை வெற்றிகளுள், இமயத்தில் விற்பொறித்து ஆரிய மன்னரை வென்று பெற்ற வெற்றி பழமைத் தாயினமையின், அதனைக் குறிப்பாய் உணர்த்தி, கடம்பர் பால் பெற்ற வெற்றியினை விரியக் கூறினார் என அறிக" என்று உரைவிளக்கம் செய்துள்ளார் உரைவேந்தர்.

இப்பத்தில் வரும் இரண்டாம் பாடலின் பெயர் **'மறம் வீங்கு பல்புகழ்'** என்று சுட்டப்பட்டுள்ளது. கல்வி செல்வம் முதலியவற்றால் எய்தும் பல்புகழ் மறமொன்றினாலே இச்சேரலாதன் பெறுதலின், 'மறம் வீங்கு பல்புகழ்' என்று இதற்குப் பெயராயிற்று என்பார் பழைய உரைகாரர். "அரசர்க்குச் சிறந்த மறப்புகழ் மற்றைப் புகழினும் மிக்க பல்புகழ்" என்றும் "இச்சிறப்பானே இதற்கு மறம் வீங்கு பல்புகழ் என்று பெயராயிற்று என்றும் கூறினார்" (பதிற்றுப் பத்து: மூலமும் உரையும், பக்.13-14) என உரைவரையும் உரைவேந்தர், இமயவரம்பனின் கல்வி, செல்வம், கொடை முதலியவற்றால் ஏற்படும் பல்புகழைக் குறிப்பிடுகின்றார்.

தொடர் நயம் உணர்த்தல்

பதிற்றுப்பத்தின் மூன்றாம் பத்து இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் தம்பியாகிய பல்யானைச் செல்கெழு குட்டுவனை பாலைக்கோதமனார் பாடிய பத்துப்பாடல்கள் கொண்டது. இப்புலவர் பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாராட்டுங்கால்,

‘ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்
ஈதல் ஏற்றல்என்று ஆறுபுரிந்து ஒழுகும்
அறம்புரி அந்தணர் வழிமொழிந் தொழுகி’

என மன்னனை வாழ்த்துகின்றார்.

மறை ஓதுதல், வேள்வி வேட்டல், அவை இரண்டையும் பிறரைச் செய்வித்தல், வறியார்க்கு ஒன்று ஈதல், தமக்கு ஒருவர் கொடுத்ததை ஏற்றல் என்ற தொழில் ஆறும் செய்து ஒழுகும் அந்தணர்களை வழிமொழிந்து ஒழுகிப் புகழ்நிறைந்தவன் பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்பதைப் புலவர் கோதமனார் இவ்வடிகளில் புலப்படுத்துகின்றனர். “உலகியற் பொருளையும், அதற்கு உரிய அறநெறிகளையும் உள்ளவாறு உணர்த்தும் உரவோர் ஆதலின், அந்தணர் வழிமொழிந்தொழுகுதல் அரசர்க்குக் கடனாதல் பற்றி, ‘அந்தணர் வழிமொழிந்து ஒழுக என்றார்’ (பதிற்றுப்பத்து: மூலமும் உரையும், ப.98) என இப்பகுதிக்கு விளக்கம் அளித்துள்ளார் உரைவேந்தர்.

மேற்கோள் ஆட்சி

பதிற்றுப்பத்தின் நான்காம் பத்து களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலை ஆசிரியர் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது. பாடிப் பெற்ற பரிசில்: நாற்பது நூறாயிரம் பொன் ஒருங்கு கொடுத்துத் தான் ஆள்வதில் பாகம் கொடுத்தான் அக்கோ. களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் இருபத் தையாண்டு வீற்றிருந்தான். ‘பரிசிலர் வெறுக்கை’ என்னும் தலைப்பில் அமைந்த எட்டாம் பாடல் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலின் கொடைப் பண்பினைச் சிறப்பித்துக் கூறுவது வருமாறு:

‘உலகத் தோரே பலர்மன் செல்வர்
எல்லா ருள்ளும்நின் நல்லிசை மிகுமே..

இனியவை பெறினே தனித்தனி நுகர்கேம்
தருகஎன விழையாத் தாவில்நெஞ் சத்துப்
பகுத்தூண் தொகுத்த ஆண்மைப்
பிறர்க்குஎன வாழ்திநீ ஆகன் மாறே."

இப் பாடலுக்கு எழுதிய உரை விளக்கத்தில் உரைவேந்தர் "உலகத்துச் செல்வர் பலரும் பெற்றுள்ள புகழினும் நின் புகழே மிக்கு நிற்கும்; இதற்கு ஏது நீ பிறர்க்கென வாழ்கின்றாய் ஆதலால் என்பது. எனவே, ஏனை எல்லாரும் பிறர்க்கென வாழ்தலை ஒழிந்து தமக்கென வாழ்தலே பொருளாகக் கொண்டனர் என்பதாம்... இம்மை, மறுமை, வீடு என்ற மூன்றுக்கும் உரிய நலஞ்செய்து கோடற்கு உரிய இடமாதலின், உலகத்தை மேற்கொண்டு, இம்மையில் இன்ப வாழ்வும் புகழும், மறுமையில் துறக்க இன்பமும் வீடுபேறும் பெறுதற்குத் துணையாவது செல்வம் ஆதலின், அதனை உடையோரையே விதந்து 'செல்வர் பலர்மன்' என்றார். 'அறன்ஈனும் இன்பமும்ஈனும் திறனறிந்து, தீதின்றி வந்த பொருள்' (குறள் 754) என்றும், 'அறனும் பொருளும் இன்பமும் மூன்றும், ஆற்றும் பெரும நின் செல்வம்' (புறம்.28) என்றும் சான்றோர் கூறுதல் காண்க. எல்லாரும் பெற்ற புகழ், அவர் பொருளனவாய் நின்று மாய்ந்தன என்பார், 'பலர்மன்' என்றார். மன் ஒழியிசை. கெடுவது இன்மையின், 'நல்லிசை' என்றார். 'மிகுமே' என்றதனால், ஏனையோர் புகழ் எல்லாம் கெட்டொழிய, இவனது நல்லிசை ஒன்றே நிலைபெற்று நிற்கும் என்றார் ஆயிற்று. 'இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும், இனிதெனத் தமியர் உண்டலும் இலரே' என்றும், 'அன்ன மாட்சி அனைய ராசித், தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே' என்றும், 'உண்டால் அம்ம இவ் வுலகம்' என்றும் கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி பாடிய பாட்டு (புறம், 182) ஈண்டு கருதத்தக்கது" (பதிற்றுப்பத்து மூலமும் உரையும், பக்.165-166).

இங்கே புறநானூற்றுப் பாடல், திருக்குறள் ஆகியவற்றில் இருந்து பொருத்தமான வரிகளை மேற்கோள்களாகக் காட்டி, பாடற்பொருளை உரைவேந்தர் புலப்படுத்தியுள்ள திறம் மிகச்சிறப்பு.

நோக்கு நெறி நின்று நுண்பொருள் வரைதல்

பதிற்றுப்பத்தின் ஆறாம் பத்து ஆடுகோட் பாட்டுச் சேரலாதனைக் காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடியது. பாடிப் பெற்ற பரிசில், 'கலன் அணிக' என்று அவர்க்கு ஒன்பது காப் பொன்னும் நூறாயிரம் காணமும் கொடுத்துத் தன் பக்கத்துக் கொண்டான் அக்கோ. ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் முப்பத்தெட்டியாண்டு வீற்றிருந்தான். 'நில்லாத் தானை' என்னும் பெயரினைக் கொண்ட நான்காம் பாடலில் காக்கைபாடினியார் நச்செள்ளையார்,

'வள்ளியை என்றலின் காணகுவந் திசினே
உள்ளியது முடித்தி வாழ்கநின் கண்ணி'

என்று சேரலாதனது கொடைச் சிறப்பும் தன் குறையும் கூறி வாழ்த்துகின்றார். 'வள்ளன்மை உடையை என்று நீ சான்றோரால் பாராட்டிக் கூறப்படுவதால், யான் நின்னைக் காண்டற்கு வந்துளேன்; யான் கருதியதை முடித்துத் தருவாயாக, நின் முடிக்கண்ணி வாழ்வதாக!' என இதன் பொழிப்புரையைத் தரும் உரைவேந்தர், 'மாத்திரை முதலா அடிநிலை காறும், நோக்குதற் காரணம் நோக்குஎனப் படுமே' எனத் தொல்காப்பியர் வகுத்துத் தந்த நோக்கு நெறி நின்று இவ் வரிகளில் காணும் நுண்பொருள் வருமாறு:

"சேர நாட்டில் இருந்து வந்த பரிசிலர் அனைவரும் பெரும்வளம் பெற்று வரக் கண்டதோடு அனைவரும் சேரலானது வள்ளன்மையைப் பாராட்டிக் கூறக்கேட்டமை தோன்ற, **'வள்ளியை என்றலின்'** என்றும், அத்தகைய வள்ளியோரைக் காண்டலே தமக்குப் பேரின்பம் தருவது என்பார், **'காண்கு வந்திசின்'** என்றும், காண வருவோர் தகுதி நோக்கி அவர் குறிப்பறிந்து தகுவன வழங்குவது வள்ளியோரது செயல் ஆதலால், யான் கருதியது தேர்ந்து அதனை முடித்துத் தருக என்பார், **'உள்ளியது முடித்தி'** என்றும் கூறினார். பழையவுரைகாரரும் 'வள்ளியன் என்பதற்கு **வள்ளியை** என்றது இடவழுவமைதி என்றும், **உள்ளியது முடித்தி** என்றது, 'யான் நினைந்து வந்த காரியத்தை முடி என்றவாறு' என்றும் 'முடித்தி என்றது முன்னிலை ஏவல் வினை' என்றும் கூறுவர். பதிகம் கூறுவது போல, சேரமான் பக்கத்துத் தம்மைக் கொள்ளல் வேண்டும் என்பது ஈண்டு முன்னிய கருத்து என்பதும் ஒன்று" (பதிற்றுப்பத்து மூலமும் உரையும், பக்.260-261)

நயமும் நுட்பமும் உணர்த்தல்

பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்து செல்வக் கடுங்கோ வாழியாதனை ஆசிரியர் கபிலர் பாடியது. பாடிப்பெற்ற பரிசில் சிறுபுறமென நூறாயிரம் காணம் கொடுத்து நன்றா என்னும் குன்றேறி நின்று தன் கண்ணில் கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான் அக்கோ. செல்வக் கடுங்கோ வாழியாதன் இருபத்தையாண்டு வீற்றிருந்தான் 'பறைக்குரல் அருவி' என்னும் பெயரில் அமைந்த பத்தாம் பாடலின் தொடக்க வரிகள் இவை:

'களிறு கடைஇய தாள்
மா உடற்றிய வடிம்பு
சமம் ததைந்த வேல்
கல் அலைத்த தோள்
வில் அலைத்த நல்வலத்து...
வலம்படு வான்கழல் வயவர் பெரும!"

'களிறுகளை நெறியறிந்து செலுத்திப் பயின்ற தாளினையும், குதிரைகளைப் பொருதற்குச் செலுத்திப் பயின்ற தாள் விளிம்பினையும், பகைவர் செய்யும் போரைக் கெடுத்த வேற்படையினையும், கல்லொடு பொருது பயின்ற தோளினையும், வில்லேந்திப் பொருது பகைவரை வருந்திய நல்ல வெற்றியினையும் உடைய பெரிய கழல் அணிந்த வீரர்க்குத் தலைவனே!' என்பது இவ்வரிகளின் தெளிபொருள். இனி, போரியல் நோக்கில் இவ்வரிகளில் ஆழ்ந்திருக்கும் நயத்தினையும் நுட்பத்தினையும் உரைவேந்தர் வழியாக ஈண்டுக் காணலாம்.

"1. களிற்றின் மேலே இருந்து செலுத்தும் வீரர் அதன் பிடரிக்கண் இருக்கும் கயிற்றிடையே தம் தாளைச் செருகி முன் தாளால் தம் குறிப்பினை உணர்த்திச் செலுத்துப ஆதலின், அச் சிறப்புக் குறித்து, அவர் தாளை **'களிறு கடைஇய தாள்'** என்றார்.

2. குதிரை மேல் இருந்து பொரும் குதிரை வீரர், தம் தாளின் அக விளிம்பால், அவற்றிற்குத் தம் குறிப்பை உணர்த்திச் செலுத்துப ஆகலின், அச்சிறப்பு நோக்கி, **'மா உடற்றிய வடிம்பு'** என்றார். வடிம்பு, தாளின் விளிம்பு, 'வடிம்பலம்ப நின்ற பாண்டியன்' என்னும் வழக்குண்மை காண்க.

3. வேலும் வாளும் என்றவற்றுள், வேல் சிறந்தமையின், அதனை எடுத்து ஓதினார் ஆகலின், வாள் வன்மையும் கூறியவாறாகக் கொள்க.

4. இனித் தோள்வன்மைக்கு கற்றூணோடு பொருது மற்பயிற்சி பெற்றுக் காழ்ப்புற்றிருப்பது கூறுவார். 'கல் அலைத்த தோள்' என்றார்.

இவ்வாறு படைவீரர்க்கு வேண்டும் சிறப்பியல்புகளுள் களிறு ஊர்தல், மா ஊர்தல், வேல் வாட்போர், மற்பயிற்சி என்பவற்றைக் கூறி, வில்வன்மை இன்றியமையாமை பற்றி 'வில் அலைத்த நல்வலத்து வயவர்' என்றார்.

இனி, சமம் ததைந்த வேல் என்றதற்கு 'மாற்றார் செய்யும் சமங்கள் சிதைதற்குக் காரணமாகிய வேல் என்றவாறு' என்றும், 'வேல் என்றது வேல் வென்றியினை' என்றும், 'கல் அலைத்த தோள் என்றது வலியுடைமையால் கல்லை அலைத்த தோள் என்றவாறு' என்றும் பழைய உரைசாரர் கூறுவர்.

இதனால், தாளினையும், வரம்பினையும், வேற்படையினையும், வில்லினையும் உடைய வயவர்' எனக் கூட்டி முடிக்க."

பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் குறிப்பிடுவது போல, "திரு.பிள்ளையவர்கள் பனைய வுரையாசிரியர் உரையுடன் தம் கருத்திற்பட்ட புதியவுரையினையும் ஒப்பு நோக்கத் தருவது, நூல் நயங்காணும் இவர்தம் நுட்பத்தினை இனிது விளக்குவதாம்" (உரைநலம், பதிற்றுப்பத்து: மூலமும் உரையும், ப.24).

6.மணிமேகலை உரைத்திறன்

"பண்டைய நூல்களுக்குச் சிறப்பான உரையெழுதிய ஆசிரியர்கள் புதுநூல்கள் செய்யக் கூடியஆற்றலுள்ளவர்களாகவும் இருந்திருப்பர். ஆனால் அவர்கள் புதுவதாக நூல்கள் செய்யாது தொன்மை வாய்ந்த நூல்களை மக்கள் மத்தியிலே நிலைபெறச் செய்யும் நோக்குடன் விரிவான உரைகளை எழுதினர். சிறப்பான நூல்கள் நின்று நிலைக்கும் வரை திறமான உரையும் நின்று நிலைக்குமென்று கருதினார்கள் போலும்."

*- எஸ்.சிவலிங்க ராஜா**

ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய நூல்களுக்கு அரிய விளக்கங்களுடன் கூடிய ஆராய்ச்சி யுரையுடன் உரை எழுதினார் உரைவேந்தர். அவரது உரைகள் அறிஞர்களால் பெரிதும் போற்றப்பட்டன. அடுத்து மணிமேகலைக்கு உரை எழுதவேண்டும் என்னும் கோரிக்கை அறிஞர்களால் முன்வைக்கப்பட்டது. பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் மணிமேகலையின் 26 காதைகளுக்கு உரையெழுதி வைத்திருந்தார். அந்நூலின் பிற்பகுதி புத்த சமயத் தத்துவங்களும், வேறு பல சமயங்களின் கோட்பாடுகளும், அளவை நூல் நுட்பங் களும் அடங்கியதாக இருந்தமையின், அதற்குப் பொருள் கண்டு தெளிவது யார்க்கும் எளிதாக இல்லை. எனவே இதனை முடிக்க யாரும் முன்வரவில்லை. செயற்கரிய செய்யும் சீரியராகிய உரைவேந்தர். அப்பகுதிக்கு உரைகண்டு முடிக்க உறுதி கொண்டார்.

உரைவேந்தரது தலைமாணாக்கர் கோமான் ம.வி.இராகவன் குறிப்பிடுவது போல், "உரையாசிரியப் பண்பு பிள்ளையவர்கட்குக் கருவிலே வாய்ந்த திரு. அதற்கான இயல்பூக்கம் உரம்பெற வளர்ந்து, அவர் புலவரானதும்

* ஈழத்துத் தமிழ் உரை மரபு, ப.6.

திறம்பெறச் செயல்படத் தொடங்கியது. அதன் பயனாக, அவர் பழந்தமிழ் இலக்கிய இலக்கண உரைகளிடம் அடங்கா ஆர்வமும் அவற்றை ஆக்கிய ஆசிரியர்களிடம் ஆழ்ந்த பற்றும், அளவற்ற மதிப்பும் உடையவரானார். இலக்கிய நூலாயினும், இலக்கண நூலாயினும் அதன் பண்டை உரைகளை ஆழ்ந்து பயின்று, தோய்ந்து நுகர்ந்து, ஆய்ந்து தெளிந்தார். அவ்வுரையாசிரியர்கள் நூல்களை அணுகும் முறை, உரை காணும் நெறி, உரை வகுக்கும் திறம் ஆகியவற்றை அறிந்தார்... சமயச் சார்பான சரித்திரப் பேருரைகளையும் பலமுறை படித்துத் தெளிவுற விளக்கம் கண்டார்... வெவ்வேறு சமயச் செய்திகளை அவ்வச் சமய அறிஞர்களை அடுத்துக் கேட்டு அறிந்து கொண்டார்... புத்த சமய நூல்களையும் பிற சமய நூல்களையும் முயன்று பெற்று முறையாக ஆராய்ந்தார். அச்சமயங்கள் பற்றிய வடமொழி நூல்களை அம்மொழி வல்லுநரின் துணைகொண்டு படித்தறிந்தார். அளவை நூற் செய்திகளை ஐயமற ஆய்ந்து தெளிந்தார். பின்னர் அப்பகுதிக்குத் தெளிவான விளக்கவுரை எழுதி முடித்து அவ்வுரை நூலை வெளியிடச் செய்தார். அவ்வுரையின் உதவியால் இன்று யாவரும் மணிமேகலை நூல் முழுவதையும் படித்துப் பயன்பெறுவது எளிதாகியுள்ளது" (ஆசிரியர் பிரான் ஔவை, உரைவேந்தருக்கு ஒரு நூற்றாண்டு, பக்.30-32).

மணிமேகலை நூலின் இறுதி நான்கு காதைகளான 27. சமயக் கணக்கர்தந் திறம் கேட்ட காதை 28. கச்சிமாநகர் புக்க காதை, 29. தவத்திறம் பூண்டு தருமங் கேட்ட காதை, 30. பவத்திறமறுகெனப் பாவை நோற்ற காதை ஆகியவற்றிற்கு உரைவேந்தர், உரை செய்துள்ளார்.

நான்கு காதைகளின் சுருக்கம்

சமயக்கணக்கர்தம் திறம் கேட்ட காதை

மணிமேகலை வஞ்சிநகர்க்கண் இருந்து பல்வகைச் சமய வாதிகளையும் கண்டு, அவரவர் சமயப் பொருட்களைக் கேட்க விரும்பி அவர்பாற் சென்று, அளவைவாதி முதல் பூதவாதி ஈறாகவுள்ள அவர் அனைவரையும் வினவ, அவர்கள் தம் சமயக் கருத்துக்களை உரைத்தனர். இக்காதையின் கண் 5-85 அடிகளில் அளவை வாதமும், 89-95 அடிகளில் சைவ வாதமும், 96-104 அடிகளில் பிரம வைணவ வேத வாதங்களும்,

110-165 அடிகளில் ஆசீவக வாதமும், 171-201 அடிகளில் நிகண்ட வாதமும், 202-239 அடிகளில் சாங்கியவாதமும், 242-262 அடிகளில் வைசேடிக வாதமும், 264-268 அடிகளில் பூதவாதமும் கூறப்படுகின்றன.

கச்சிமாநகர் புக்க காதை

மணிமேகலை சமயக் கணக்கர் கூறிய திறங்களைக் கேட்டபின் வஞ்சி நகரை நோக்கினாள்; அவட்குத் தன் தாய் மாதவி, சுதமதி, அறவண அடிகள் ஆகிய இவர்கள் நினைவு உண்டாயிற்று. உடனே வஞ்சி நகர்க்குள் சென்று, அதன் புறஞ்சேரியும், அகழும், அரணும், பல்வகைத் தெருக்களும், மன்றமும், பொதியிலும், சந்தியும், சதுக்கமும், செய்குன்றமும், விரைமரக் காவும் கண்டு மகிழ்ந்தாள்; பின்னர் பௌத்த ஞானிகள் உறையும் தவப்பள்ளியையடைந்து அங்கே தவம் மேற்கொண்டிருந்த மாசாத்துவானைக் கண்டு அவன் திருவடியை வணங்கித் தன் வரலாற்றினைத் தெரிவித்தாள்.

அவனும், தான் கோவலனும், கண்ணகியும் இறந்தமை கேட்டுப் புத்த தருமம் மேற்கொண்டதாகவும், கோவலனுக்கு ஒன்பது தலைமுறைக்கு முன்பு இருந்த கோவலன் என்பான் இந்நகரின்கண் கட்டுவித்த புத்தசயித்தியத்தைக் கண்டு வழிபட வந்ததாகவும் கூறினான். இனி, 'அறவணவடிகள் நினக்கு அறம் கூறற்கு ஏற்ற இடம் கச்சிமாநகரம் என்றெண்ணி, அங்கே சுதமதியும், மாதவியும் உடன்வரச் சென்றுள்ள தாகவும், அங்கே சென்று வறுமையால் வருந்தும் மக்களைக் காப்பது பேரறம்' என்றும் கூறுகிறான். இதைக்கேட்ட மணிமேகலை, வஞ்சி நகரின் மேற்றிசையில் விண்படர்ந்து, வடகிழக்காகக் கச்சிமாநகர் அடைந்து, அங்குள்ள மன்னன் அமைத்த அறச்சாலையில் தங்கினாள்; காணார், கேளார், கால்முடமானார், பேணா மாக்கள், பேசார், பிணித்தோர், படிவ நோன்பியர், பசிநோயுற்றோர் முதலிய பலரையும் வருவித்துத் தன் அமுத சுரபியின் இனிய அமுது உண்பித்தாள். அக்காலை, அறவணவடிகளும், மாதவியும், சுதமதியும், மணிமேகலையது அறச்சாலையை அடைந்தனர். அவர்களைக் கண்டதும், மணிமேகலை அவர்களுக்குரிய வழிபாடு இயற்றி, அறுசுவை நால்வகை உணவு தந்து மகிழ்வித்துத் தன் ஆண் வேடத்தை நீக்கிப் பெண் உருக்கொண்டதை இக்காதை எடுத்துரைக்கின்றது.

தவத்திறம் பூண்டு தருமங் கேட்ட காதை

காஞ்சிமாநகர்க்கண் அறவண அடிகளையும், மாதவி, சுதமதி ஆகியோரையும் கண்டு மகிழ்ந்த மணிமேகலை. அறவணஅடிகளை வணங்கி, 'அறம் உரைத்தருள்க' என வேண்டினாள். அறவண அடிகள் அவளை வாழ்த்தி, காவிரிப்பூம்பட்டினம் கடல்கோட் படுதற்குக் காரணம் நெடுமுடிக் கிள்ளி மகனை இழந்த துயரத்தால் இந்திர விழாவைக் கைவிட்டானாக, இந்திரன் சினந்து இட்ட சாபம் என்றும், மணிமேகலா தெய்வம் அவன் சாபத்தோ டொப்ப இட்ட சாபம் என்றும் கூறினான். அவள் இச் செய்திகளைத் தான் முன்பே தீவ திலகைபாற் கேட்டறிந்த தாகத் தெரிவித்துத் தான் சமயக் கணக்கர் தம் திறம் கேட்டதும், அச்சமயங்களைச் சிந்தையிற் கொள்ளாது ஒழிந்ததும், வேற்றுரு நீங்கி இயற்கையுரு எய்தியதும் எடுத்தோதி, மெய்ப்பொருள் அருளுமாறு மீண்டும் வேண்டி வணங்கினாள். ஆதிசினேந்திரன் அருளிய அளவைகள், பிரத்தியக்கம் அனுமானம் என்ற இரண்டேயாம்; பிரத்தியக்கமாவது சுட்டுணர்வு; அனுமானம் காரணம் காரியம், சாமானியம் என மூவகையாகக் கூறப்படுமாயினும் காரியானுமானமே பிழையில்லாதது; இது பக்கம், ஏது, திட்டாந்தம், உபநயம், நிகமனம் என ஐந்து உறுப்புக்களை யுடையது; எனினும், இறுதியிற் கூறிய உபநயம், நிகமனம் இரண்டும் திட்டாந்தத்தில் அடங்கும்; எஞ்சி நின்ற பக்கம், ஏது, திட்டாந்தம் என்ற மூன்றனுள் திட்டாந்தம் சாதன்மியம், வைதன்மியம் என இருவகைப்படும்; குற்றமில்லாத பக்கம் முதலியன நன்பக்கம், நல்லேது, நல்ல திட்டாந்தம் என வரும்; குற்றமுடையவை பக்கப்போலி, ஏதுப்போலி, திட்டாந்தப் போலி எனப்படும்; பக்கப் போலி பிரத்தியக்க விருத்த முதலாக ஒன்பது வகையும், வைதன்மிய திட்டாந்தம் போலி ஏதுப்போலி அசித்தம் அநைகாந்திகம். விருத்தம் என மூவகையும், சாதன்மிய திட்டாந்தப்போலி சாதன தன்ம விகல முதலாக ஐவகையும், சாத்தியா வியாவருத்தி முதலாக ஐவகையுமாம். இவற்றுள் தீயவற்றிற் காட்டப் படுவனவற்றை ஆராய்ந்து மெய்ப்பொருளை ஐயமின்றி அறிந்து கொள்க' என அறவண அடிகள் உரைத்ததை எடுத்துக் கூறுவது இக்காதை.

பவத்திறமறுகெனப் பாவை நோற்ற காதை

தருமம் கேட்கப் புக்க மணிமேகலைக்கு மெய்ப் பொருளைத் தேர்ந்துணர்தற்கு வேண்டும் அளவைகளையும், அவற்றுள் தீயவற்றை நீக்கித் தூயவற்றால் பொருளின் மெய்ம்மைத் தன்மையை ஐயமின்றி அறியும் திறத்தையும் அறிவுறுத்திய அறவண அடிகள், மேலும் கூறற்கு உரிய அறங்களைக் கூற முற்பட்டார். மணிமேகலையும் புத்த தன்ம சங்கமென்னும் மும்மணிகளையும் மும்மையின் வணங்கிப் புத்த தருமத்தைச் சரண் புகுந்தாள். அமரர் வேண்டுகோளுக்கு இரங்கித் துடித லோகத்தினின்றும் தோன்றி, போதி மூலத்திருந்த வாமன் உரைத்த திருவறத்தை அவற்குப் பிற்போந்த எண்ணிலான புத்தர்கள் வழிவழியாக உரைத்துப் போந்தனர்; அதனை உனக்கு உரைப்பேன்' என அறவண அடிகள் உரைக்கத் தொடங்கி, பன்னிரு நிதானங்களும், அவற்றின் மண்டில வகையும், கண்ட வகையும், சந்தி வகையும், தோற்ற வகையும், காலவகையும், பிறவும் தொகுத்தும் விரித்தும் கூறினார். பின்பு நால்வகை வாய்மையும், ஐவகைக் கந்தமும், அறுவகை வழக்கும், நால்வகை நயங்களும், வினாவிடைகளும் விரித்து விளங்கக் கூறினார். முடிவில் கட்டும் வீடும் ஒவ்வொன்றன் காரணமும், அவரவர் முயற்சியால் விளையுமே அன்றிப் பிறரால் தரப்படுமாறில்லை என்பதை வற்புறுத்தி, இறுதியாக, மேலே கூறிய பொருள் எல்லாவற்றிற்கும் காமம் வெகுளி மயக்கம் என்ற மூன்றுமே காரணமென்றும், காமத்தை அநித்தம் துக்கம் அநான்மா அகசியெனத் தனித்துப் பார்த்துப் பற்றறுக்கும் அசுப பாவனையால் கெடுத்தல் வேண்டுமென்றும், வெகுளியை மைத்திரி பாவனை, கருணா பாவனை, முதித பாவனைகளால் கெடுத்தல் வேண்டும் என்றும், மயக்கத்தை ஞானநூற் பொருளைக் கேட்டல் சிந்தித்தல் பாவனை தரிசனை என வரும் உபேக்ஷா பாவனையால் கெடுத்தல் வேண்டுமென்றும் அறிவுறுத்தினார். மணிமேகலையும் அவர் காட்டிய ஞான விளக்கின் துணை கொண்டு தவத்திறம் பூண்டு தருமம் கேட்டுப் பவத்திறம் அறுப்பேனென நோற்கலானாள் என்பதை எடுத்துக் காட்டுகிறது இக்காதை.

கருத்தளவை

மணிமேகலையில் கூறப்பட்ட பல்வேறு வகையான தத்துவங்களையும் சான்று காட்டி விளக்குகின்றார் உரைவேந்தர்.

அளவைவாதத்தில் கருத்தளவை என்பது மூன்று வகைப்படும். அவையாவன: சாமானிய அநுமானம், காரிய அநுமானம், காரண அநுமானம் ஆகும்.

சாமானிய அநுமானம் என்பதற்கு வாற்சாயனர் கூறும் விளக்கத்தை எடுத்துக் காட்டுகிறார் உரைவேந்தர்.

"இனிச் சாமானியதா திருட்டத்துக்கு, வாற்சாயனர், ஒலிக் கேள்வியோடு கொம்புள்ள விலங்கொன்றினைக் கண்டோன், அதற்கு வால் உண்டென உணர்தலும் சாமானியதா திருட்டம் என்று கூறினர். இவருக்குப் பிற்போந்த உத்தியோதகரர், நாரைகள் குழீஇ இருப்பதைக் கண்டோன், அங்கே நீருண்டெனத் துணிதல் சாமானியத் திருட்டம் என்றார்." (பக்.452-453)

"பள்ளத்தை நோக்கி ஓடுதல் நீர்க்கு இயல்பாதலின், அத்தலை என்றது மேலிடமாகிய அவ்இடம் ஆயிற்று. மழையினது எச்சம் வெள்ளம் ஆதலின், வெள்ள ஏது கொண்டு சாதிக்கும் கருத்தளவை, எச்சக் கருத்தளவை எனப்பட்டமை அறிக. இந்த எடுத்துக்காட்டையே வாற் சாயனரும் காட்டியுள்ளார். இதனைக் காரியானுமானம் என்றும் கூறுப...

"மழை பெயற்கு முகில் காரணமாதலின், முதலெனப் பட்டது. காரணத்தை முதல் என்றல் தமிழ் வழக்கு; "ஆயெட்டென்ப தொழில் முதனிலையே" (தொல்.சொல். வேற்.மயல்.29) என்றும், "அவ்விரு முதலில் தோன்றும் அதுவே" (சொல்.வேற்.10) என்றும் வருதல் காண்க. கமஞ்சூல் மாமழையைக் "கருக்கொள் முகில்" என்றார். இவ் எடுத்துக்காட்டே வாற்சாயனராலும் காட்டப் பட்டுள்ளது. இதனைக் காரண அநுமானம் என்றலும் ஒன்று." (ப.453).

இங்ஙனம் அரிய கருத்துக்களை மிக எளிமையாக, தக்க சான்றுகளும், பிற நூலினின்று மேற்கோள்களும் காட்டி விளக்கிச் செல்கின்றார் உரைவேந்தர்.

உவம அளவை

"உவம அளவையாவது ஒன்றோடு ஒன்றனை ஒப்புக் கூறி உணர்த்தும் அளவையாகும். கவயமா என்பது ஒரு விலங்கு என அறியாதானுக்கு அக் கவயமா பசுவைப் போலிருக்கும் எனச் சொல்லி உணர்த்துதலாம் என்றவாறு (27:41-42).

தானே உணர்ந்து கோடற்கு உவமை வேண்டாமையின், ஈண்டுக் கருதுதல் பிறவினைப் பொருட்டு. இதனால் தமிழ் நூலார் பொருளிலக்கணத்தின் ஒரு பகுதியாகக் கொள்ளும் உவமத்தை அணிநூலார் உவமஅணி என்று கொண்டாங்கு, அளவை நூலார் உவம அளவை என்று கொண்டனர் என அறிக" (பக்.454-455) என்பது உவம அளவைக்கு உரைவேந்தர் தரும் விளக்கம் ஆகும்.

ஆகம அளவை

'ஆகம அளவை ஸ்ரீ உரை அளவையாவது. அறிவன் நூலால் விளங்கிய அறிவினையுடைய பெரியோர் கூறிய நூல் கருவியாக, போக நுகர்ச்சிக்கென இந்நிலவுலகத்தின் மேலுங் கீழும் உலகங்கள் உண்டு என மேற்கொள்வதாம்' என்று ஆகம அளவைக்குப் பொருள் விளக்கம் தரும் உரைவேந்தர், தம் உரையில் மேலும் விரித்துக் கூறுகிறார்:

"யாவரும் அறிவுடையரே எனினும், அதனால் விளக்கமுற்றோரே அறிவர் எனப்படுப ஆதலின், அறிவன் என்பதற்கு அறிவினையுடைய பெரியோன் என்று பொருள் கூறப்பட்டது. அறஞ் செய்தான் துறக்கம்புகும் என்றும், அல்லது செய்தான் நிரயம் புகும் என்றும் அறிவர் வழங்குதலின், துறக்க நிரயங்களின் உண்மை கொள்ளப் பட்டமை காண்க" (பக்.455-456) என்கிறார்.

அருத்தாபத்தி அளவை

"அருத்தா பத்தி அளவை என்பது, ஆயர் குடியிருக்கும் பாடி கங்கையில் இருக்கிறது என்று சொன்னால், கங்கையில் என்றது கங்கையாற்றின் கரையில் என்னும் பொருளது எனக் கோடல்" என்று சொற்பொருள் விளக்கம் தந்தபின், அதனை விளக்கி உரைக்கின்றார் உரைவேந்தர்:

"ஆயர் குடியிருக்கும் இருப்பு ஆயர்பாடி என வழங்கும். ஆயர்பாடி கங்கையில் இருக்கும் என்ற வழி, கங்கையின்

இடையே குடியிருத்தல் கூடாமையின், அதன் கரைக்கண் இருக்கும் என எண்ணி அறிந்து கோடல் வேண்டியிருப்பது பற்றி 'எண்ணல்' என்றார்.

அருத்தா பத்தியாவது ஒரு பொருளைக் கொண்டு, அதனோடு இயைபுடைய பிறிதொன்றனை உணர்தல்'. அருத்தம் - பொருள்; ஆபத்தி - பிறிதொரு பொருள். "அடுத்துலகோதும் பொருள் அருத்தாபத்தியாவதுதான். எடுத்த மொழியினஞ் செப்புவதாகும். இவ்வூரிலுளார், படைத்தவர் என்னிற், படையாதவரும் உண்டென்றும், இவன் கொடுப்பவன் என்னிற் கொடாதாரும் உண்டு என்றும் கொள்வதுவே" (சிவ சித்தி, அளவை உரை) என்று மறைஞான தேசிகர் காட்டும் மேற்கோளாலும் இதன் இயல்பு உணரப்படும்.

கங்கேசர் முதலிய ஆசிரியன்மார், இவ்அருத்தாபத்தி வியதிரேக வியாத்தியால் உணரப்படும் என்று கூறி, பின் வருமாறு விளக்குப:

"பகல் உண்ணான் சாத்தன் பருத்திருப்பான்' என்றவழி, உண்ணாதான் பருத்திருப்பானல்லன் என்பதால், உண்பது உண்டெனத் துணிந்து, "பகலுண்ணான்" எனவே "இரவில் உண்பான்" எனத் துணிந்து "சாத்தன் இரவில் உண்பன்" எனக் கோடல் (பக்.456-457) என்று அருத்தாபத்தி அளவையைப் பிற அளவை நூல் சான்று காட்டி விளக்கிச் செல்கிறார் உரைவேந்தர்.

இயல்பளவை

இயல்பு அளவையாவது, யானையின் பிடரிமேல் இருப்போன் ஒருவன், கோல் ஒன்று கொடுப்பதாயின் தன் கையில் உள்ள தோட்டியின் வேறாக ஒன்றும் கொடாது, அத் தோட்டியினையே கொடுப்பதாம் என்றவாறு

யானை மேல் இருப்பவன் கையில் தோட்டியல்லது பிறிதொரு கோல் இன்மையின், கோல் கேட்ட வழி அத் தோட்டியினைக் கொடுத்தல் அவற்கு இயல்பு ஆதலால், இது இயல்பளவை எனப்பட்டது என்பது உரைவேந்தர் தரும் விளக்கவுரை (ப.457).

ஐதிக அளவை

"ஐதிகம் என்னும் அளவையாவது, உலகோராற் கேள்வி வழியாகக் கேட்டு வழிவழியாகச் சொல்லப்பட்டு வரும்

சொற்பொருளாகும்; 'இம்மரத்து எய்தியது ஓர் பேய் உண்டு' என்றவிடத்து, ஒருவரும் கண்ணிற் காணாராயினும், உலகவர் பலரும் உண்டு என்பதொன்றே பற்றி உடன்பட்டு ஒழிவது ஐதிக அளவை ஆயிற்று" என்று விளக்கம் கூறி,

'உலகத்தார் உண்டென்பது இல்என்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்' (குறள்.850)

என்னும் வள்ளுவர் வாய்மொழியையும் சான்று காட்டியுள்ளார் உரைவேந்தர் (ப.458)

மீட்சியளவை

'மீட்சி அளவையாவது', 'இராமன் வென்றான்' என்றவழி, இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த போரில் இராமன் வென்றான், அற மாண்பில்லாத இராவணன் தோற்றான் என்பதை உணர்ந்து கோடலாம்' என உரை விளக்கம் தருவதோடு, இவ் எடுத்துக்காட்டை நன்னூல், சிவஞான போதம், சிவஞான சித்தி முதலிய நூலுரைகளிலும் காணப்படுவதைச் சுட்டிச் செல்கின்றார் உரைவேந்தர் (ப.459).

மணிமேகலை கூறும் அளவைவாதிகளின் இயல்புகளைக் கூறுமிடத்து, பல்வேறு வடமொழி அறிஞர்களின் கருத்துக்களையும் தம் உரையில் எடுத்துக்காட்டுகிறார் உரைவேந்தர்:

"தார்க்கிகரட்சை யென்னும் நூலாசிரியரான வரதராசர் என்பார், உலகாயதர் காட்சியாகிய ஓரளவையும், புத்தரும் வைசேடிகரும் காட்சியும் கருதலுமாகிய இரண்டளவையும், சாங்கியர் அவ்விரண்டோடு உரையினைக் கூட்டி மூன்றளவையும், நையாயிகருள் ஒரு சாரார் அம்மூன்றோடு உவமையைக் கூட்டி நான்களவையும், மீமாஞ்சகருள் ஒரு சாரார் அந்நான்குடன் அபாவத்தைக் கூட்டி ஐந்தளவையும் கொண்டனர் என்பர். சைவருட் பெரும்பாலோர் காண்டல், கருதல், உரையென்ற மூன்றளவையும், பௌட்கட முதலிய ஆகமவழி நின்றோர் அம்மூன்றோடு அருத்தாபத்தியைக் கூட்டி நான்களவையும் கொள்ப. பட்டாசாரியன் நெறி நின்றோர் காட்சி, கருதல், உரை, உவமை, அருத்தாபத்தி, அபாவம் என்ற ஆறுமே கொண்டனரென்றும், பிரபாகர நெறி நின்றோர் அபாவம் ஒழிந்த ஏனை ஐந்துமே

கொண்டனர் என்றும், நையாயிகர் அருத்தாபத்தி ஒழிந்த ஏனை நான்குமே கொண்டனர் என்றும், சாங்கியர் உவமை ஒழிந்த மூன்றும் கொண்டனர் என்றும், வைசேடிகரும், புத்தரும், காட்சியும் கருத்துமே கொள்பவென்றும், உலகாய்தர் காட்சியொன்றே கொள்வர் என்றும் சாத்திர தீபிகையின் ஆங்கில முன்னுரை கூறுகிறது" (ப.464).

இவ்வாறு உரைவேந்தர் தாம் எடுத்துக் கொண்ட கருத்தை நிறுவுவதற்குப் பல வடநாட்டு நூற்கருத்துக்களை எடுத்துக் கூறுவது அவரது புலமை நயத்தையும், உழைப்பின் உயர்வையும் எடுத்துக்காட்டுகிறது.

சைவவாதி

அளவை வாதியின் கருத்துக்களை அறிந்து கொண்ட மணிமேகலை 'எங்கட்கு இறைவன் ஆவான் ஈசன் என்று கொண்டு ஒழுகிய சைவவாதி எதிர்ப்பட்டானாக, அவனைக் கண்டு 'நீ வழிபடும் நின் தெய்வம் எவ்வியல்பிற்று' எனக் கேட்க, சைவவாதி,

"ஞாயிறு, திங்கள், இயமானன், மண், நீர், தீ, காற்று, வான் என்ற எட்டினையும் தனக்கு உடம்பாய்த் தான் அவற்றிற்கு உயிராய் அமைந்து நிற்பவனும், பல்வகைக் கலைகளையும் தனக்கு உருவாக உடையவனும், யாவற்றையும் படைத்து அப்படைத்தவை நின்று நிலவச் செய்யும் தன்மை யுடையவனும், படைப்புற்று நிற்பவற்றை ஒடுக்குமாற்றால் அவற்றின் இளைப்பைப் போக்கியருளும் சிறப்புடையவனும், தன்னின் வேறாய்த் தனக்கு ஒப்பதும் மிக்கதுமாகிய தெய்வம் ஒன்றும் இல்லாதவனுமாகிய அத்தன்மையை யுடைய முதல்வனே, எங்கட்கு இறைவன் ஆவான் என்று சொன்னான்."

இப்பகுதிக்கு உரைவேந்தர் திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகியோர் பாடிய பாடலை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார். "இறைவன் முறை செய்து காக்கும் முதல்வன், உயிர்கட்கு உடலும் கருவியும் உலகும் பிறவும் படைத்தளித்துக் காத்தலும், அவ்வுயிர்கட்கு உண்டாகும் இளைப்பு முதலிய நீங்குதற்பொருட்டு ஒடுக்குதலும் செய்து, அவ்வுயிர்கள் செய்யும் வினைக்கேற்ப இன்பமும் துன்பமும் ஆகிய பயன்களை முறை செய்து வழங்குதலும்

செய்தலின் 'இறைவன்' என்றார்; இறு என்னும் சொல்லடியாகக் கொண்டு எப்பொருளினும் தங்குபவன் என்றலும் ஒன்று. இரு சுடர் முதலிய எட்டினையும் கட்டி நிற்றலாவது, தனக்கென வேறு உடம்பின்றி அவற்றையே உடம்பாகவும், அவற்றில் தான் உயிராகவும் கொண்டு நிற்றல் யாக்கையும் உயிருமாய் என மாறுக. கட்டி நிற்போன் எனவே, இவ்வாறு உடம்பும் உயிருமாக அமைத்துக் கோடல் அவன் தானாகவே தன் நினைவாற் (சங்கற்பத்தால்) சமைப்பதென்றும், இவ்வாறு கட்டிக் கொள்ளாதே வேறாய் நிற்றலும் அவற்கு உண்டென்றும் கூறினானாம்.

முதல்வன் அட்டமூர்த்தியாய் இருத்தலை, நாவரசரும் "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமான னாய்எறியுங் காற்றும் ஆகி, அருநிலைய திங்களாய் ஞாயி றாகி ஆகாசமாய் அட்ட மூர்த்தி யாகி" (6:91) என்பது காண்க.

கற்கப்படும் கலை பலவும் இறைவனே என்பது, "கலையவன் மறையவன் காற்றொடு தீ, மலையவன் விண்ணொடு மண்ணும் அவன்" (109:6) எனறு ஞானசம்பந்தரும்,

'கலையாகிக் கலைஞானம் தானே ஆகி' (6:94:2)

என நாவசரும் கூறுவர்.

படைத்தலும் காத்தலும் அவற்கு மிக எளிதில் அமைவன என்றற்கு "விளையாடும் பண்பினோன்" (திருவெம்பாவை) என்று மணிவாசகர் கூறுதல் காண்க. (பக்.465-466).

இவ்வாறே பிற சமயவாதிகள் கூறும் கருத்துக் களுக்கும் தக்க சான்றுகள் தந்து உரை செய்துள்ளார் உரைவேந்தர். இவர் உரையைக் காணுமிடத்து,

'இலக்கணநூற் பெரும்பரப்பும் இலக்கியநூற்
பெருங்கடலும் எல்லாம் ஆய்ந்து
கலக்கமறத் துறைபோகக் கற்றுணர்ந்த
பெரும்புலமைக் கல்வியாள
விலக்ககிலாத் தருக்கநூல், மெய்ப்பொருள் நூல்,
வடமொழிநூல், மேற்பால் நூல்கள்
நலக்கமிகத் தெளிந்துணர்ந்த நற்கலைஞ!'

(உ.ஔ.நூ,ப.14)

என்று அறிஞர் ந.ரா.முருகவேள் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமுடையதாகும்.

பிரமவாதி

பிரமவாதியை மணிமேகலை சந்தித்தபோது, 'பெரிய இவ்அண்டம் முழுவதும், ஒப்பற்ற பிரமதேவன் இட்ட முட்டையாகும்' என்று சொல்கின்றான். இது குறித்து, உரைவேந்தர், "இது வைதிக நெறியாகிய அறுவகைச் சமயத்துள் கூறப்படாது புராணங்களிற் கூறப்படும் வழக்கு. இப்பிரமவாதி கூற்றைப் பற்றி, இவ் அண்டமும் பிரமாண்டமெனப் படுகிறது என அறிக. ஈண்டுக் கூறப்படும் கருத்து மனுதரும நூலில் முதல் அத்தியாயத்திலே (சுலோ.9) கூறப்படுகிறது" (ப.465) என்கிறார்.

வைணவவாதி

'கடலின் நிறத்தையுடையனாகிய விட்டுணு புராணத்தை அன்போடு ஓதிப் பயின்றவனாகிய வைணவவாதி, தங்கட்கு நாராயணனே இறைவன்' என்று மணிமேகலைக்குச் சொல்கிறான்.

'காதல் கொண்டு ஓதினன்' எனவே, இவன் வைணவ சமயத்தில் பேரன்பும் கடைப்பிடியும் உடையன் என்பது பெற்றாம். முறை செய்தலேயன்றிக் காத்தலும் இறைவன் கடனாகும் இயைபுபற்றி, இறையென்பதற்குக் 'காப்பு' என்றான்" (ப.466) என்று தொடர்நயம் காட்டி விளக்குகிறார் உரைவேந்தர்.

வேதவாதி

வேதவாதி 'யாதொன்றையும் சார்ந்து தோன்றுதல் இல்லாது தான் தோன்றியாகிய, ஆரணமாகிய வேத புருடனுக்கு, தோற்றமும் கேடும் இல்லை; அவ்வேதம் கூறுவதே எங்கட்குச் சமய நெறியாம்' என்று மணிமேகலைக்குக் கூறுகிறான்.

"வேதம் அநாதியென்றும், அதனை உருவகத்தாற் புருடனென்றும் கூறுவது வைதிக வேதியர் மரபு" என்று உரைவிளக்கம் தரும் உரைவேந்தர், தமிழ் இலக்கிய இலக்கணங்களினின்றும் பல சான்றுகள் தந்துள்ளார்:

"வேதம் அநாதி, நித்தியமென்பது பற்றி நிகழும் தடை விடைகளை நியாயபாடியத்தும், நியாய வார்த்திக தாற்பரிய மீகை (ஷை 1.68)யிலும், நீலகேசி வேதவாதச் சருக்கத்தும் (வீஓ) சாத்திர தீபிகை (அதி.எவீவீவீ) முதலிய வேறு பல நூல்களிலும் காணலாம்.

'மாயா வாய்மொழி'
'முதுமொழி' (பரி.3.47)

'அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதி' (குறள்.543)

ஆசீவகவாதி

'எல்லையில்லாத பொருள்களின் இடத்தில் எங்கும் எப்பொழுதும் நீங்காமற் பொருந்திக் கிடந்து விளங்கு பவனாகிய, எல்லையில்லாத அறிவினையுடைய மற்கலியாகிய எங்கள் இறைவன் உரைத்த நூற்பொருள்கள் ஐந்து வகைப்படும். திண்மை பொருந்திய உயிரும் நால்வகை அணுவகையுமாம் அவ்வணுக்கள், தாம் தம்மை உற்றும் கண்டும் உணர்ந்திடுமாறு கூடுதலும் பிரிதலும் செய்யும்; நில அணுவும், நீர் அணுவும், தீ அணுவும், காற்று அணுவும் என நான்கு வகைப்படுவனவாகிய அவை, மரமாகவும், உடம்பாகவும் திரண்டு உருவாவதும் உண்டு; அவை வேறு வேறாகப் பிரிந்து விரிவதும் உண்டு; திரள்வதும் விரிவதுமாகிய அணுக்களின் அக்கூறுபாடுகளை அறிவது உயிர் எனப்படும்' எனத் தொடங்கி, 'அவ்வுயிர், கரும் பிறப்பு என்றும், கருநீலப் பிறப்பென்றும், பசும் பிறப்பென்றும், செம்மைப் பிறப்பென்றும், பொன்மைப் பிறப்பென்றும் வெண்மைப் பிறப்பென்றும் அறுவகைப் பிறப்பும் பிறந்து படிப்படியாக உயர்ந்து வீடுபேறு அடையும்' என்று மற்கலி கோசலர் என்பார் கூறிய நூற்பொருள் வகைகளை- உயிர் பற்றிய கோட்பாடுகள், வினை பற்றிய கோட்பாடுகள் முதலானவற்றை - மணி மேகலைக்கு விளக்கிக் கூறுகிறான் ஆசீவகவாதி' (ப.469)

விளக்கவுரையில் மற்கலி கோசலர் தரும் வரலாற்றுச் சான்றை எடுத்துக்காட்டுகிறார் உரைவேந்தர். அது வருமாறு:

"இம்மற்கலி கோசலர் மக்கலி கோசலர் என்றும் கூறப்படுவர். இவர் ஆசீவகருள் மூன்றாம் தீர்த்தங்கரர் என்றும், அசோக மன்னனுடைய பேரனான தசரதன் என்பான், இந்நெறியிற் பேரீடுபாடுடையான் என்றும் கூறுவர். ஆசீவகநெறியைக் கண்ட ஆசிரியன் எளிய குடியில் ஆக்களைக் கட்டும் தொழுவத்தில் (கோசாலையில்) பிறந்தது பற்றி, அவர் நெறி நின்ற தலைவர்கள் கோசலர் எனப் பட்டனர். மக்கலி என்ற சொற்குப் பலரும் பல்வேறு பொருள்

உரைப்பர். சிலர் இவர் தந்தை வீடுதோறும் சென்று ஓவியங்கள் காட்டி வயிறு வளர்த்தது பற்றி, அவர் மகனான இவர் மக்கலி எனப்பட்டார் என்றும், சிலர் இவரைப் பின்பற்றினோர் ஆடையின்றி அம்மணமாய்த் திரிந்தமையின் தம்மைப் பாதுகாத்துக் கோடற்கு மூங்கிற் கோலைக் கையில் ஏந்தித் திரிந்தமையின் இப்பெயர் பெற்றனர் என்றும், சிலர் 'இடறி விழாதே' (மா.கலி) என்று அடிக்கடி இவர்தம் மாணவர்க்கு உரைத்தது பற்றி இவ்வாறு பெயர் பெற்றாரென்றும் கூறுப. (History of Indian Philosophy, Vol.II, p.456) 'யாதும் செய்யாதே; சும்மா இரு' என்பது ஆசீவகர் குறிக்கோள் என்பர் (பதஞ்சலியார் பாடியம், Vol.III, ப.96) நீலகேசியும், 'மோனாந்து இருந்தனன்' (680) என்கின்றது" (ப.474).

'சமயக் கணக்கர்தந் திறம் கேட்ட காதை'யில் மணிமேகலை, அளவைவாதி, சைவவாதி, பிரமவாதி, வைணவவாதி, வேதவாதி, ஆசீவக வாதி, சாங்கியவாதி, வைசேடிகவாதி, பூதவாதி ஆகிய ஒன்பதில், "அளவை முதல் வேதவாதம் ஈறாகியவற்றை வைதிக வாதமென ஒன்றாகவும், ஆசீவக வாதம், நிகண்டவாதம் இரண்டையும் ஒன்றாகவும், ஏனைச் சாங்கியம், வைசேடிகம், பூதவாதம் மூன்றாகவும் கொண்டு ஐவகைச் சமயமெனத் தொகுத்து, "ஐவகைச் சமயமும் அறிந்தனள்" என்றார் (ஆசிரியர்); இனி, உலகாயதம், பௌத்தம், சாங்கியம், நையாயிகம், வைசேடிகம், மீமாஞ்சகம் என்ற சமயங்கள் ஆறனுள், பௌத்தம் ஒழிந்த ஏனை ஐந்தையும் இங்கே கேட்கின்றாளாதலின், 'ஐவகைச் சமயமும் அறிந்தனள்' என்றார் என்றுமாம். இவ்வகையில் அளவை வாதமும், சைவ வாதமும், வைணவ வாதமும் நையாயிகத்தும், பிரம வாதமும் வேத வாதமும் மீமாஞ்சகத்தும், பூதவாதம் உலகாயத்தும், அடங்கும். ஆசீவகவாதமும் நிகண்ட வாதமும் ஒன்றாய் இவ் ஐந்தனுள் அடங்காவாயினும், வழக்காற்றுச் சிறப்புப் பற்றி ஐவகைச் சமயமெனத் தொகுத்தெடுத்து ஓதினார் எனக் கோடலுமாம். "ஆற்றுளிக் கிளந்த அறுவகைச் சமயமும்" (பெருங்கதை 1, 36.242) என்று கொங்குவேளிர் கூறுதல் காண்க. இக்கருத்தே பற்றி, சைனம் ஒழிந்த ஏனைய சமயங்களை "ஐவகைச் சமயமும் மறந்தோற்றனவென" (பெருங்க.1.36ஃ249) ஐவகைச் சமயமென்று அவர் கூறுதல் ஈண்டுக் குறிக்கத்தக்கது. (மணிமேகலை. பக்.492-493) என்று

அறுவகைச் சமயங்கள் தமிழ்நாட்டில் இருந்தமையைக் குறிப்பிடுகிறார் உரைவேந்தர். மேலும் அவர்,

"இக்கூறியவற்றால், மணிமேகலை ஆசிரியர் காலத்தே தமிழகத்தில் அறுவகைச் சமயங்கள் இருந்தமை விளங்கும். நாவரசர், ஞானசம்பந்தர் முதலாயினர் காலத்தே விளங்கியிருந்த பாசுபதம், காபாலம் முதலிய சமயங்கள் இம் மணிமேகலை ஆசிரியர் காலத்தே இருந்தில. வேதவாதத்தின் வேறாகச் சைவமும் வைணவமும் பிரித்துக் கூறப்படுதல் குறிக்கத்தக்கது. அளவை வாதமும் இப்போது மறைந்தொழிந்தன; ஏனையவற்றுள் நிகண்டவாதம் மட்டில் சைனசமயமென்ற பெயரால் நிலவுகிறது; பௌத்தம் அதனினும் குறைந்து விட்டதேயன்றி, சீனம், சப்பான், சயாம், பர்மா, இலங்கை முதலிய நாடுகளிற் பரவியுள்ளது. பிற சமயங்கள் இருக்குமிடம் தெரியாது நூலளவாய் ஒடுங்கிவிட்டன. இக்காலத்து நிலவும் சைவம், வைணவம், வேதாந்தம் முதலிய சமயங்களில், இச்சமயங்களில் ஏற்புடைய கருத்துக்களும் கொள்கைகளும் கலந்து கொண்டதனால் மறைந்தன என்று கொள்ளினும் அமையும்" (ப.493) என்று மணிமேகலை காலச் சமய நிலையைத் தம் உரையில் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார் உரைவேந்தர்.

தொடர் நயம் கூறுதல்

கச்சிமாநகர் புக்க காதையில், மணிமேகலை, கோவலன் தந்தையாகிய மாசாத்துவானை சந்திக்கிறாள்; அப்பொழுது, தான் காஞ்சி மாநகர்க்கு வந்த காரணத்தை மணி மேகலைக்குக் கூறுகிறான் மாசாத்துவான்:

"கோவலனையும் கண்ணகியையும் "நின் தாதையும் தாயும்" என்றான். முற்பிறப்பிற் செய்த தீவினைப் பயனாக இப்பிறப்பில் மதுரையில் கோவலனும் கண்ணகியும் துன்புற்றாரென்பான், "செய்த தீவினையின் துன்புற" என்றும், அவர் துன்புறுங்காலம் மதுரை தீக்கிரையாதற்கு உரிய சாபம் பயன் விளைக்கும் காலம் ஆதலின், "செழுநகர் கேடுற" என்றும் கூறினான்.

புத்தனைச் சுகதன் என்ப. அவன் உரைத்த அருளறம் அன்பறத்தின் காரியமாகுதல் பற்றி, "அன்புகொள் அறம்" என்றார்; புத்த அறங்களை "மலையா அறம்" என்றது எத்திறத்

தோரும் தவறு என மறுத்தற்காகானை பற்றி, எல்லா உயிர்க்கும் அன்பு செய்ய வேண்டும் என்ற அறம் எம்மதத் தோர்க்கும் சம்மதமானது என்பதை, "தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது இன்னுயிர் நீக்கும் வினை" (குறள் 327) எனத் திருவள்ளுவர் கூறுவது காண்க" (ப.512).

என்று சமணரின் வினைக் கோட்பாட்டையும், அனைத் துயிர்க்கும் அன்பு காட்டும் பௌத்த அறம் பற்றியும் எடுத்துரைக்கின்றார் உரைவேந்தர்.

'தரும சாரணர்' (28:108) என்னும் தொடருக்கு, உரைவேந்தர் தரும் விளக்கமாவது:

"புத்த தருமத்தை ஆங்காங்குச் சென்று பகரும் தொழிலினைத் தரும சாரணர் என்ப. அசோக மன்னனால் தருமவுரை குறித்து நாடுகட்கு விடுக்கப்பட்டோரைச் சாரணர் என்ப என நாட்டு வரலாறு கூறுகிறது. ஈண்டுக் கூறப்படும் சாரணர் இலங்கைக்குச் சென்று மீள்வோராவர். கருமுகிற் படலத்துக் ககனத்து இயங்குவோர் என்றற்குக் கருமுகிற் கூட்டத்தை ஊர்தியாகக் கொண்டு வானவீதியிற் செல்பவர் என்றுமாம்... அவர்கள் இருந்து அறம் கூறுதற் பொருட்டுக் கற்றலம் எடுத்துவைத்தல் மரபு. இதனைச் சிலாதலம் என்றலும் வழக்கு. 'இலங்கொலிச் சிலாதலம் மேலிருந்தருளிப், பெருமகன் அதிசயம் பிறழா வாய்மைத் தருமஞ் சாற்றும் சாரணர்' (சிலப்.10:161-163) என்று அடிகள் கூறுவது ஒப்புநோக்கத்தக்கது" (ப.514) என்று இளங்கோவடிகள் கூற்றை சான்று காட்டி உரை விளக்கம் அளிக்கின்றார் உரைவேந்தர்.

ஆருயிர் மருந்து

'ஆருயிர் மருந்தே அந்நாட்டு அகவையில்
காரெனத் தோன்றி காத்தல் நின்கடன்'

என மணிமேகலைக்கு உரைக்கின்றான் மாசாத்துவான். இதற்கு உரைவேந்தர்,

"ஆருயிர் மருந்தாகிய உணவு தரும் அமுதசுரபியை உடைமை பற்றி, மணிமேகலையை, **'ஆருயிர் மருந்தே'** என்றான். வரையாது வழங்க வேண்டும் என்ற குறிப்பால், 'காரெனத் தோன்றி' என்றும், செய்யாமை குற்றம் என்பது தோன்ற, 'காத்தல் நின் கடன்' என்றும் குறிப்பாய்ச் சொன்னான்" (ப.518) என்று விளக்கம் தருகின்றார்.

பசிப்பிணி மருந்து நல்கும் சுரபியை **'மருந்தெனும் சுரபி'** என்றும், இதுகாறும் அங்கையில் ஏந்தி நின்ற சுரபியை, பீடிகையில் வைத்து வழிபட்டு எடுத்தலின், 'அங்கையின் ஏந்திய அமுத சுரபி' என்றும் கூறினார் (ப.523)

'பெருந்தவர் கைபெய் பிச்சையின் பயன்' என்னும் தொடருக்கு, "தக்கார்க்குச் செய்த அறம் சிறிதாயினும் பெரும்பயன் விளைப்பது போலச் சுரபியில் இட்ட சிறு சோறு கொடுக்கக் குறையாது மிக்குப் பெருகிற்று என்றற்குப், 'பெருந்தவர் கைபெய் பிச்சையின் பயனை' உவமம் காட்டினார். பெருந்தவர் கைபெய் பிச்சை பெருகுதலைப் பிறரும், "அறப் பயனும், தான்சிறி தாயினும், தக்கார்கைப் பட்டக்கால், வான் சிறிதாப் போர்த்து விடும்" (நாலடி:38) என்பது காண்க." (ப.524) என்று நாலடியார் பாடலை மேற்கோள் காட்டி விளக்கம் அளிக்கின்றார் உரைவேந்தர்.

சமய வாதிகளின் கருத்துக்களை எடுத்து இயம்பும் மணிமேகலையின் இறுதி நான்கு காதைகளுக்கு உரை வரைவது எளிதான செயல் அல்ல இப்பணியைச் செய்ததன் மூலம் 'செயற்கரிய செய்வர் பெரியார்' என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு ஏற்ப மேம்பட்டு நிற்கிறார் உரைவேந்தர். மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சை.வே.சிட்டிபாபு கூறுவதுபோல், "சென்ற நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குத் துணை புரிந்தவர் ஔவை துரைசாமி அவர்கள். தம் காலத்து மக்களிடம் தமிழ் சிறந்தோங்க உழைத்தவர். பழைய உரையாசிரியர் நடையில் அமைந்த தமிழ் வளம் இவர் படைப்புகளில் காணலாம். ஆயின் தமிழ் ஒருவாறு கற்றவர்களுக்கும் விளக்கமாகும் வகையிலும் எழுதியவர். எளிமையும் இனிமையும் இவருடைய நடையின் சிறப்பியல்புகள் எனலாம். சிறந்த ஆராய்ச்சி உண்மைகள், அறிவுலகச் சிந்தனைகள் ஆகியவைகளோடு ஆராய்ச்சி நெறியினை அறிவித்த ஒரு முன்னோடி என்று ஔவை அவர்களைக் கருதவேண்டும்" ('கற்றோர்க்குக் கலங்கரை விளக்கம்', உரைவேந்தருக்கு ஒரு நூற்றாண்டு, ப.14) என்று கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை ஆகும்.

7. திருவருட்பா உரைத்திறன்

"பெருமைமிகும் இராமலிங்க வள்ளல் தந்த
பேசரிய திருவருட்பா உரையும் கண்டார்!
விரிவுலகம் முற்றிலுமே வியந்து போற்றும்
வித்தகராம் ஔவைதுரை சாமிப் பிள்ளை!
- கவியரசியார் சௌந்தரா கைலாசம்*

உரைவேந்தர் ஔவை அவர்கள் பணியினின்று ஓய்வு பெற்ற பின்னரும், ஓய்ந்து விடாமல், அருட்செல்வர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களால் ஊக்குவிக்கப் பட்டு, வள்ளலாரின் திருவருட்பா நூலுக்கு 1979இல் உரை எழுதத் தொடங்கி 1989 வரை பத்து ஆண்டுகளில் பத்துத் தொகுதிகளாக திருவருட்பா உரையினை நிறைவு செய்தார். அவை அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடுகளாக வெளிவந்துள்ளன. இவ்வெளியீட்டுக்குத் தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறையிலிருந்து நிதியுதவி பல்கலைக்கழகத்துக்குக் கிடைத்தது. இதன் மறுபதிப்பு சுத்த சன்மார்க்க சங்கத்தின் மூலம் 2004-ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

இவ்வுலகில் மக்கட் குலத்தார் அனைவரும் 'ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமையுளராகி உலகியல் நடத்தல் வேண்டும்' என்னும் பரந்த அருள் நோக்கத்துடன் இராமலிங்க அடிகள் திருவாய் மலர்ந்தருளிய செந்தமிழ்த் திருப்பாடல்களின் தொகுதியே திருவருட்பா ஆகும். "இத்திருப் பாடல்கள் அருளாளனாகிய இறைவன் உயிர்களிடத்தே வைத்துள்ள திருவருளின் திறத்தைப் போற்றிப் பரவும் நிலையில் திருவருளின்

* உரை வேந்தருக்கு ஒரு நூற்றாண்டு, ப.37.

தூண்டுதலால் பாடப்பெற்ற திருப்பாடல்கள் ஆதலின் 'திருவருட்பா' என வழங்கப் பெறுவனவாயின. தமிழ் மக்கள் எல்லோரும் எளிதில் பொருள் உணர்ந்து பாடியும் கேட்டும் பயன்பெறுதற்குரிய எளிமையும் கற்போர் நெஞ்சத்தினைக் கருணைத்திறம் வாய்ந்ததாகக் கனிவிக்கும் அன்பின் திறமும் பொருந்திய தம்முடைய பாட்டின் திறத்தாலே இந்நாட்டில் இறைவனது திருவருள் ஒளியைப் பரப்பிய அருளாசிரியர் இராமலிங்க அடிகளார். ஆதலால் அப் பெருந்தகையாரைத் 'திருவருட் பிரகாச வள்ளலார்' எனத் தமிழ் மக்கள் பரவிப் போற்றுவாராயினர்" என்பர் அறிஞர் க.வெள்ளைவாரணனார் (திருவருட்பா முதல்தொகுதி, நூல் அறிமுகம், ப.39).

இராமலிங்க வள்ளலார் பாடியருளிய திருவருட்பாத் திருப்பாடல்கள் ஆறு திருமுறைகளாக வகுக்கப் பெற்றுள்ளன. அவற்றில் அமைந்த திருப்பாடல்களின் தொகை 5818 ஆகும். தேனினும் இனிய இத்திருவருட்பாப் பாடலின் செம்பொருள் நுட்பங்களை நுண்ணிதின் ஆராய்ந்து, உரை செய்தவர் உரைவேந்தர். இவ்வுரை பத்துத் தொகுதிகளாக வெளிவந்துள்ளது.

உரை நெறி

திருவருட்பா உரை நெறி கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது.

1. பாடல்
2. உரை - பாடலின் பொருள்
3. விளக்கம்
4. பாடல் மூலம் பெறப்படும் கருத்து.

சென்னைக் கந்தகோட்டப் பெருமான் மீது பல பாடல்கள் பாடியுள்ளார் வள்ளலார். அவற்றுள் தெய்வ மணிமாலையும் ஒன்று. 'கருவிலே திரு' வாய்க்கப் பெற்றவர் வள்ளலார் என்பதற்குக் கட்டியம் கூறும் ஒரு சுவையான நிகழ்ச்சி. ஒன்பது வயதில் அவரது ஆசிரியர்.

'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்

வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்'

என்று வகுப்பில் 'உலக நீதி'யைச் சொல்லச் சொல்லியும், அவர் சொல்லாமல் இருந்தார். 'ஏன் சொல்லவில்லை?' என்று ஆசிரியர் கேட்டபோது, 'இறைவனிடத்திலே 'வேண்டாம் வேண்டாம்' என்று சொல்லிக் கொண்டிருப் பானேன்? ஏதாவது 'வேண்டும் வேண்டும்' என்று எதை வேண்டலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்' என்றார்.

"நீ வேண்டுமானால், "வேண்டும் வேண்டும்" எனப்பாடு" என்று ஆசிரியர் கட்டளை இட, உடனே "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்ற பாடலைப் பாடினார் வள்ளலார் என்பர். (இரா.மோகன் & நிர்மலா மோகன், நல்லவை நாற்பது, ப.13)

சிறு வயதில் பள்ளிக்குச் செல்லாமல் சென்னையில் உள்ள கந்தசாமி கோயிலுக்குச் சென்று வருவாராம். கந்த கோட்டத்து முருகனை வணங்கி அவர் மீது பாடல்கள் பாடுவது அவர் இயல்பு; முருகப் பெருமான் உள் முகத்தில் நின்று வள்ளலாருக்கு எல்லாக் கல்வியையும் உணர்த்தினான். எனவே, வள்ளலார் அனைத்தையும் ஓதாமல் உணர்ந்தார். முழுமையான ஞானம் பெற்றார்.

தெய்வமணி மாலையில் இடம்பெற்றுள்ள அப்பாடல் வருமாறு:.

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமாதம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும்உனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழ வேண்டும்

தருமமிகு சென்னையிற் கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே (பா.8)

உரை என்ற பகுதியில் உரைவேந்தர் இப்பாடலின் பொருளைச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றார்:

"தருமம் செய்வார் மிக்குள்ள சென்னையில் உள்ள கந்த கோட்டத்துள் வளரும் திருக்கோயிலில் எழுந்தருளும் கந்தவேளே. தண்ணிய முகத்தையுடைய தூய மணிகளும் சிறந்த சைவமணியாகிய ஆறு முகங்களை யுடைய தெய்வ மணியே. ஒரு நெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்களின் உறவே எனக்கு வேண்டும்; உள்ளத்தில் ஒன்றும், புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர் உறவு என்னை அடையாவாறு காக்க வேண்டும்; பெருமை சான்ற நினது புகழையே நான் பேசுபவனாகவும், பொய்ம்மை மொழிகளைப் பேசாத வனாகவும் இருக்க வேண்டும்; பெருமை நல்கும் நெறியையே கடைப்பிடிப்பவனாக அமைய வேண்டுமேயன்றி மதமென்னும் பேயாற் பிடிபடாதவனாக இருக்க வேண்டும்; இயல்பாகவே தோன்றுகிற பெண்ணாசையை என் மனம் மறந்தொழியவும், அதற்கீடாக உன்னை மறவாது ஒழுகும் தன்மை என் நெஞ்சில் நிலைபெறவும் வேண்டும்; மதி நுட்பமும் உன் கருணையாகிய நிதியமும், நோயற்ற வாழ்வும் உடையவனாக வேண்டும்; இவற்றை அருளுக" (பக்.82-83).

உரைக்குப் பின்னர் சொல்நயம், பொருள் நயம், தொடர் நயம், மேற்கோள் ஒப்புமை காட்டி விளக்குதல் முதலான உரைநெறிகளை மேற்கொண்டு, பாடலின் கருத்தை விரிவாக விளக்கிச் செல்கின்றார் உரைவேந்தர்.

'ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்' என்றதற்கு, பல தலைப்படாமல் ஒருதலையாக ஒரு நெறிக்கண் இயங்கும் மனத்தின் நினைவு ஒருமை நினைவாதலால், 'ஒருமையுடன் நினது திருமலரடி நினைக் கின்ற உத்தமர்' என்று கூறுகின்றார். "ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன்" என்பர் திருஞானசம்பந்தர்.

"உள்ளத்தில் ஒன்றும், வாயில் ஒன்றும் பேசுபவர் வஞ்சகமும் பொய்யும் உடைய தீயராதலின் அவரது உறவு அறவே கூடாது என்றற்கு 'உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசுவார்" எனப் பல சொற்களால் விரியக் கூறுகின்றார்.

"பெருமை தரும் செம்மை நெறி பெருநெறி; அதனைக் கடைப்பிடித்து ஒழுகல் இன்றியமையாமையால், "பெருநெறி பிடித்தொழுக வேண்டும்" என்றும், அதனைக் கெடுக்கும் இயல்புடைமை பற்றி "மதமான பேய் பிடியா திருக்க வேண்டும்" என்றும் கூறுகின்றார். உடல் வளரும் போதே உடன் வளர்ந்து அறிவை மயக்குவதனால், "மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும்" எனவும், மறக்கத் தக்கது பெண்ணாசையாகிய காமம் என்றும் மறவாமைக்கு உரியது யாது என்று எழும் வினாவிற்கு விடையாக, 'உன்னை மறவாதிருக்க வேண்டும்' எனவும் முருகனிடம் வேண்டுகின்றார்.

"பொருள் வாழ்வுக்கு இயற்கையறிவாகிய "மதி வேண்டும் என்றும், அருள் வாழ்வுக்கு நெறி வழங்குதலின் 'கருணை நிதி வேண்டும்' என்றும், 'உடல் வாழ்க்கை உறுதி பயத்தற்கு 'நோயற்ற வாழ்வில் நான் வாழ வேண்டும்' என்றும் இயம்புகின்றார்.

இதனால் ஒருமை நினைவுடைய உத்தமர் உறவு முதல் நோயற்ற வாழ்வு ஈறாக உள்ள நலம் பலவும் வேண்டுமென முறையிட்டவாறாம்" *(I,பக்.83-84)*

இவ்வாறு தொடர்நயம், பொருள் நயம், கருத்து நயம் முதலியன வெளிப்படுமாறு உரை வரைந்து செல்கின்றார் உரைவேந்தர்.

புராணக் கதைகளைச் சான்று காட்டுதல்

'ஈனமங்கே செய்த தாருகனை ஆயிர
விலக்கமுறு சிங்க முகனை
எண்ணரிய திறல்பெற்ற சூரனை மறக்கருணை
ஈந்துபணி கொண்டிலை யெனில்
தானமிங் கோர்சென்னைக் கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே'

(தெய்வமணிமாலை,பா.21)

என்னும் பாடல் வரிகளுக்கு விளக்கம் தருமிடத்து, முருகன் சூரபதுமன், சிங்கமுகன், தாருகன் ஆகியோரை வதம் செய்த புராண வரலாற்றினை எடுத்துக்காட்டுகின்றார் உரைவேந்தர்.

"அகத்தியர் முதலிய முனிவர்களை வழி மயக்கி அலைத்தமை பற்றி "ஈனமங்கே செய்த தாருகன்" எனவும், ஆயிரம் தலைகொண்டு ஆயிர இலக்கம் படை மறவரை யுடையனாதலால் சிங்கமுகனை, "ஆயிர இலக்கமுறு சிங்கமுகன்" எனவும், தேவர் மூவரையும் இந்திரன் முதலிய இறையவர்களையும் அஞ்சியோடுவித்த ஆற்றலுடையன் என்றற்கு "எண்ணரிய திறல் பெற்ற சூரன்" எனவும் இயம்புகின்றார். போர் முடிவில் நல்லறிவு தந்து தன் தெய்வத் தன்மையுணர்ந்து தன் திருவடி வணங்குவித்த அருள் நலத்தை வியந்து, "மறக்கருணை ஈந்து பணி கொண்டிலையேல்" என உரைக்கின்றார். தாருகன், சிங்கமுகன், சூரவன்மன் ஆகியோர் வலியழிதற்கு முன் வான்உலகம் பாழ்பட்டது; தேவர் அமுதபானம் பெறாது சிறைப் பட்டனர்; அமரர்வினை செய்தலின்றிப் போக நுகர்ச்சியில் ஆழ்ந்து கிடந்த வாழ்வு சீர்குலைந்தது; வாழ்தல் வேண்டிக் கடல் கடைந்த பயன் வீணாயிற்று; சாவா மருந்துண்டிருந்த மாண்பு சிதறிற்று; அவர்களுடைய அறிவாராய்ச்சி தவறுபட்டது; இந்திரன் ஆட்சி ஈடழிந்தது; அது பற்றியே "வானமெங்கே அமுதபானமெங்கே" என்பது முதலாய சொற்றொடர்களால் உணர்த்துகின்றார். ஞானிகளும் முனிவர்களும் சூரவன்மன் ஏவின செய்யும் பணிமக்கள் ஆனமையின், 'ஞானமெங்கே முனிவர் மோனமெங்கே' என்றும், படைத்தளிக்கும் தேவர்களான பிரமனும் நாரணனும் அடிமைகள் ஆனமை புலப்பட "அந்த நான்முகன் செய்கையும், நாரணனது காத்தல் தொழிலும் என்ன பயனைச் செய்தன" என்று வினவுகின்றார்." (பக்.109-110) என்று முருகப் பெருமான் சூரபதுமனை வதம் செய்த புராணக்கதையினை உரையில் விரித்துச் செல்கின்றார் உரைவேந்தர்.

பிரமன் சிறைப்பட்ட வரலாறு

பிரணவ மந்திரத்தின் பொருள் தெரியாமையால் பிரம்மனை முருகன் சிறையிட்டான் என்பது புராண வரலாறு:

"பிரணவப் பொருளைச் சொல்ல மாட்டாமை கண்டு முருகன் பிரமனைக் கந்த மாதனத்தில் சிறையிட்டதைக்

குறிப்பிடுதலால் "பெய் சிறையில் ஒரு கால் பின்பட்டு நிற்குமோ" (பா.27, ப.119) எனவும், சிறையிடும் ஆணை பிறப்பிப்பதற்கு முன் மயங்கும் பிரமனை நோக்கிப் "பிரணவமாகிய இதன் பொருள் கருதாய் சிட்டி செய்வது இத்தன்மையதோ எனச் செவ்வேள்," குட்டினான் அயன் நான்கு மாமுடிகளும் குலுங்க" (அயனைச் சிறைபுரி படலம், பா.14) எனக் கந்தபுராணம் கூறுவதால் "முன்பட்ட குட்டில் பெருந்துயர் மறந்து விடுமோ" எனவும் உரைக்கின்றார்" (ப.120) என்று புராண மரபுச் செய்திகளை எடுத்துக்காட்டி விளக்குகின்றார் உரைவேந்தர்.

மார்க்கண்டேயன் வரலாறு

மேலும், அவர் மார்க்கண்டேயனது உயிர் கொள்ளும் முயற்சியில் இயமன் சிவனால் உதைபட்டு வீழ்ந்த நிகழ்ச்சியை நினைதலால், "இரவு நிறமுடை இயமன் இனியெனைக் கனவினும் இறப்பிக்க எண்ணுவானோ?" என்றும், மறந்து என்னுயிரைப் பற்ற முயல்வானாயின் மார்க்கண்டன் பொருட்டுப் பட்ட பாட்டைத் தன்மேனி வடுக் கண்டு நினைவு கூர்ந்து நீங்குவன் என்பார். "எண்ணுறான் உதையுண்டு சிதையுண்ட தன்னுடல் இருந்த வடு எண்ணுகிறானோ" (ப.120) என்று மார்க்கண்டேயன் வரலாற்றையும் எடுத்துக் காட்டுகிறார்.

நமச்சிவாய மந்திரம்

'வள்ளலார் ஐந்து மாதக் குழந்தையாக இருந்தபோது அவரது தந்தையார் இராமையா, நடராசப் பெருமானை வழிபடுவதற்காகத் தம் குடும்பத்தினருடன் சிதம்பரம் சென்றார்; நடராசப் பெருமான் சந்நிதியின் முன் அனைவரும் நின்றனர். ஆராதனை நேரம் வந்தது. அப்போது இராமையா வின் கையில் இருந்த ஐந்து மாதக்குழந்தை, இறைவனைப் பார்த்துச் சிரித்தது. ஆராதனை செய்த அப்பையர் என்பவர் இராமையாவிடம், 'ஐயா, இது உம் பிள்ளை இல்லை; ஆண்டவன் நடராசப் பெருமானின் அருள் பிள்ளை' என்று மகிழ்ச்சிப் பெருக்கில் தம்மை மறந்து சொன்னார்.

வள்ளலார் இளமையில் முருகப் பெருமானைக் கடவுளாகவும், திருஞான சம்பந்தரைக் குருவாகவும், திருவாசகத்தை வழிபடும் நூலாகவும் கொண்டார். பின்னர்

ஒற்றியூரில் வாழும் இறைவனின் இணையற்ற பக்தராகவும், பின் தில்லையம்பல நாதரின் பக்தராகவும் விளங்கினார். முடிவில் அருட்பெருஞ்சோதி அடியவராகத் திகழ்ந்தார். முருகப் பெருமானை வணங்கி, ஸ்ரீசிவ சண்முக நாம சங்கீர்த்தன லகரியும், சிவபெருமானை வணங்கி நமச்சிவாய சங்கீர்த்தன லகரியும் பாடியுள்ளார் வள்ளலார். இவை இரண்டாம் திருமுறையில் இடம்பெற்றுள்ளன.

"சங்கீர்த்தனம் என்பது புகழ்தல் என்னும் பொருளது; கீர்த்தியை உரைப்பது கீர்த்தனம்; கீர்த்தியை இனிது மொழிவது சங்கீர்த்தனம். கீர்த்தி உரைகளை நீர்நிலையிற் காணப்படும் அலைகளைப் போல நிரல்படத் தொடுத்து உரைப்பது லகரி," என்று சங்கீர்த்தன லகரிக்கு விளக்கம் தருகிறார் உரைவேந்தர். (இரண்டாம் திருமுறை, ஸ்ரீசிவ சண்முக நாம சங்கீர்த்தன லகரி, முன்னுரை, ப.271).

சிவஞான உருவாகிய அறுமுகப் பெருமான் திருப்பெயரை வடமொழியில் ஸ்ரீசிவ சண்முகம் என்பர். தூய இனிய தமிழில் உள்ள பெயர்களை வடமொழியாக்கி உரைக்கும் வழக்கம் சென்ற இரு நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் உண்டாயிற்று. முன்னைய நூற்றாண்டுகளில் சயினர்கள் தமிழும் வடமொழியும் கலந்த கலப்பட நடையொன்றை நாட்டிற் புகுத்தினர். கலப்படம் என்பது இகழ்ச்சி உரையாதல் கண்டு மணிப்பிரவாளம் என்று பெயரிட்டு வழங்கினர்... ஆயினும் அது நாட்டில் சிறப்பிடம் பெறாதாயிற்று. வடமொழியை வேதமொழி என்றும் தெய்வமொழி என்றும் வேதியர்கள் விளம்பினர்; விசய நகர வேந்தரும், துருக்கரும், வெள்ளையரும் நாடாளும் நிலையை எய்தியபோது வேதியர்கள் அரசியலிற் புகுந்து செல்வாக்கு மிக்கனர். அந்நாளில் அவர்கள் மறைந்த வடசொற் கலப்புக்கு முதலிடம் தந்து போற்றினர்; தமிழ் மக்கள் தமது மொழியின் தூய்மையைப் பேணிக் காக்கும் திறமும் இலராயினர்... திருக்கோயில்களில் தூய தமிழில் வழங்கிய தெய்வப் பெயர்கள் அனைத்தும் இந்நாளில் வடமொழியில் இருப்பதற்கு அதுவே காரணமாகும். இச்சூழ்நிலையில் வடலூர்அடிகள் தோன்றி வளர்ந்து சிறந்தவர் ஆதலின், அறுமுகப் பெருமான் திருப்பெயரை ஸ்ரீசிவ சண்முகம் எனவும், அவரைப் புகழ்ந்து பாடும் பாட்டை 'சண்முக நாம சங்கீர்த்தன லகரி' எனவும் குறித்துள்ளார்.

"நமச்சிவாய என்பது சிவபெருமானுடைய திருப் பெயர்களில் ஒன்று. 'நாதன் நாமம் நமச்சிவாயவே' என்று ஞானசம்பந்தரும், 'எந்தையார் திருநாமம் நமச்சிவாய' என நாவுக்கரசரும் கூறுவர். இதன்கண் புள்ளியில்லாத எழுத்துக்கள் ஐந்தும் திருவைந்தெழுத்து எனப்படும். இவை நமச்சிவாய என்ற பெயரிலிருந்து எடுக்கப்படுதலால், "படைக்கலமாக உன் நாமத்து எழுத்து அஞ்சும் என் நாவிற் கொண்டேன்" என்று நாவுக்கரசர் நவின்றுரைக் கின்றார்... இதனைப் பின்பற்றியே வடலூர் அடிகளாரும், 'நமச் சிவாயத்தை நான் மறவேனே' என்ற தொடரை இத்திருப்பதிகத்தின் பாட்டுத்தோறும் மகுடமாக நிறுத்திப் பாடுகின்றார்... சிவாய நம என்ற எழுத்தைந்துக்கும் முதலாக விளங்குதலின், நமச்சிவாய என்ற திருப்பெயரைச் சிவபுராணத்தில் எடுத்த எடுப்பில் நிறுத்தி மணிவாசகர் வாழ்த்துகின்றார்" என்று உரைவேந்தர் 'நமச்சிவாய சங்கீர்த்தன லகரி' பதிகத்தின் முன்னுரையில் கூறியுள்ளார்.

இப்பதித்தில் அமைந்த ஒரு பாடல்:

"பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறும் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சம் கலைமறந் தாலும்
கணகள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவா் உள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே"

(பா.820) இ.தி.ப.291

இப்பாடலுக்கு உரைவேந்தர் தரும் விளக்கம் வருமாறு: "தன்னைப் பெற்று வளர்த்த தாயை எந்தக் குழந்தையும் மறப்பதில்லை. விலங்கினத்துள்ளும் இவ்வியல்பு சிறந்து விளங்குதலைப் "பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று வல்லதாம் தாய்நாடிக் கோடலை" (101) என்று நாலடியார் கூறுவது காண்க. தான் பெற்ற பிள்ளையைத் துறந்த தாய்மனம் படும் பாட்டை நேரிற் காண்பார்க்குத்தான் தெரியும்; "பெற்றவட்கே தெரியும் அந்த வருத்தம், பிள்ளை பெறாப் பேதை அறிவாளோ" என்பர் தாயுமானவர்.

உயிர்க்கும் உடற்கும் உள்ள தொடர்பு பிரிவரும் பெருந் தொடர்பாதலை விளக்குவாராய், "உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும், உயிரை மேவிய உடல் மறந்தாலும்" என்று உரைக்கின்றார். நோய் மிகுந்து உறுப்புக் குறைந்து, உடற்பொலிவு குன்றிய போதும் உயிர் அதனை விடாது பற்றிப் பேணுவது ஒன்றே உடலின்பால் உயிர்க்குள்ள நட்பு இத்தன்மைத்தென விளக்குகின்றது. "இழத்தொறும் காதலிக்கும் சூதே போல் துன்பம் உழத்தொறும் காதற்று உயிர்" என்று திருவள்ளுவர் உரைப்பது காண்க. உயிர் நீங்கும் காலத்து உடல்படும் வேதனையால் அதற்கு அவ்வுயிர்பால் உள்ள அன்பு இனிது புலனாகும்.

கலை, ஈண்டுக் கல்விமேல் நிற்கிறது. கற்கும் கல்வி நிலைபெறும் உடல் என்பர்; உயிரை அடைவதற்குக் கருவி மனம். மனத்தின் வாயிலாகவே கற்ற கல்வி உயிரின்கண் இடம்பெற்று, பிறவிதோறும் தொடர்கிறது; அக்கருத்துப் பற்றியே, "ஒருமைக்கண் தான் கற்றகல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து" என இசைக்கின்றார்கள். இத்தகைய கல்வி உயிரையடைதற்குக் கருவியாகிய நெஞ்சினை மறப்ப தில்லை. கல்வியால் நெஞ்சு தூய்மை பெற்று இறைவன் உறைதற்கு இடமாகிறது. "கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்" என்று சான்றோர் கூறுப. நெஞ்சமும் தான் ஒன்றியிருந்து கற்ற கலையை மறப்பதில்லை. உடல் உள்ள வரையில் உடன் இருந்து கற்றதை நினைப்பிப்பதில் மனம் பெரும்பணி புரிகிறது. இவற்றை நினைவிற் கொண்டுதான், "கற்ற நெஞ்சம் கலை மறந்தாலும்" என மறவா மாண்பை எதிர்மறை எடுத்துரைக்கின்றார். கண்கட்குப் பாதுகாப்பாய் அடிக்கடி நீர்கொண்டு துடைத்துப் பார்வையைத் தூய்மை செய்வது இமை; மனவுணர்வின் தூண்டுதலின்றியே கண்ணிமை தன் பணியைச் செய்கிறது; உறங்கும் காலம் ஒழிய எக்காலத்தும் இமைக்கும் பணியை இனிது செய்தான். அதற்கு இணை இமையே தவிர வேறில்லை. அதனால் தான் "கண்கள் நின்று இமைப்பது மறந்தாலும்" எனக் கூறுகின்றார்.

முன்னைத் தவத்தால் நல்வினை முற்றிய நல்லோரை "நற்றவத்தவர்" என்றும், அவர்கள் நெஞ்சின்கண் நமச்சிவாயம் என்ற திருப்பெயர் இடையறவின்றி நினைக்கப் படுவது பற்றி, "நற்றவத்தவர் உள்ளிருந்தோங்கும் நமச்சிவாயத்தை நான் மறவேனே" என்றும் உரைக்கின்றார்.

இதனால், உடலின் கண் மறவாமல் இயல்வன மறந்த வழியும் நமச்சிவாயம் என்ற அருட்பெயரை மறத்தல் இல்லை என்பது வற்புறுத்தியவாறு" (பக்.291-292) என்று உரைவிளக்கம் செய்கின்றார் உரைவேந்தர்.

அன்புருவாம் பரசிவம்

'பரசிவ வணக்கம்' என்னும் பகுதியில், ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற செயல்வகை அனைத்தையும் எளிதில் இனிது செய்யும் வல்லாளன் இறைவன் எனப் பரவுகின்றார் வள்ளலார். அவ்இறைவனை,

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிரொளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே
அன்புரு வாம்பர சிவமே" (பா.3269)

என ஏத்திப் போற்றுகின்றார். உரைவேந்தர் 'பரசிவம்' என்பதற்குக் கூறும் உரை வருமாறு:

"அன்பே சிவம்" என்று சான்றோர் கூறுதலால் "அன்புருவாம் பரசிவம்" என மொழிகின்றார். தத்துவ உலகில் வழங்கும் சிவமூர்த்தங்கள் பலவற்றினும் மேலாய சிவத்தைப் பரசிவம் என்கின்றனர். திண்மையும் சலியாமையும் உற்று மலைபோல் ஓங்கி உயர்ந்ததாயினும், அன்புக்கு எளிதாய் ஒரு கைப்பிடிக்குள் அடங்கும் அளவிற் சுருங்கி இன்புறுத்துவதாம் என்பார். 'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே' என்று கூறுகிறார். அரசர்க்கெல்லாம் ஒப்பற்ற தனி பேரரசாய்ப் பெருமனைக்குட் புகுந்து உலவும் பெரியவன் ஆயினும், அன்பர் அன்பாகிய எளிய சிறிய குடிசையுள்ளும் புகுந்து மகிழும் எளிமை இயல்பினன் என்றற்கு, 'அன்பெனும் குடில் புகும் அரசே' என்று உரைக்கின்றார்.

எத்தகைய வலைக்கும் அகப்படாத பெரும் பரம் பொருளாக இருப்பினும் அன்பென்னும் மெல்லிய வலைக்குள் எளிதில் அகப்படுவன் என்றற்கு 'அன்பெனும் வலைக்குட்படு பரம்பொருள்' என மொழிகின்றார்.

யாதொன்றினுள்ளும் அடங்குதல் இல்லாத பேரமுதாய் இலங்குவனாயினும் அன்பர் அன்புக் கையில் இனிது அமர்வன் என்றும், பரமாந் தன்மையால் அளப்பருங் கடலாக விளங்கினும், அன்பாகிய சிறு குடத்துள் அடங்கி இன்புறுத்துவன் என்றும் இயம்புகின்றார். அன்பு செய்யும் உயிர்க்கு உணர்வொளியாகவும் சிறுமையால் அணுத் தன்மையுறும் ஆன்மாவுக்குள் ஆன்ம சிற்சத்தியாய் அமைந்து ஞான ஒளி நல்குவதாக விளங்கும் இயல்பை, 'அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே' எனவும், 'அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே' எனவும் இசைக்கின்றார்' (தொ.8:ப.138) என்று உரை வரைந்துள்ளார் உரைவேந்தர். அருட்பெருஞ்சோதியே பரசிவம் - பரசிவமே அருட்பெருஞ்சோதி வடிவினன் என்னும் வள்ளலார் கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் இவ்வுரை அமைந்துள்ளது.

பிள்ளைச் சிறு விண்ணப்பம்

வள்ளலார் இறைவனிடத்து 'பிள்ளைச் சிறு விண்ணப்பம்', 'பிள்ளைப் பெரு விண்ணப்பம்' என இரு விண்ணப்பங்கள் வைக்கின்றார். இதற்கு முன்னுரை எழுதும்போது, ஆங்கில இலக்கியத்தையும், தேவாரத்தையும் ஒப்புநோக்கி உரை வரைகின்றார் உரைவேந்தர்:

பிள்ளைச் சிறு விண்ணப்பம் - "அஃதாவது, பிள்ளைப் பருவத்துத் துள்ளும் உள்ளத்தில் எழும் விழைவு விருப்பங்கள் சிலவற்றை எடுத்தோதி இறைவன்பால் விண்ணப்பம் செய்வது. சிறு விண்ணப்பம் என்பது சிலவாகிய விண்ணங்களின் மேல் நிற்கிறது. கிறித்துவ சமயத்து அன்பர்கள் தமது விழைவு விருப்பங்களை இறைவனிடத்தில் முறையிடுவது போல இது வடலூர் வள்ளலார் திருவுள்ளத்தில் புதிது தோன்றிய முறையீடாகும்.

ஆங்கில நாட்டு ஞானப் பெருந்தகையான வில்லியம் லா என்பவர் எழுதிய "ஏ சீரியஸ் கால்" (A Serious Call) என்ற நூற் பொருளை ஒப்புநோக்குவது இவ் விண்ணப்பத்தின் நுண்மாண்பை உணர்தற்குத் துணை செய்யும். இவ் விண்ணப்பமுறை நம்பியாரூரர் "விருந்தாய சொன்மாலை" என்று சிறப்பிக்கும் மாலை வகையில் அடங்கும்" (தொ.8. ப.290)

'தடித்தஓர் மகனைத் தந்தைஈண்டு அடித்தால்
தாய்உடன் அணைப்பள்தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன்இங்கு எனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத் தாடும்
புனிதநீ ஆதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மைஅப் பாஇனி ஆற்றேன்.' (பா.3386)

என்பது பிள்ளைச்சிறு விண்ணப்பத்தில் அமைந்த முதல் பாடல்.

இப்பாடலுக்கு உரை விளக்கம் அளிக்குமிடத்து, உலகியலில் வெளிப்படும் தாய் தந்தை இயல்புகளைச் சுட்டிக்காட்டுவதோடு, உலகுக்கெல்லாம் அம்மையப்பனாக விளங்கும் இறைவனிடம் தன்னை அணைத்திட வேண்டுகிறார் வள்ளலார் என்பதை எடுத்துக் காட்டுகிறார் உரைவேந்தர்;

"அம்மையப்பன் என்பது சிவன் திருப்பெயருள் ஒன்றாதல் பொருந்துகிறது. பண்டைச் சான்றோர், "அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றறிக" என்பது ஈண்டு நினைத்தற்குரியது. இன்னோரன்ன வழக்கு களை நினைந்தே வள்ளற் பெருமானும், 'அம்மையப்பா' எனப் பரவுகின்றார்.

என்பும் தசையும் வளமையுற வளர்ந்த மகனைத் 'தடித்த மகன்' என்பர். தடி-ஊன்தசை. உடலுள் வளர்ச்சி மிகுந்து உணர்வு குன்றியவனைத் தடித்தவன் எனவும், தடியன் எனவும் நாட்டவர் ஏசுப. அத்தகைய மகன் என்பது விளங்க 'தடித்த ஓர் மகன்' எனக் கூறுகின்றார்.

தடித்த மகன், தந்தை வெகுண்டு அடித்தற்குரிய தவறு செய்வனாதலின், காரணம் காட்டாமலே, 'மகனைத் தந்தை ஈண்டு அடித்தல்' என்றும், உயிர்க்குரிய உணர்வு நோக்கும் தந்தையினும், உடல் நலம் பேணும் தாயுள்ளம் சிறந்தமை பற்றி, 'தாய் உடன் அணைப்பள்' என்றும் முறைபட உரைக்கின்றார். தடித்த மகன் தடிப்பு மிகுதியால் தாயுள்ளம் நொந்து சிவக்கும் அளவில் தவறு செய்வது உண்மையாலும், அது பொறாது தாய் அடித்தல் இயல்பாகலானும் 'தாய்

அடித்தால்' என்று இயம்புகின்றார். மகன் தவறு செய்யின், தாய் அணைக்கத் தந்தையும், தந்தை அணைக்கத் தாயும் அடிப்பது அரிது ஆதல் பற்றி, 'அடித்தால்' என்று இயம்புகின்றார். இருவரும் மகன்பால் ஒத்த அன்புடையராதல் பற்றி, 'அணைப்பன் அணைப்பள்' என ஒரு வினையே தந்து காட்டுகின்றார். உலகியல் வாழ்வுக்கு அமைந்த தாய் தந்தையர் இயல்பு இதுவாயின், பிறவாப் பேரருள் வாழ்வுக்குரிய தாயும் தந்தையும் ஆயவன் சிவபெருமான் என்றும், அதனால் 'அவன் உலகுக்கு அம்மையப்பன்' என்றும், சான்றோர் எடுத்துப் பேசி இன்புறுதலும், இன்புறுத்தலும் செய்கின்றனர் என்பது இனிது புலப்பட, 'பேசிய தந்தையும் தாயும் நீ ஆதலால்' என்றும் இசைக்கின்றார். அடித்தல் நோய் செய்தல் மேலும், அணைத்தல் இன்பம் செய்தல் மேலும் நிற்றலின், இவ்விரண்டும் இறைவனது அருட் செயல் என்று கருதுவது தோன்ற, 'அடித்தது போதும்' என்றும் 'அணைத்திடல் வேண்டும்' என்றும் முறையிடுகின்றார்.

இதனால், பிறவிக்கு ஏதுவாகிய குற்றங்களைச் செய்தமையால் எய்திய துன்பத்தை எடுத்தோதி ஆற்றாமை கண்டு அருளாதரவு செய்க என விண்ணப்பித்தவாறாம்" (தொ.8: பக்.291-292)

இங்ஙனம் உலகியலையும், இலக்கியத்தையும் ஒப்புநோக்கிக் காட்டி உரை வரையும் உரைவேந்தரது புலமையை அறியலாம்.

இவ்வாறே 'பிள்ளைப் பெரு விண்ணப்பம்' பகுதியின் முன்னுரையிலும், வள்ளலாரது உணர்வுகளைப் புலப் படுத்தும் வகையில் உரை வரைந்துள்ளார் உரைவேந்தர். அம்முன்னுரை வருமாறு:

"அஃதாவது வடலூர் வள்ளற் பெருமானுடைய பிள்ளைமை உள்ளத்துக் கள்ளமில்லாத எண்ணங்களையும், இன்ப துன்ப உணர்வுகளையும் அச்ச அவல நினைவுகளையும், பிற தொடர்புடைய உணர்ச்சிகளையும் பெருகிய அளவில் எடுத்தோதி மனம் தூயராக விண்ணப்பிப்பதாகும், மடிக்கனம் எறிந்து வழிக்கனம் குறைப்பாரைப் போல மனத்து உணர்ச்சிகளை உமிழ்ந்து ஞான வாழ்வை எளிதாக்குவது பயன் என உணர்க" (தொ.8: ப.320).

தனிப்பெருங்கருணை

வள்ளலார் இரக்கம் மிகுந்த நெஞ்சம் உடையவர். பிறருடைய துன்பங்களைக் கண்டு கசிந்து உருகிக் கண்ணீர் சிந்தும் மென்மையான இயல்பு படைத்தவர். கருணை நிறைந்த வாழ்க்கை நடத்திய ஞானி அவர்.

‘வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோறு இரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டுஉளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேர்உறக் கண்டுஉளம் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழை களாய்நெஞ்சு
இளைத்தவா் தமைக்கண்டே இளைத்தேன்
(பா.3471)

என்று பாடியவர் வள்ளலார். *(பிள்ளைப் பெரு விண்ணப்பம் 61)*

‘எனக்கு முத்தி பெறவேண்டும் என்ற இச்சை இல்லை; அப்பனே! நான் வேண்டிக் கொள்வனவற்றை அன்பு கூர்ந்து கேட்டு அருள் செய்ய வேண்டுகிறேன்; நான் உயிர்கட்கெல்லாம் அன்பு செய்பவனாக வேண்டும்; எவ்வுலகத்தும் எத்தகைய நிலைகட்கும் எவ்விடத்திற்கும் நான் சென்று எனக்குத் தந்தையாகிய நின்னுடைய அருள் நிறைந்த புகழை எடுத்தோத வேண்டும்; நூல்களால் சொல்லப் படாத மேன்மேல் உயர்ந்த நிலைக்குரிய சுத்த சிவநெறி விளங்கி மேம்பட நின்னுடைய அருள் ஒளியைப் பரப்புதல் வேண்டும்; யான் ஏதேனும் தவறு செய்வேனாயினும் நீ பொறுத்தருளுதல் வேண்டும்; இவற்றோடு தலைவனாகிய நின்னைவிட்டுப் பிரியாத நிலைமையையும் அருள வேண்டுகிறேன்” என்று இறைவனிடம் சுத்த சன்மார்க்க வேண்டுகோள் விடுக்கின்றார் வள்ளலார் *(தொகுதி 9, ப.364)*

‘அப்பாநான் வேண்டுதல்கேட்டு அருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தை நினது அருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்

திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே.'
(பா.4079)

பேரின்பப் பெருவாழ்வு

மண்ணியல் வாழ்வின் குறிக்கோள் திருவருள் ஞானப் பேரின்பப் பெருவாழ்வு பெறற்கு உரித்ததாகலின், அது தமக்கு எய்துங்காறும் விடாப்பிடியாய் இருக்கும் தமது மனக் கொள்கையை, 'பிரியேன் என்றல்' என்னும் பதிகத்தில் பாடியுள்ளார் வள்ளலார். அப்பதிகத்தில் இடம்பெறும் ஒரு பாடல், உலக உயிர்களின் கோழைமைத் தன்மையைப் போக்கி அருள் ஒளியை நல்குமாறு வேண்டுவதாக அமைந்துள்ளது.

'வாழைஅடி வாழைஎன வந்ததிருக் கூட்ட
மரபினில்யான் ஒருவன்அன்றோ வகைஅறியேன் இந்த
ஏழைபடும் பாடுனக்குந் திருவுளச்சம் மதமோ
இதுதகுமோ இதுமுறையோ இதுதருமந் தானோ
மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்யான் உனக்கு
மகன்அலனோ நீஎனக்கு வாய்த்ததந்தை அலையோ
கோழைஉல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருள்நின் அருள்ஒளியைக் கொடுத்தருள்இப்
பொழுதே.' (பா.3803)

'வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபு' என்பதற்கு உரைவேந்தர் தரும் விளக்கம்:

"கனி ஈந்த வாழை மடியவும், அதன் அடியில் கிளைத்துத் தோன்றுகின்ற வாழை வளர்ந்து கனி நல்குவதும், அதன்பின் அதனடியில் கன்று தோன்றி முன்னையது போலக் கனி தருவதும் இயல்பாம். அதுபோல அடியார்களும் வழிவழி யாகத் தோன்றுவது மரபு. அவ் அடியார்களைப் போல யானும் தோன்றியுள்ளேன் என்பார், 'வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அன்றோ' என உரைக்கின்றார்.

அடியார்களின் தொண்டு வகை தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், நேச மார்க்கம், ஞான மார்க்கம் என நால்வகைப் படுதலின், தாம் மேற்கொண்டிருக்கும் மார்க்கம் இத்தகையது என உணர்ந்துரைக்க மாட்டாராய் 'வகையறியேன்' என மொழிகின்றார்.

சிவஞானம் இல்லாதவன் எனத் தமது பணிவு தோன்றக் கூறுவார். 'இந்த ஏழை' எனத் தம்மைக் கூறுகின்றார். சிவ பரம்பொருளாகிய உமக்குத் தொண்டுபட்ட அடியவனாகிய யான் துன்புறுவதை நீ கண்டிருப்பதும் தேவரீரது நிலைமைக்கும் தகுதிக்கும் முறைமையும் தருமமும் ஆகாது என்பாராய், 'உனக்குத் திருவுளச் சம்மதமோ, இது தகுமோ, இது முறையோ, இது தருமந் தானோ' எனக் கூறுகின்றார் (தொ.9, பக்.43-44) என்று நான்கு வகையான மார்க்கத்தை எடுத்துக் கூறுவதோடு, 'எத்தகைய துன்பங்கள் வந்து தாக்கினும் பொறுத்து உய்தற்கு ஏற்ற உடல் வன்மையும், ஞானத் திண்மையும் உண்டாக்குவது திருவருள் ஞான ஒளி ஆதலின், அதனை இப்பொழுது கொடுத்தருள்க என விண்ணப்பிக்கின்றார்" என்று வள்ளலாரின் விண்ணப்பத்தை விளக்குகிறார் உரைவேந்தர்.

வகையறிந்த வள்ளலார்

'இறைவனை அடைய நான்கு நெறிகளை சைவப் பெருமக்கள் வகுத்துரைத்தார்கள். அவை பிள்ளை நெறி, தொண்டர் நெறி, நண்பர் நெறி, அடிகள் நெறி என்பன ஆகும்.

பிள்ளை நெறியில் இறையருளைப் பெற்றவர் திருஞானசம்பந்தர். தொண்டு நெறியில் இறையருளைப் பெற்றவர் திருநாவுக்கரசர். நண்பர் நெறியில் இறையருளைப் பெற்றவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அடிகள் நெறியில் இறையருளைப் பெற்றவர் மாணிக்கவாசகர். இந்நான்கு நெறிகளிலும் தம்மை ஆட்கொண்டவர் இறைவன் என்று வள்ளலார் கூறுகின்றார்.

'அடியனாக்கி நேயனாக்கி பிள்ளையாக்கியே
அடிகளாக்கி கண்டு கொண்டாய் அவலம் நீக்கியே'

என்று தன்னை ஆட்கொண்டதை வள்ளலார் கூறுகின்றார். இந்த செய்தியை அடிப்படையாகக் கொண்டு சில அறிஞர்கள் வள்ளலார் எந்த நெறியைப் பின்பற்றுகிறாரென்று முடிவு செய்ய முயல்கின்றார்கள். அதற்குச் சான்றாக,

'வாழையடி வாழையென வந்ததிருக் கூட்டமரபில்
யான்ஒரு வனன்றோ; வகையறியேன்'

என்ற வள்ளலாருடைய சொற்களை அடிப்படையாகக் கொண்டு முடிவுக்கு வருகிறார்கள். ஆனால் வள்ளலார் பாடியது, அந்தப்பொருளில் அல்ல என்பது ஆழமாகச் சிந்தித்தால் புரியும். உலகத்தில் தோன்றிய தத்துவ ஞானிகள் தத்துவங்களைக் கூறிச் சென்றார்களே தவிர அவற்றை நடைமுறைப்படுத்தும் நெறிகளையோ அவற்றிற்குரிய சாதனங்களையோ உலகத்துக்குத் தந்து சென்றவர்கள் இல்லை. அதை அறிந்து கொள்ள வேண்டும் என்னும் ஆவலில் தான் வகையறியேன் என்ற சொல்லில் கூறித் தனக்குத் தான் கண்ட ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை என்னும் தத்துவத்தை நடைமுறைப்படுத்தும் வகைதனை அறியேன். அதனை எனக்கு அறிவித்தருள்க என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறார்" (டாக்டர் சோ.சத்தியசீலன், "வகையறிந்த வள்ளலார்", அவிழ்க்கப்படாத முடிச்சுகள், பக்.49-50) என்று அறிஞர் சோ.சத்தியசீலன் கூறும் கருத்துக்கள் சிந்திக்கத் தக்கவையாகும்.

வள்ளலாரின் சிறந்த கொள்கைகள்

1. எல்லா உயிர்களிடத்திலும் இறைவன் இருத்தலை உணர்ந்து வழிபட வேண்டும்.
2. உயிர் இரக்கம் என்னும் சீவகாருண்யமே சமய வாழ்வின் அடிப்படை
3. ஆன்மநேய ஒருமைப்பாடே - எல்லா உயிர்களும் ஒன்று என்னும் உண்மையே- சமய நெறியின் தெளிவு
4. வள்ளலாரின் கருத்தில் 'எந்த வகையான வேறுபாடும் கருதாமல், எல்லா உயிரையும் தம் உயிர் போல் எண்ணி, உள்ளத்தில் ஒத்த உணர்வு உடையவர் யாரோ, அவர்களுடைய உள்ளமே கடவுள் நடம் புரியும் கோயில்.
5. மரணமிலாப் பெருவாழ்வு வாழலாம்

இவையே வள்ளலார் மக்களுக்கு உணர்த்த விரும்பிய சிறந்த கொள்கைகள்.

'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துஉரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர்அவர் உளந்தான் சுத்த

சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம்என நான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்குஏவல் புரிந்திட என்
சிந்தைமிக விழைந்த தாலோ' (தொ.10: பா.5297)

இப்பாடலுக்கு உரைவேந்தர் தரும் விளக்கமாவது:

"உயிர்கள் யாவும் உணரும் தன்மைத்தாம் என்ற வகையில் வேற்றுமை இன்றியும், உடம்பால் பேதமுற்றும் இருக்கின்றனவாதலின், உடல்வழித் தோன்று பேதத்தை நோக்காமல் உயிராம் தன்மையில் யாவும் சமமே எனக் கருதி, அவ்வகையில் உயிராகிய தாமும் அவையும் ஒரு தன்மையை என உணர்ந்தாலன்றி அவற்றின்பால் அருள்புரியும் மனப்பான்மை உண்டாகாது ஆதலால், "எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி உள்ளே ஒத்து" என்றும், எவ்வுயிரும் சமம் என்ற உணர்வு தோன்றிய வழி அவைகட்கு வேண்டும் உதவியினைப் புரிவதற்கு உள்ளம் இசைதலால் அதனைச் செய்தற்கு உற்ற உரிமையும் உடன் தோன்றுதலின், "உரிமை உடையவராய் உவக்கின்றார்" என்றும் உரைக்கின்றார். உயிர்கள் அனைத்தும் சமம் என நினைத்த வழி, நினைக்கும் உள்ளம் ஞானமய மாதலின், 'அவர் உளந்தான் சுத்த சித்துருவாய்' என்றும், அந்த ஞானத் திருவுள்ளமே சிவஞான சிற்சபையாய்த் திகழ்தலின், அங்கே சிவபெருமான் ஞானநடம் புரியும் இடம் என நான் தெரிந்தேன்' என்றும் இயம்புகின்றார். வித்தகர் ஞானவான்கள். அவர்கட்குப் பணி செய்தல் சிவத்துக்கே புரியும் திருப்பணி யாதலால் அதனைச் செய்தற்கு என் உள்ளம் ஆர்வமுறுகின்றது என்பார், 'அந்த வித்தகர் தம் அடிக்கு ஏவல் புரிந்திட என் சிந்தை மிக விழைந்த தாலோ' என்று விளம்புகின்றார் (தொ.ப10, பக்.636-637) என்று அந்தாதி நயம் கூறுவது போலப் பாடலுக்கு உரைவிளக்கம் அளிக்கின்றார் உரைவேந்தர்.

மரணமிலாப் பெருவாழ்வு

வள்ளலாரின் முக்கியமான கொள்கைகளில் ஒன்று மரணமிலாப் பெருவாழ்வு. "மரணம் என்பது சாதல், ஒருவருடைய வாழ்வில் அஃது எப்போது வரும் என்பது தெரியாமையால், நல்ல இனிய காரியங்களைச் செய்வதற்குச் சிந்தனையாளர்களை அவலமுறச் செய்வது இதற்கு இயல்பு.

இத்தகைய குறையை உடையதனால் பெரியோர் தமது பெருவாழ்வு சிதறிப் போவது கருதி இஃது இல்லாத வாழ்வே பெருவாழ்வு என்று கூறுகின்றார். மரண பயம் இல்லாத வாழ்வு திருவருள் ஞான ஒழுக்கங்களை மேற் கொள்பவர்க்கு எய்தும் என்பது பற்றி வடலூர் வள்ளல் இதனை சிறப்பித்து எடுத்துரைக்கின்றார்' என்று மரண மிலாப் பெருவாழ்வை விளக்கி முன்னுரை வரைந்துள்ளார் உரைவேந்தர் (தொ.10, ப.824).

இப்பகுதியில் வரும் பாட்டுக்கள் முற்ற உணர்ந்து பலகாலும் பயின்று ஓதுதற்கு உரியவை என்பது விளங்க, அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன.

'நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து
நெகிழ்ந்து அன்பே
நிறைந்துநிறைந்து ஊற்றெழுங்கண்ணீர் அதனால் உடம்பு
நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்துவனைந்து ஏத்துதும்நாம் வம்மின்உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியம் சொல் கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே'
(5576)

'உலகியல் வாழ்வில் இருக்கின்ற நன்மக்களே! பலகாலும் நினைந்து, பல வகையாலும் உணர்ந்து, மனம் நெகிழ்ந்து, அன்பு மிக நிறைந்து அதனால் உள்ளத்திலிருந்து ஊற்றுப் போல் பெருகும் கண்ணீரால் உடம்பு நனைந்து, அருளார் அமுதமே, நல்ல அருட் செல்வமே; ஞான நடம் புரிகின்ற அரசர் பெருமானே, என்னுடைய உரிமை நாயகனே என்று சொல் மாலைகளைத் தொகுத்து நாம் வழிபடுவதற்கு வருவீர்களாக; அவ்வழிபாட்டால் நாம் மரணபயம் இல்லாத பெருமை பொருந்திய வாழ்வில் இன்பமுற வாழலாம்; நான் இதனை இல்லது புனைந்து உரைக்கின்றேன் இல்லை; பொய் சொல்லவுமில்லை; சத்தியமாகச் சொல்லுகின்றேன்; பொன் வேய்ந்த சபையிலுள்ள ஞான சபையில் சிவ பெருமான் எழுந்தருளும் தருணம் இதுவே' என்று புகல்கின்றார் வள்ளலார் என்று உரை வரைந்துள்ளார் உரைவேந்தர்.

இங்ஙனம் 'உரைப்பணிகளின் சிகரம் - திருவருட்பா உரை என்று சொல்லுமளவுக்குப் பணியிலிருந்து கொண்டே 5818 பாடல்களுக்கு உரைகண்டவர் உரைவேந்தர்' என்று உரைவேந்தரைப் போற்றுகிறார் அறிஞர் ச.சாம்பசிவனார். (உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, ப.123).

'கடவுட் பற்றும், சைவத் தெளிவும், பொதுநோக்கும் பொலிந்த நம் உரைவேந்தர் முதுமை மறப்பிக்கும் இளைய வீறு பெற்று இராமலிங்க வள்ளலாரின் திருவருட்பா முழுமைக்கும் பேருரை கண்ட பெருஞ்செல்வம். தமிழ்ப் பேழைக்குத் தாங்கொணாச் செல்வமாகும். நூலுரை, திறனுரை, பொழிவுரை என்ற முவ்வரம்பாலும் தமிழ்க் கரையைத் திண்ணிதாக்கிய உரைவேந்தர் ஔவை துரைசாமி நெடும்புகழ் என்றும் நிலவுவதாக!' என்று உரைவேந்தரின் திருவருட்பாப் பணியை வாழ்த்தியுரைக் கின்றார் மூதறிஞர் வ.சுப.மாணிக்கம் ('பேருரை கண்ட பெருஞ்செல்வம்', உரைவேந்தருக்கு ஒரு நூற்றாண்டு, ப.61).

"உரைவேந்தர் ஔவை துரைசாமி அவர்களின் அரும்பெரும் புலமைத் திறத்தை அளவிட்டு உரைக்க முடியாது. அரிய உரை நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்ட பெரியவாச்சான் பிள்ளையை வைணவ உலகம் உரைவேந்தர் என்று போற்றியதோடு நான்கு அரியணைகளை அவர்களுக்கு வழங்கியது என்பார்கள்... நான்கு அரியணைகளை வழங்கி அவரை அரியணை மேல் ஏற்றி, உரைவேந்தர், வியாக்கியான சக்கரவர்த்தி என்று வைணவ உலகம் பாராட்டியது.

அந்த வகையில் சங்க இலக்கியங்களுக்கு உரை கண்டதற்கு ஓர் அரியணையும், சைவ சித்தாந்த நூல்களுக்கு உரை விளக்கம் வழங்கியதற்கு இரண்டாம் அரியணையும், சமுதாய வரலாற்றுக் கல்வெட்டுப் பொருண்மைகளுக்கு விளக்கம் கூறியதற்கு மூன்றாம் அரியணையும், சன்மார்க்க ஞான வேதமாகிய திருவருட்பாவுக்குப் பேருரை எழுதியதற்கு நான்காவது அரியணையும் என நான்கு அரியணையில் ஏற்றி, உரைவேந்தர் பேருரை விளக்கப் பெரும்புலவர் என்று தமிழ் உலகம் பெரியவாச்சான் பிள்ளையை வைணவ உலகம் போற்றியது போலவே ஔவை அவர்களையும் நாம்

போற்றலாம்" என்று பொறியாளர் திலகம் கெ.பக்த வத்சலம் கூறுவது (உரைவேந்தருக்கு ஒரு நூற்றாண்டு, ப.60) முற்றிலும் பொருந்துவதாகும்.

"எழுத்துலகில் நான்கு நூல்களுக்குத் தனித்தனியான சிறப்புக்கள் உண்டு. முதல் சிறப்பு பகவத் கீதைக்கு; அது மனிதன் கேட்க, கடவுள் சொன்னது. இரண்டாவது சிறப்பு, மாணிக்கவாசகரின் திருவாசகத்திற்கு; இது கடவுள் கேட்க மனிதன் சொன்னது. மூன்றாவது சிறப்பு, திருவள்ளுவரின் திருக்குறளுக்கு; அது மனிதன் கேட்க, மனிதன் சொன்னது. நான்காவது சிறப்பு வள்லாரின் அருட்பாவிற்கு; இது மனிதரிலும் அருளாளர்கள் கேட்க, அருளாளர் கூறியது. இப்பண்பு அருட்பாவிற்குப் பெருஞ்சிறப்பைத் தருவதாகும் என்பர் அறிஞர்" (இரா.மோகன் & நிர்மலா மோகன், 'ஆன்மநேய ஒருமைப்பாடு கண்ட வள்ளலார்', நல்லவை நாற்பது, பக்.16-17).

8. ‘உரைசாமிப் பிள்ளை’

“தமிழில் உரை மரபு என்பது ஆழமும் அகலமும் கொண்ட தெளிந்த நீரோடையாய்ப் பெருகி ஓடுகிறது.”

*-தி.சு.நடராசன்**

‘அவ்வை துரைசாமிப் பிள்ளை அருந்தமிழின்
செவ்வை உரைசாமிப் பிள்ளையன்றோஇவ்வையம்
எக்களிக்கத் தந்தான் இருந்தமிழ் நூறுரைகள்
சிக்கலின்றித் தந்தான் தெளிந்து’

எனப் பாவேந்தர் பாரதிதாசன், உரைவேந்தர் ஔவை துரைசாமிப் பிள்ளைக்குச் சூட்டியுள்ள புகழாரம் முற்றிலும் உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

ஆராய்ச்சி, உரை, சுருக்கம், கட்டுரை, வரலாறு, இலக்கணம், நாடகம், மொழிபெயர்ப்பு என்றாற் போல் பல்துறைகளைச் சார்ந்த முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதிக் குவித்தவர் உரைவேந்தர் ஔவை துரைசாமிப் பிள்ளை. ‘சித்தாந்த கலாநிதி’, ‘தமிழ்ச் செம்மல்’, ‘நா வேந்தர்’, எனப் பல்வேறு பட்டங்களையும் பெயர்களையும் விருதுகளையும் பெற்றிருந்தாலும் ஔவை துரைசாமிப் பிள்ளை என்றதுமே எல்லோருடைய நினைவுக்கும் மோனையைப் போல் ஓடோடி வருவது ‘உரை வேந்தர்’ என்னும் சிறப்புப் பெயரே ஆகும். காரணம், சங்க இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், சைவ சித்தாந்தம் எனப் பல வகையான இலக்கியங்களுக்கும் சித்தாந்த நூல்களுக்கும் அவர் உரை கண்டமையே எனலாம். “அல்லென்றும் பகலென்றும் பாராமல், ஊணும் உறக்கமும் நினையாமல் பிள்ளையைப் போலத் தமிழுக்காகப் பேயுழைப்பு உழைத்தவர்களை நான் கண்டதில்லை. ஒய்வு இன்னதென்று அறியாத ஓர் அற்புதப் பிறவி அவர்... அன்று

* ‘உரையாசிரியர்கள்’, புதிய தமிழ் இலக்கிய வரலாறு, தொகுதி II. ப.457.

அவர் உழைத்த அவ்வுழைப்பே பின்னர் அவரைப் பண்டை உரையாசிரியர்கள் வரிசையில், அவர்களோடு சரியாசனத்தில் ஏற்றி, 'உரைவேந்தர்' என்று புலவருலகம் புகழ் கூறும் உயர்நிலையை எய்துவித்தது" (உரைவேந்தருக்கு ஒரு நூற்றாண்டு, ப.20) என ஔவை அவர்களின் தலைமாணவர் கோமான் ம.வி.இராகவன் கூறுவது மனங்கொளத் தக்கது.

ஔவை துரைசாமிப் பிள்ளை முதன்முதலாக உரை எழுதி வெளியிட்டது திருஞானசம்பந்தர் அருளிய திருவோத்தூர் தேவாரத் திருப்பதிகத்திற்கு ஆகும். அதனைத் தொடர்ந்து அவரது உரை காணும் முயற்சி வளர்மதி போல 'ஐங்குறுநூறு', 'பதிற்றுப்பத்து', 'புறநானூறு', 'மணிமேகலை', 'நற்றிணை' என வளர்ந்து, வள்ளற் பெருமானின் திருவருட்பா நூலுக்குப் பத்துத் தொகுதிகளில் விரிவுரை வரைவதில் நிறைவு பெற்றது. இடைப்பட்ட காலத்தில் ஞானாமிர்தம், சிவஞான போதம், யசோதர காவியம், தமிழ் நாவலர் சரிதை முதலான சித்தாந்த நூல்களுக்கும் பிறவற்றிற்கும் ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்கள் உரை எழுதியமை குறிப்பிடத்தக்கது.

உரைவேந்தர் ஔவை துரைசாமிப் பிள்ளை உரை எழுதும் பாங்கு தனித்தன்மை வாய்ந்தது. இக்கால அறிவியல் கருத்துக்களின் அடிப்படையில் உரை வரைவதும், களப்பணி மேற்கொண்டு கல்வெட்டுச் செய்திகளையும் வரலாற்றுக் குறிப்புக்களையும் ஆவணங்களையும் பயன்படுத்திக் கொண்டு மெய்ப்பொருள் காண்பதும் உரையாசிரியர் என்ற முறையில் ஔவை துரைசாமிப் பிள்ளையிடம் சிறந்து விளங்கிய நெறிகள் ஆகும்.

"தமிழ் இலக்கிய வரலாற்றில் நான்கு சங்கத் தொகை நூல்கட்கு உரை கண்டவர் என்ற தனிப்பெருமையர் மூதறிஞர் ஔவை துரைசாமி ஆவார். உரை எழுதுவதற்கு முன், ஏடுகள் தேடி மூலபாடம் தேர்ந்து தெளிந்து வரம்பு செய்து கோடல் இவர்தம் உரையொழுங்காகும். இவரது உரை விளக்கங்களில் இந்நூற்றாண்டின் மரபியல் விலங்கியல் தழுவி நுட்பமாக விளக்கிய உரைத்திறனைக் காண்கின்றோம்" (உரைவேந்தருக்கு ஒரு நூற்றாண்டு, ப.61) என்னும் மூதறிஞர் வ.சுப.மாணிக்கனாரின் பாராட்டு, உரைவேந்தர் ஔவை துரைசாமிப் பிள்ளையின் உரை மாண்பினை என்றென்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் தகுதியுரை ஆகும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அண்மை வெளியீடுகள்

	ரூ. பை.
தமிழ் மொழி வரலாறு I	150.00
தமிழ் மொழி வரலாறு II	120.00
தமிழர் வரலாறு – பாகம் 1	260.00
தமிழர் வரலாறு – பாகம் 2	270.00
தமிழ் வரலாறு	240.00
ஆத்திசூடி (அரபு மொழிபெயர்ப்பு)	130.00
பாரதிதாசன் பாடல்கள் (அரபு மொழிபெயர்ப்பு)	260.00
பாரதியார் பாடல்கள் (அரபு மொழிபெயர்ப்பு)	350.00
திருக்குறள் (அரபு மொழிபெயர்ப்பு)	300.00
திருக்குறள் (கொரிய மொழிபெயர்ப்பு)	350.00
குறுந்தொகை மூலமும் தி.சௌரிப்பெருமாள் அரங்கனார் புத்துரையும்	200.00
சரசோதிமாலை – பாகம் 1	80.00
சரசோதிமாலை – பாகம் 2	140.00
பெருந்தலைவர் காமராசரின் மக்கள் பணியும் மேலாண்மையும்	115.00
திருமாற்பேறு திருத்தல வரலாறு	65.00
தமிழக வேளிர்: வரலாறும் ஆய்வும்	140.00
எல்லீசரின் ஆங்கில மொழிபெயர்ப்புகள்	210.00
ஊன் உடம்பு ஆலயம் (திருமந்திரம்)	250.00
திருமந்திரத்தில் மருத்துவம்	200.00
திருமந்திரமும் வாழ்வியலும்	200.00
திருமந்திரத்தில் அட்டாங்கயோகம்	120.00
தமிழ் தமிழ் – அகராதி	1,250.00
History of Tamil Nadu	200.00
Thiruvalluvar and Buddha for Better Life	80.00
Universal Wisdom in Thirukkural	80.00
Tamil Culture *1 to 12 Volumes*	3,200.00

வெ.எண். 978
உரைவேந்தர் ஔவை துரைசாமி
விலை ரூ. 100/-